Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම් KANNOTTAM

வெளியீடு-39 15 ஆனி JUNE 2007 விலை:- 10.00

தியாகத்தின்
தளத்திலேயே
மகத்தான
மனித வாழ்வு
கட்டியெழுப்பப்
படுகிறது.
ஏடறிந்த
மனித குல
வரலாறும்
அதுதான்

# 17வது தியாகிகள் தினம்

## தோழர் நாபா எம் நினைவுகளில்

தோழர் நாபா தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தனித்துவமான மாற்றுப் பாதை ஒன்றை வகுத்தவர். வெகுஜன இயக்கமொன்றை தமிழ் சமூகத்தினுள் கட்டி எழுப்புவது, சக சமூகங்களுடன் ஐக்கியம், சர்வதேச ஒடுக்கப்பட்ட தேசங்களுடன் நட்புறவு, சகல விதமான சமூக ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை என்று செயற்பட்டவர்.

இயக்கத்தின் பொருளாதார வறுமை, பசி பட்டினிக்கு மத்தியில் நம்பிக்கை ஒன்றையே அடிநாதமாகக் கொண்டு செயற்பட்டவர். ஈழமக்களின் பிரச்சனைகளை பல்வேறு தளங்களில எடுத்துச் சென்றவர். முற்போக்கு ஆதரவுத்தளமொன்றை நிறுவியவர். அதற்கு தனக்கு கிடைத்த வளங்களை எல்லாம் பாவித்தவர். ஈழப்போராட்டதில் வெவ்வேறு கருத்துக் கொண்டவர்களிடையே கருத்துப் போராட்டமும் நட்புறவும் எனச்செயற்பட்டவர். ஐக்கியமுன்னணி ஒன்றை கட்டி எழுப்புவதில் அவர் இடையறாது முயன்றவர்.

இயக்கத்தின் வர்க்க இயல்பு பாட்டாளிவர்க்க குணாம்சம் கொண்டதாக இருக்கவேண்டும என்று கருதிச்செயற்பட்டவர். சமூகத்தில் அடிமட்டதில் இருந்து வந்தவர்களின் அங்கத்துவம் ஆதரிகப்படவேண்டும் என்று எப்பொதும் கருதியிருந்தவர்.

தோழர் நபாவின் பெயர் ஈழப்போராட்டத்தில் முற்போக்கு அணியின் குறியீடாக அமைந்திருந்தது. தேசிய விடுதலைப்போராட்டத்தில் சமூகத்தின அடித்தட்டு மக்களை பிரதான பிரிவினராக அணிதிரட்டுவதில் அவர் பேரார்வம் கொண்டிருந்தார். மலையக மக்கள் இலங்கையின் சமூகமாற்றத்தில் தீர்மானகரமான பாத்திரமொன்றை வகிக்க முடியும் என்று அவர் திடமாக நம்பினார்.

ஸ்ரீமா - சாஸ்திரி, இந்திரா- ஸ்ரீமா ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்குப் புலம்பெயர்ந்த மலையக மக்களுடன் அவர் உறவைப் பேணினார். மலையகத்திலும் மலையகப்பாட்டாளிகள் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார். சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர எண்ணம் கொண்ட புத்திஜீவிகள், தொழிற்சங்கவாதிகள் பலரையும் உள்ளடக்கியதாக மாற்றுக்குழுவொன்றை நிறுவினார்.

இந்தியாவின் இடதுசாரி இயக்கங்களின் குறப்பாக தமிழகத்தில் சாதாரண தோழர்கள் மட்டத்திலிருந்து தலைமைத் தோழர்கள் வரை உறவைப் பேணினார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்த சமூகப்பிரக்ஞை உள்ள பிரமுகர்களுடன், முதுபெரும் காங்கிரஸ் காரர்களுடன், சுதந்திரப் போராட்டத் தியாகிகளுடன், இலக்கியவாதிகளுடன், தொழிற்சங்கங்களுடன் சிறந்த பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

தவிர பாலஸ்தீன விடுதலைக்கான பிரபல முன்னணியினர் அதன் மாணவர் அமைப்பினருடன் இடையறாத உறவுகளைப் பேணியதோடு அவர்களின் போராட்டக் கருத்தரங்குகள் நிகழ்சிகளுக்கும் தோழர்களை அனுப்பி வைக்கத் தவறுவதில்லை.

தமிழகத்தில் நீண்ட தூரப் பயணங்கள் மேற்கொள்ளும்போது அங்கங்கே இறங்கி நண்பர்களை தோழர்களை சந்தித்துச் செல்வார்.



இலங்கையில் தோழர்களுக்குப் பயிற்சிப்பாசறைகளை துன்புறும் ஒடுக்கப்படும் மக்கள் வாழும் பகுதிகளிலேயே அவர் ஏற்பாடு செய்தார்.

சகோதரப்படுகொலை தன்னை தெளிவாக எமது சமூகத்தில் அறிமுகம் செய்த போது அதனை முதலாவ

தொடர்ச்சி 02ம் பக்கம்

# ஜூன் 14 தோழர் றொபேட் 4 வது நினைவு நாள்

தோழர் றொபேட் அவர்கள் மறைந்து 4 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. தேசியவிடுதலை சமூகமாற்றம் ஆகிய உயரிய இலட்சியங்களுக்காக தன்னை போராட்டத்தில் அர்ப்பணித்த தோழர் றொபேட்டின் வரலாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரலாற்றின் முக்கியமான ஒரு அங்கமாகும். அத்தோடு தமிழ் சமூகத்தில் ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் அங்கமுமாகும்.



ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் வளர்ச்சிக்காக பாரிய பங்களிப்பை வழங்கிய கும்பகோணம் ஸ்டாலின் அண்ணை அவரது மனைவியுடன் தோழர் றொபேட்

இந்த மண்ணில் 45 ஆண்டுகளே உயிர் வாழக்கிடைத்த அவகாசத்தில் அவர் 25 ஆண்டுகளை சமூகத்திற்காக அர்ப்பணித்திருந்தார்.

அவர் சமூக அரசியல் பிரவேசத்தை மேற்கொள்வதற்கு முன்னரே பெருமளவு நண்பர்கள் வாய்க்கப்பெற்றவராகவும், கவித்துவ உணர்வு கொண்டவராகவும், சர்வதேச உள்ளூர் இலக்கியங்களுடன் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டவராகவும் காணப்பட்டார்.

சாவகச்சேரி நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் றொபேட் குறிப்பாகத் தென்மராட்சி முழுவதும் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் அணிதிரட்டலை மேற்கொண்டிருந்தார். சாதி ரீதியாகவும் வர்க்கரீதியாவும் ஒடுக்கப்பட்ட விவசாயிகள், சிறுதொழிலகங்களின் தொழிலாளர்கள், பெண்கள், இளைஞர்கள் என பலதிறத்தாரையும் உள்வாங்கி பரந்த வெகுஜன தளம் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப் ஐ மிகவேகமாகவே உருவாக்கினர். அவருடைய பாலிய நண்பர்களாக இருந்து ஈ.பி.ஆர்.எல்.எப்பில் இணைந்து கொண்ட தோழர்களுடன் மக்களை அணிதிரட்டும் பணியை வேகமாக முன்னெடுத்தார்.

இடதுசாரிக்கட்சிகள் அவற்றின் வெகுஜன அமைப்புக்களின் அங்கத்தவர்களிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் வரை அவரைச் செவிமடுத்தனர் மூலை முடுக்கெல்லாம் கருத்தரங்குகள் வெகுஜன அணிகளை உருவாக்குதல் என பணி விறுவிறுப்பாகியது. பாடசாலை நண்பர்கள், வேறு அறிமுகமாகியோர் என அவரது பணி யாழ்குடாநட்டில் பரந்தது.

தோழர் நாபா அவர்களின் நேரடி வழிநடத்தலில் யாழ் செம்மண் பிரதேச கூலிவிவசாயிகளுடன் இணைந்து அவர்களின் அன்றாடப்பணிகளில் ஈடுபடுதல், மக்கள் விடுதலைப்படை பொன்றை கட்டுதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டார்.



தமிழகத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவரும் கடந்த 19.05.2007 காலமானவருமான தோழர் வள்ளிநாயகத்துடன் சென்னை ஈழமக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தில் (குழந்தையுடன் நிற்பவர்)

அவருடன் வேறுபல தோழர்களும் இப்பணியில் ஈடுபட்டிருந்தனர். மக்களின் இன்பதுன்பங்களுடன் அவர்களின் அன்றாட வாழ்வுடன் இணைதலே மக்கள் விடுதலைப்படையைக் கட்டுவதற்கான தோழர் நாபாவின் முதலாவது பாடமாக இருந்தது.

மட்டக்களப்பில் 1982இல் பெருவெள்ளம் ஏற்பட்டபோது இரண்டாவது தடவையாக யாழிலிருந்து நிவாரணப்பொருட்களுடன் அவரும் சகதோழர்களும் மட்டக்களப்பிற்கு சென்றனர். சகல பிரதேசங்களின் மக்களுடன் பரிச்சயம் ஏற்படுத்துவதற்கான செயற்பாட்டின் அங்கமாக அது அமைந்திருந்தது.

அவர் தனது இறுதி நாள்வரை எத்தகைய நெருகடிகள் நிலவினும் வடக்கு-கிழக்கின் சகல பகுதிகளுக்கும் சென்று தோழர்களைச் சந்தித்து வருவார். 1985இல் அவர் இராணுவத்தால் கைது செய்யப்பட்டபோது அவருடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த தோழர் குமார் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் மரணித்து விட்டார். ஆனால் தோழர் றொபேட் கொடிய சித்திரவதைகள் மத்தியிலும் உறுதியாக செயறபட்டார்.

படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போதும் சரி வெலிக்கடையில் அவர் தடுத்

தொடர்ச்சி 03ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டம்



# தியாகிகள் தினம்

கடந்த கால்நூற்றாண்டுகளில் தேசியவிடுதலை, சமூக மறுமலச்சி ஜனநாயகம், மனித உரிமைகளுக்காகப் போராடி மரணித்த தோழர்கள், போராட்டக்காரர்கள், பொதுமக்கள் ஆகியோரை நினைவு கூரும் தினமாகவே ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி- பத்மநபா தியாகிகள் தினத்தை அனுட்டித்து வருகிறது.

வாழ்வில் இன்புற்றிருப்பதற்கான சந்தர்ப்பங்களை எல்லாம் துறந்து தாம் சர்ந்த சமூகத்தின் விடிவிற்காக அகாலமாக தமது உயிரை அர்ப்பணித்தவர்கள் மகத்தான மனிதர்கள். இத்தகைய மனிதர்களின் அர்ப்பணிப்பில் தான் உலகமானிட வரலாறு செழிப்புற்று வந்திருக்கிறது. மானிடவாழ்வு தர்மமுடையதாகவும், நீதியுடையதாகவும் மாறுவதற்காக மனிதர்கள் வரலாறு முழுவதும் போராடி வந்திருக்கிறார்கள்.

இத்தகைய போராட்டங்களினூடாகத்தான் தொழிலாளர் உரிமைகள், மனித உரிமைகள் ஜனநாயக அரசியல் கோட்பாடுகள் தீண்டாமைக்கெதிரான அரசியல் கோட்பாடுகள் பால்சமத்துவக் கோட்பாடுகள் சிறுவர் உரிமைக்கோட்பாடுக்ள காலனித்து வத்திற்கெதிரான கருத்துருக்கள் உருவாகின. அவை மேலும் மேலும் செம்மையுற்று வருகின்றன. காட்டுமிராண்டித் தனத்திற்கும் நாகரிகத்திற்கும் பாசிசத்திற்கும் ஜனநாயகத்திற்கு மிடையிலான வேறுபாடுகள் இந்த அற்புதமான மனிதர்களால் நிலை நிறுத்தப்பட்டன.

மனிதகுலத்தின் சுதந்திரத்திற்கு சவால் விட்ட அரசியல் முறைமைகள் சமூக கட்டமைப்புக்கள் மாபெரும் மக்கள் எழுச்சிகளால் தூக்கியெறியப்பட்டன. காலனி ஆதிக்கம், வர்க்க ஒடுக்குமுறை நிறவெறி தேசிய இனங்கள் மீதான ஒடுக்குமுறைகளுக் கெதிராகவும் மதவாதாம் தீண்டாமை போன்ற அநீதிகளுகளுக்கெதிராகவும் மாபெரும் மக்களியக்கங்கள் உருப்பெற்றன. இவை ஒவ்வொன்றிற்குமிடையே பெரும் தடைமதில் சுவர்களை எழுப்பி விடமுடியாது.

இன்று பாசிசம் என்பது உலகினால் வெறுத்தொதுக்கப்படும் மனித குல விரோதச்செயற்பாடாகும்.

இதன்குரூரத்தை இன்றும் உணாத்திக் கொண்டிருப்பவர்கள் இதன் கொடுமையால் கொல்லப்பட்ட லட்சோபலட்சம் மக்களும் இதற்கெதிராகபோடி மறைந்தவர்களுமே.

அந்த வகையில் இலங்கையில் இன ரீதியான பாரபட்சங்களுக்கெதிராகவும் ஜனநாயகத்திற்காவும் போராடி மறைந்த எமது தோழர்களை, போராட்டக்காரார்களை, பொதுமக்களை நினைவு கூருகிறோம் இவர்கள் தாம்கொண்ட மாபெரும் மனிதகுல லட்சியங்களுக்காக தமது உயிரை தியாகம் செய்திருக்கிறார்கள் இவர்களின் தியாகத்தை என்றென்றும் நினைவுகூருவதில் தான் மனித குலத்தின் தார்மீக வலு நிலைபெறுகிறது.

மனித குலத்தின் செழுமை மிகு இலட்சியங்களை உள்வாங்கிய ஈ.பி.ஆர்.எல்.எப் அதன் வரலாற்றில் ஆயிரக்கணக்கான தோழர்களையும் ஆதரவாளர்களையும் இழந்து நிற்கிறது.

இதேபோல் பல்லாயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் பொதுமக்கள் மனித குலத்தின் எழிலார்ந்த வாழ்விற்கு ஏங்கியதற்காக கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களின் தியாகங்களை அர்த்தமுள்ளதாக்குவதானால் எமது மக்கள் சுதந்திரமாகவும், சுயமரியாதை கௌரவத்துடனும் ஐக்கியமாகவும், சமாதானமாகவும், தம் பிரதேசங்களில் பாதுகாப்பாக வாழ்வதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்படவேண்டும். தற்போதைய அன்றாட மரணமும் வாழ்வும் என்ற நிலைக்கு நிரந்தர முடிவு காணப்பட வேண்டும்.

இதற்கான செயற்பாட்டு உறுதிமொழிகளை இந்த தியாகிகள் தினத்தில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

தியாகிகளின் கனவுகளை யதார்த்தமாக்குவோம் தியாகிகள் நினைவுகள் நீடூழி வாழ்க.

# 17வது தியாகிகள்...........

01ம் பக்கத் தொடர்ச்சி

தாக கண்டிக்கும் மனிதராக தோழர் பத்மநபா நின்றிருந்தார். யாழ் சித்திரா அச்சக வாசலில் புளொட்மைப்பின் புதியபாதை பத்திரிகையின் ஆசிரியர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டபோது சகோதரப்படுகொலையின் பாரதூரத் தனமையைச் சுட்டிக்காட்டி பிரசுரங்களை வெளியிட்டார். இலங்கை நிலவரங்க ளை தமிழகத்தல் எடுத்துரைப்பதற்காக ஈழச்செய்திகள் என்ற பிரசுரத்தை மா தாந்தம் வெளியிட்டார்.

மிகவும் அமைதியாக தணிந்த குரலில் ஆணித்தரமாக அவர் தனது கருத்துக்களை முன்வைப்பார்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் டிப்படையில் அதிகாரப்பகிர்வினூடாக தமிழ்மக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதில் பாதுகாப்பதில் அவர் தீர்க் கதரிசனமான, உறுதியான முடிவுகளை செயலாளர் நாயகம் என்ற ரீதியில் எடுத்திருந்தவர்.

அவர் சிதைவுகள், அழிவுகளிலி ருந்து புத்தாக்கம் செய்யும் ஆற்றல் கொண்டவர்.

இயக்கம் புலிகளால் தடைசெய்யப பட்டு தோழர்கள் நிர்க்கதி நிலைக்கும் அவல நிலைகதும் உள்ளாகிய போது தோழர்களைப் பாதுகாப்பதற்கும் இரு ப்பை பாதுகாப்பதற்கும் இரவு பகல் கண்விழித்துப் பாடுபட்டவர்.

சகோதரப் படுகொலைகள் 1986 களின் முற்பகுதியில் உச்சம் பெற்ற போது பாசிசவாதிகளுக்கு அடிபணி யாமல் ஐக்கியத்தை வலியுறுத்திக் கொண்டு இப்போக்கிற்கெதிராக தோழர்களை வழிநடத்தியவர்.

எமது இருப்பை விட சமூகத்தின் தார்மீக வலுக்கள் முக்கியமானவை எனக் கருதிச் செயற்பட்டவர்.

தனது தாய்தந்தையரின் செல்வா க்கான பின்புலத்தில் கிடைத்த மேற் குலக கல்வி வாழ்வெலாம் துறந்து இலட்சியப் பயணததை மேற்கொண்ட வர் தோழர் நாபா.

1970களின் மாணவர் பேரவையு டன் ஆரம்பித்தது அவரின் பயணம்.

தனது 39 வயதில் அவர் தமிழ் பாசிஸ்டுகளால் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் 12 தோழ்ங்கள் தலைவர்களுடன் படு கொலை செய்யப்பட்டார். இந்த 39 ஆண்டு வாழ்க்கையில் அவர் 20 ஆண்டு கள் சமூகத்திற்காகத் தன்னை அர்ப் பணித்திருக்கிறார்.

அவரை மியன்மாரின் அங்சாங்சூஜி அவர்களுடன் ஒப்பிட்டு இந்தியாவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஹரிக ரின் அவர்கள் கட்டுரை ஒன்றில் குறிப பிட்டிருந்தார்.

தோழர் பத்மநாபா தென்னாசியாவில உருவாகிய முக்கியமான மானிடநே யம் மிக்க தலைவர் ஆனால் அவரைத தமிழ் பாசிசம் விடடுவைக்கவில்லை. அவரை மாத்திரமல்ல, தமிழ் சமூகத் தில் பெரிதும் மதிக்கப்பட்ட தலைவர் கள், போராட்டக்காரர்கள், கல்வியா ளர்கள், சமானிய மனிதர்கள் எவரை யும் தமிழ் பாசிசம் விட்டு வைக்கவில்லை.

தார்மீக உணர்வு மிக்க சமூகப்ப குதி கணிசமான அளவில் புலிகளால இல்லாதொழிக்க பட்டுவிட்டது.

இத்தகைய தீர்க்கதரிசனம் மிக்க தலைவர்களின் இழப்பே இன்றைய சமூக அவலத்திற்கு காரணம் என்றால அது மிகையல்ல.

பிராந்திய, வட்டார உணர்வுகள் கடந்த சர்வதேசவாதியாக தோழர் பத்மநாபா திகழ்ந்தார்.

அவரின் வழித்தடத்தில் செல்லும் தோழர்கள் நாம் என்பதிலும் அவருடன வாழ்ந்தவர்கள் என்றவகையிலும் நாம் பெருமையுறுகிறோம்.

தோழர் பத்மநாபா படுகொலை செய்யப்படுவதற்கு சில மாதங்கள் முன்னர் தான் இயற்கை எய்திய தமது தாயாருக்கு இறுதிக்கிரியைகள் செய் திருந்தார். சில மாதங்களுக்கு முன்னரே திருமணம் செய்திருந்தார்.

அவரது படுகெலை தமிழக, இந் திய அளவில் பெரும் அதிர்ச்சி அலை களைத் தோற்றுவித்திருந்தன. இந்தி யாவின் பெருமைக்குரிய நண்பரின் படுகொலையாக அதுபாக்கப்பட்டது. அதன் பின்னர் இந்தியாவின் இளந் தலைவர் ராஜிவ்காந்தி அவர்களையும் புலித்தமிழ் பாசிஸ்டுகள் படுகொலை செய்தார்கள். ராஜிவ் காந்தி அவர்கள் தமது இரங்கல் குறிப்பில் "பத்மநபா விக்கும் தனது தாயார் இந்திரா காந்தி அவர்களுக்கும் பிறந்த தினம் நவம் பர் 19 அவர்கள் இருவரும் ஒரே மனித குல லட்சியங்களுக்காக வாழ்ந்து ஒரேவிதமாக மறைந்தார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார். ராஜிவ்காந்தி அவர் களின் இரங்கல் குறிப்பு தோழர் கேதீஸ அவர்களிடம் வளங்கப்பட்டு பின்னர் தோழர் நாபா நினைவு மலரில் இடம் பெற்றது. கடந்த 2006 ஆகஸ்ட் 11 இல் தோழர் கேதீஸ் அவர்களையும் பாசிசப்புலிகள் படுகொலை செய்தார் கள்.

ஒன்று தெளிவானது புலிகள் மனு க்குலத்தின் விரோதிகள். அவர்கள் தமிழ் சமூகத்தற்கும் இந்த நாட்டிற்கும இந்தப் பிராந்தியத்திற்கும் மாபெரும் துரோகம் இழைத்திருக்கிறார்கள்.

தமிழ் பாசிசம் தோற்கடிக்கப் படுவ தும் இலங்கை பல்லினங்களின் தேச மாக மலர்வதும் சமூக ஏற்றத்தாழ்வுக ளை தூளைவதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதும் தமிழ் சமுகத்தின் சுயமரியாதை கௌரவத்தை உறுதி செய்யும் தீர்வைக் காண்பதும் உலக ளாவிய அளவில் சமூக பாரபட்சங்க ளுக்கெதிராக குரல் கொடுப்பதுமே தோழர் நாபாவிற்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்

# முன்னுதாரண புருஷர்



*தமிழ்நாட்டின் தலைநகர் சென் னையில் இயற்கைமரண மெய்திய தோழர் வி.ஏ கந்தசாமி அவர்களின் இறுதிமரியாதை நிகழ்ச்சிகள் சென்னை, புழல் இலங்கை அகதிகள் முகாமில் நடைபெற்றது. இதனையொட்டி தோழர் களால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம்*

வட இலங்கையில் மானிப்பாயில் நவாலி என்ற கிராமத்தில் சாதாரண குடும்பம் ஒன்றில் பிறந்த தோழா வீ.ஏ கந்தசாமி இலங்கையின் அரசியல வரலாற்றில் அழிக்க முடியாத இடம் பெற்றுவிட்டார்.

சாதாரண கூலித் தொழிலாளியான அவர், அரசியல் வாழ்வில் புகுந்து, குடும்ப வாழ்வை தியாகம் செய்தவர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச செயலாளராகவும், மத்திய கமிட்டி உறுப்பினராகவும், அரசியற் குழு உறுப்பினராகவும், அரசியல் பணியாற்றிய அவர் தொழிற்சங்க போராட்டங்களின் மூலம் தனது அரசி யல் வாழ்வை ஆரம்பித்தவர். அன்றைய யாழ்ப்பாண சமூகத்தின் சாதிவெறிக் கெதிரான போராட்டங்களை தலைமை தாங்கி, வழிநடத்திச் சென்று சாதனை கள் படைத்தவர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் பணிபுரிந்த காலத்தில் சீனா, ரஷ்சியா, அல்பேனியா போன்ற சோஷலிச நாடு களுக்குச் சென்று அநாட்டு உயர்மட்ட தலைவர்களுடன் உழைக்கும் மக்க ளின் விடுதலை பற்றியும் சோஷலிச நிர்மாணம் குறித்தும் விவாதங்களில் கலந்து கொண்டவர்.

ஈழக் கோரிகை ஆயுதப் போராட் டம் என பரிணமித்த வேளையில் மாக்சிச லெனிசத்தை தனது தத்து வமாக உயர்த்திப் பிடித்து, ஒடுக்கப் பட்ட உழைக்கும் மக்களின் விடுத லையை நேசித்த அவர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை அடையாளம் கண்டு இணைந்து நின்று ஆசானாய், வழிகாட்டியாய், ஊழியனாய தனது அனுபவத்தை, ஆற்றலை வெளிப்படுத்தி அயராது உழைத்தார். குறுகிய காலத்திலேயே தோழர்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்று க்கொண்டார்.

மாக்சிச லெனினிசத்தின்பால் உறு தியான பற்றும், கம்யூனிச சமூகத்தின் மேல் தளராத நம்பிகையும் கொண்டு வாழ்ந்த தோழர் வீ.ஏ கந்தசாமி தன் வாழ்நாளில் கம்யூனிச பண்புகளையும் நெறிமுறைகளையும் வழுவாது பின்ப ற்றியவர். எமது அரசியல் வாழ்விற்கு முன்னுதாரண புருஷர். அவர் நம்மோடு வாழ்ந்தார் என்பதையிட்டு நாம் பெரு மை கொள்வோம்.

அவர். இறுதிவரை எந்த இலட்சி யத்திற்காக வாழ்ந்து மடிந்தாரோ அந்த இலட்சியங்கள் வெற்றிபெற அயராது உழைப்போம் அதுவே நாம் அவருக்கு செய்யும் அஞ்சலி.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்துடன் கூடிய ஐக்கியமான செயற்பாடே விடிவிற்கு வழி

தமிழ் மக்களை துன்பங்கள் சூழ்ந்துள்ள இன்றைய சூழ்நிலையில் தமிழ்மக்கள் மத்தியில தமிழ் பாசிசத்தை தவிர்த்த நாகரிகமான தமிழர் களின் ஐக்கியம் அவசியமானதாகும். கடந்த 70 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வரும் இனரீதியான பாரபட்சங்கள் இரண்டாந்தரப்பிரசை கள் என்ற நிலையை இனமேலும் நீடித்துச்செல்ல அனுமதிக்காமல் ஆக்கபூர்வமான தீர்வொன்றை காணும் நடவடிக்கையின் அங்கமாக இந்த ஐக்கியப்பட்ட செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் இனறைய அவல நிலைக்கு அவ்வப்போது உருவான ஐக்கியதிற்கான முயற் சிகள் கானல் நீராகப்போனதும் காரணமாகும்.

கருத்து வேறுபடுவதற்கான இடைவெளியை அங்கீகரித்து பாதுகாத்து ஐக்கியப்பட்டுச் செயற் படுவதே தற்போதைய சவால்களை எதிர் கொள் வதற்கான ஒரே வழியாகும். ஐக்கியப்பட்ட சுயா தீனமான மாற்றுத்தலைமையொன்று தமிழ் மக்க ளுக்கு அடையாளப்படுத்தப் படவேண்டும்.

அது நெகிழ்வுத்தன்மையானதும் சமூகநேசம் கொண்ட சத்திகளை மேலும் உள்வாங்கக் கூடியதாகவும் அமையவேண்டும் ஜனநாயகத்தின மீது பற்றுறுதிகொண்டதாகவும், அதனை தமிழ் சமூகத்தில் நிலைநாட்டப் பாடுபடுவதாகவும் அமையவேண்டும்.

அந்த வகையில் முதுபெரும் தலைவர் ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் தமிழர் ஐக்கிய விடுதலைக்கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப்-பத்மநாபா ஆகிய கட்சிகள் அணிசேர்ந்து ள்ளன.

ஜனநாயகத்துடன் கூடிய தமிழ் மக்களின் தேசிய நல உரிமைகளை நிலைநாட்டுவதும், இலங்கையின் சகல சமூகங்களுடனும் ஐக்கிய மாக வாழ்வதற்கான சாத்தியப்பாடுகளை உரு வாக்குவதும் இதன் பிரதான இலக்காகும்.

கடந்த கால்நூற்றாண்டுகளில் பெரும் மனித அவலங்களைச் சந்தித்த எம்மக்களுக்கு தற்போது அவலம் என்பது நாளாந்த வாழ்வாகிப் போய் விட்டது.

தமது பாரம்பரிய வாழ்விடங்களில் பாதுகாப்பு டன் சுயமரியாதை கௌரவததுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கே தற்போது முன்னுரி மை அளிக்கப்படவேண்டும்.

இத்தகைய ஒரு நிலைமை அரசியல் தீர்வி னூடாகவே எட்டப்படமுடியும். அது ஒற்றையாட் சியின் கீழான தீர்வாகவோ அன்றிப் பிரிவினை யாகவோ இருக்கமுடியாது.

ஐக்கிய இலங்கைக்குள் சமஸ்டிமுறையி லான தீர்வாகவே அது இருக்கமுடியும்.

இதனை நடைமுறைச்சாத்தியமாக்குவதற்கு பாடுபடுதலே எம்முனனுள்ள முக்கிய பணியாகும்

இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண்பதற்காக அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளின் குழு தொடர்ந்து கலந்துரையாடலில் ஈடுபட்டு வந்தாலும், ஆக்கபூர்வமான முடிவுகளை அது எய்தவேண்டும என்று நாம் எதிர்பார்க்கிறோம். சர்வதேச சமூக மும இதனைத்தான் கூறுகிறது.

தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய சமஸ்டிமுறையிலான தீர்வையே இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் எதிர்பார் க்கிறது.

அத்தகைய தீர்வே நியாயமாகச் சிந்திக்கும் பெருவாரியான தமிழர்களைத் திருப்திப்படுத்தும் ஆனால் ஒற்றையாட்சி, வடக்கு-கிழக்கு பிரிப்பு மாவட்ட மட்டத்தில் நிர்வாகப் பரவலாக்கம் என்பது இனப்பிரச்சனை- அதன் தாற்பரியத்தை குறைத்து மதிப்பிடுவதாக அமைகிறது.

இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக இதுவரை ஏற்பட்டுவந்த கருத்துவளர்ச்சியை நிராகரித்து எதிர்நிலையில் செயற்படுவதாக அமைகிறது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினடிப்படையில் 13வது திருத்த சட்டமூலத்தின் கீழ் அதிகாரப் பகிர்ந்தளிப்பு என்ற கருத்து நிலை பின்னர் சந திரிகா அவர்களின் காலத்தில் சமஸ்டிமுறையி லான அதிகாரப்பகிர்ந்தளிப்பு பின்னர் ஒஸ்லோ பிரகடனம் என வளர்ச்சி காணப்பட்டது.

ஐ.தே.க ,ஸ்ரீ.ல.சு.க இருபிரதான கட்சிகளும் சமஸ்டிமுறையிலான தீர்வை கொள்கையளவில ஏற்றுக்கொள்ளும் நிலை கடந்த 15 ஆண்டுகளு க்குள் ஏற்பட்டிருந்தது.

திடீரென ஒரு பின்னடைவும், விகாரமான பிரசவமாக ஒற்றையாட்சி, மாவட்ட மட்டத்தில் அதிகாரப்பகிர்ந்தளிப்பு என்ற சொற்பதங்கள் தலை தூக்கின.

இனப்பிரச்சனை சொற்பதங்களின் புதிர் விளையாட்டாக அல்லாமல் யதார்த்தம், நீதி நியாயங்களின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும்.

எனவே ஐக்கியப்பட்டதும், தமிழ்மக்களின் பிரச்சனைக்குத் தெளிவான ஆக்கபூர்வமான தீர்வை முன்வைத்துச்செயற்படுவது அவசியமா னது. இதுவிடயத்தில் பலமான ஐக்கியப்பட்ட பரந்த அணியே இன்றையதேவை. ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையிலான எமது கூட்டமைப்பு அதன் அரம்பம். உள்ளூரிலும் புலம்பெயர்தளத் திலும் இககருத்துநிலைக்கு பரந்த ஆதரவு அடித்தளமொன்று இடப்படவேண்டும். ●

## லங்கா ராணியிலிருந்து

சிங்களவர் உனது உடமைகளை கொள்ளை அடித்து விட்டார்கள் என்பதாலேயோ, அரசாங்க உத்தியோகத்திற்குச் சிங்களம் படிக்க வேண்டு மென்பதாலேயோ, சிங்களவன் யாழ்ப்பாணத்தி லேயும், திருகோணமலையிலும் வந்து வாழ்கி றான் என்பதாலேயோ, பாட்டன் காலத்தில் கொ ழும்பில் கடை போட்டது மாதிரி இப்போது போட முடியவில்லை என்பதற்காகவோ, நாங்கள தனிநாடு கேட்டுப் போராட வேண்டிய அவசியமி ல்லை. நீ அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு உன்னிடம் உதவிக்கு வரும் பாமர மக்களை எனக்கு நேரமில்லை இன்று போய் நாளை வா என்று ஆணையிடுவதற்குத் தேவை யான அந்த மேசைக்கும் கதிரைக்கும் சிங்களவன போட்டி போடுகின்றான் என்பதற்குத் தனிநாடு கேட்டுப் போராட வேண்டிய அவசியமில்லை. உனது கள்ளக் கடத்தல் தோணியைக் கடற்க ரையில் மறித்துச் சோதனை போடுகிறார்கள் என்பதற்காகத் தனிநாடு கேட்க முடியாது.

நான் தமிழன் எனக்கு ஆங்கிலந்தான் பேசத் தெரியும், சிங்களம் தெரியவேண்டியதில்லை என்பதற்காக தனிநாடு கேட்கக் கூடாது. உனது வறுமை நிலைக்கு சிங்களவன் தான் காரணம் என்று யாரோ கூறிவிட்டார்கள் என்பதற்காகத் தனிநாடு கேட்கக் கூடாது, உனது வீட்டின் பின்னால் உள்ள அரச மரத்தை புத்தகோயிலாக் கிவிட்டார்கள் என்பதற்காக தனிநாடு கேட்கக் கூடாது.

இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் வறு மையைப் போக்கிச் செல்வத்தை வளர்க்கவும், தங்கள் மொழியை வளர்க்கவும் கலாச்சாரத்தை பாரம்பரியத்தை பேணிக் காத்து வளர்க்கவும் தங்கள் நிலத்தில் ஓர் அரசை நிறுவ விரும்பு கிறார்கள்.

இந்த நாட்டில் உள்ள தமிழ் மக்கள் தமிழர் கள் என்ற ஒரு காரணத்தால் நாடற்றவர்களாக கருதப்பட்டு, அல்லல்பட்டு, இன்னலுற்று அகதிக ளாக ஆக்கப்பட்டு கப்பலில் ஏற்றப்படுகின்றனர் அவர்களுக்கு இருக்க இடமில்லை. உண்ண உணவில்லை. செய்யத் தொழில் இல்லை இவர்களுக்கு இடமும், உணவும் தொழிலும் கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள தமழர்கள் கட்சியென்றும், சாதியென்றும், சமயமென்றும், ஊரென்றும் பிரிந்து சொந்த மண்ணில் எதையும் சாதிக்க முடியாமல், அந்நிய மண்ணில் கையேந்தி நிற்கிறார்கள். இதையொரு முடிவுகதுக் கொண்டுவர தமிழனுக்கு ஒரு அரசு வேண்டும்.

சுதந்திரம், ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு, மனிதனை மனிதன் சுரண்டும் சுதந்திரத்தை வளர்த்துக் கொண்டு, அதிகார வெறிபிடித்துச் சொந்த மண்ணிலேயே தமிழனை அந்நியனாக்கு கிறான் தமிழன். இதை ஒரு முடிவுக்குக் கொண் டுவர வேண்டும்.

தமிழன் நாகரீகம் என்ற கூறிக்கொண்டு வெறும் போலியான பண்பாடுகளையும், போட்டி யையும் பொறாமையையும் வளர்த்து ஏகப்பட்ட பொறுப்புகளைத் தலையில் வைத்துக் கொண்டு மண்ணோடு மண்ணாக அழுந்திப் போய்க் கிடக் கின்றான். இதிலிருந்து அவனை விடுவித்துத் தமிழர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் முன்னேற் றத்திற்காக உழைக்கும் பொருளாதாரத் திட்டத் தை அமைத்து வழிநடத்த ஒரு சமதர்ம அரசை நிறுவ வேண்டும்.

*(லங்கா ராணி புத்தகத்திலிருந்து 1983 வெளியிடப்பட்ட ஈழ முழக்கம் சஞ்சிகையில் பிரசுரிப்பட்டது)*

## ஜூன் 14 தோழர் றொபேட்..........

01ம் பக்கத் தொடர்ச்சி

துவைக்கபட்டிருந்த போதும் சக அரசியல் கைதி களால் அவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும் பெரிதும் நேசிக்கப்பட்டார். றொபேட் தோழரின் பேரை இன்று கேட்டாலும் துக்கம் கலந்த மலர்ச்சி அவர்களின் முகங்களில் ஏற்படும். றொபேட் தோழர் நகைச்சுவை உணர்வு கொண்ட மனிதர். எத்தகைய இக்கட்டான நிலை யிலும் அவரால் உணர்ச்சிகளை அடக்கிக்கொ ண்டு நிதானமாக காரியமாற்ற முடியும். ஒரு வசீகரம் அவரிடமிருந்தது.

இந்திய-இலங்கை ஒப்பந்த காலத்தில் அவர் தென்மராட்சியிலேயே தனது பணிகளை பிரதானமாக மேற்கொண்டிருந்தார். 1990 இன் முற்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப் தோழர்கள், ஆதர வாளர்களின் குடும்பங்கள் பிரேமதாச-பிரபாகரன் கூட்டுச்சதியால் இந்தியா செலல நேர்ந்த போதும் அங்கு பல்வேறு முகாம்களிலும் சிதறுண்டு போயிருந்த தோழர்களை சந்திப்பதில் அவர்களின பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதில் அல்லும் பகலும் அயராது பாடுபட்டார்.

சௌகரியமான சூழலில் நிம்மதியான வாழ் க்கை இந்த கால்நூற்றாண்டுகளில் நாம் அறிந் தவரை அவர் வாழ்விலில்லை.

"மனநிம்மதி ஆன்மாவின் இழிநிலை"என்ற ரஸ்சிய நாவலாசிரியர் டால்ஸ்டாயின் வார்த் தைக்கேற்ப அவர் வாழ்ந்தார்.

அவரது தந்தையார் 1980களின் இறுதிவா க்கில் புலிகளால் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய தாயார் அவர் பாரம்பரியமாக வாழ்ந்த வீட்டிலிருந்து புலிகளால் கடத்தபட்டு இந்தியா விற்கு தோணியேற்றிவிடப்பட்டார். அவமான உணர்ச்சியும், வேதனையும் அவர் குடும்பத்தி னரை வாட்டி வதைத்தது. அவருடைய தாயாரும் தந்தையாரும் துணிச்சலும் நியாய உணர்வும் கொண்ட மனிதர்கள். அவர்களுடைய துணிச்ச லுக்கும், தார்மீக உணர்ச்சிக்கும் தமிழ் சமூகத் தில் இடமில்லை தமிழ் பாசிசத்தின் கீழ் தற்குறி கள் மாத்திரமே வாழ அனுமதிக்கபடுவார்கள்.

இறுதியாக கனடாவிற்குப் புலம்பெயர்ந்த தோழர் றொபேட்டின் தாயார் இரத்தினம்மா தனக்கு கிடைத்த அற்பசொற்ப பணத்தையும் தோழர் றொபேட்டிற்கு அனுப்பி வைத்தார். தனிப்பட்ட முறையில் தோழர் றொபேட்டிற்கு கிடைத்த பணமும் கட்சி நலன்களுக்காகவே செலவிடப்ப ட்டது. தோழர்களின் பொருளாதாரப் பிரச்சனைக ளுக்கு தீர்வுகாண்பதில் தோழர் றொபேட் பெரும் கடனாளியாக வேண்டியிருந்தது. அவர் திருமணம் செய்து கொள்ளவுமில்லை.

1994 இற்குப் பிந்திய சூழலில் யாழ்ப்பாண த்தில் மீண்டும் கட்சி வேலைகள் தோழர் றொ பேட்டின் தலைமையில் புத்துயிர் பெற்றன. அதேவேளை அனைத்து பிராந்தியங்களுடனும் உயிரோட்டமான தொடர்பை மேற்கொண்டிருந் தார். துவண்டுபோன நிலையிலிருந்து நாம் மீள வேண்டும் என அவர் விடாப்பிடியுடன் போரிட்டார்.

1990களின் பிற் பகுதியில் யாழ் மாநகரச பையில் அங்கத்தவராக கிடைத்த வாய்ப்பை மக்களுக்கு பணியாற்றுவதில் முழுதாக பயன்ப டுத்தியதோடு ஜனநாய நிறுவனங்கள் பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்துவதில் அவர் முனைந்தி ருந்தார். சக மாநகரசபை அங்கத்தவர்கள், மாந கரசபை ஊழியர்களால் அவர் பெரிதும் மதிக்கப் பட்டார்.

இடையறாத தேடலில், செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார். 2002 அமைதி ஒப்பந்தத்தின பின்னர் யாழ்ப்பாணம் வந்த பல தென்னிலங்கை உள்ளூராட்சி உறுப்பினர்கள், கல்விமான்கள், பிரமுகர்கள் என பலரும் தோழர் றொபேட்டுடன் கலந்துரையாடிச் சென்றனர். பலர் காரியாலயத் தில் தங்கியும் சென்றிருக்கிறார்கள். கட்சியின் பொருளாதார தேவைகளுக்காக அவர் யாழில் உருவாக்கிய உணவகம் பலரையும் ஈர்த்திருந்தது. அவருடைய கம்பீரமும், வசீகரமும் பலரையும் ஆகர்சித்தது. அவர் மாநகரசபையில் மிகவும் பெறுமதி வாய்ந்த உரைகளை ஆற்றியிருக்கி றார். அவருடைய அறிக்கைகள் தமிழ் மக்களின் பிரச்சனைகள் பற்றி பொறுப்புடன் பேசுவனவாக இருந்தன. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மிகப்பெறுமதி வாய்ந்த பங்களிப்புக்களை வழங் கியுள்ளார். ஊடகவியலாளர்கள் அவரின் நண்பர் களாக இருந்தார்கள். இராஜதந்திரவட்டாரங்களி லும் பெரிதும் மதிக்கப்பட்டார். அவர் உன்னத சமூகத் தலைவராக உருவாகிக்கொண்டிருந்தார்.

இந்த தருணத்திலேயே அவர் பாசிசப்புலி களின் நயவஞ்சக தாக்குதலில் கொல்லப்பட்டார். அவரின் சிறுபராய நண்பர்களாக இருந்தவர்களும், பின்னாளில் தோழர்களாக இருந்தவர்கள் பலரும் வெவ்வேறு காலங்களில் கொல்லப்பட்டு விட்டனர்.

அவருடைய குடும்பத்தில் அவருடைய சகோதரியாரின் குடும்பம் மாத்திரமே எஞ்சியிரு கிறது.

புத்திர சோகத்தில் மூழ்கியிருந்த அவரது தாயாரும் அண்மையில் மறைந்துவிட்டார். இவ் வாறான அனுபவங்கள் எமது சமூகத்தில் பல் லாயிரம் குடும்பங்களுக்கு நேர்ந்திருக்கின்றன. ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்து பார்த்தால் தான் வலி எத்தகையது எனப்புரியும். தோழர் றொபேட்டின் வாழ்வும் மரணமும் ஒரு புயல் வீசித்ததணிந்தது போல் இருக்கிறது.

எமதருமைத்தோழரே! நீங்கள் மறைந்து நான்காவது ஆண்டில் நினைவு கூருகிறோம். உங்கள் வெற்றிடம் இன்னும் நிரப்பப்படவில்லை. உங்கள் இலட்சியங்கள் எங்கள் தோள்களில் தாங்கிச்செல்லப்படும். அமைதியாக உறங்குங்கள்.




[illegible] பலியான தோழர்கள் தயாளன் (திருமலை) சந்திரன் (மயிலிட்டி) [illegible] ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தி வெளியிடப்பட்ட சுவரொட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த..... தோழர் குமார்



**(மத்திய கமிட்டி உறுப்பினர்)**

ஈழ மாணவர் பொது மன்றத்தில் உறுப்பின ராகத் தன்னை இணைத்துக் கொண்ட தோழர் குமார் கட்சியினது ஒவ்வொரு பரிமான வளர்ச்சி யிலும் தன்னை உட்படுத்தக் கொண்டு அரும்பாடு பட்டவர். கட்சியில் ஆரம்பகால பொருளாதாரத் திட்டங்களில் ஒன்றான பயிர்ச் செய்கைத் திட்ட த்தில் பெரும் பங்கு வகித்த தோழர்களில் முதன்மை இடத்தைப் பிடித்தவர் தோழர் குமார். பொறுமை, சகிப்புத் தன்மை, அரவணைப்பு, ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுக்கும் திறமை இவைகள் தான் இவரின் வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாய் இருந்தது.

மட்டு அம்பாறை மாவட்டங்களில் எமது ஈழ மாணவர் பொது மன்றத்தின் ஆரம்பகால வெகு ஜனப் போராட்டங்களின் வெற்றியில் தோழர் குமாரின் உழைப்புக்கு பெரும் பங்குண்டு.

அதுமட்டுமல்ல, 1978ம் ஆண்டின் சூறாவளி யின்போது பாதிக்கப்பட்ட பகுதிகளை நிவாரணப் பணி செய்ய யாழிலிருந்து வந்த எமது அமைப் பின் முன்னணித் தோழர்களுடன் தோழர் குமார் இணைந்து பணியாற்றினார்.

1982ம் ஆண்டு அரசியல் வகுப்பு ஒன்று எமது ப்ராந்தியத்தில் நடந்து கொண்டிருந்தவேளை, அரசபடையினர் திடீரென சுற்றி வளைத்த வே ளையில் தோழர் குமாரும் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச்சிறையில் தடுப்புக்காவலில் வைக கப்பட்டு இருக்கையிலே 1983ல் ஏற்பட்ட இனக் கலவரத்தில் வெலிக்கடைச்சிறையில் படுகொலை செய்யப்பட்ட ஈழப் போராளிகளோடு இருந்தும் மயிரிழையில் உயிர் தப்பிய தோழர்களில் தோ ழர் குமாரும் ஒருவராவார். பின்பு மட்டக்களப்புச் சிறைக்கு தமிழ் கைதிகள் மாற்றப்பட்டார்கள்! அங்கிருந்து எமது மக்கள் விடுதலைப் படையால் மேற்கொள்ளப்பட்ட சிறையுடைப்பில் வெளியேறி கட்சி அனுமதியுடன் இராணுவப் பயிற்சிக்கு தன்னை உட்படுத்திக் கொண்டு, தொடர்ந்து இயக்கத்தின் பணிகளில் ஈடுபட்டார்.

மக்கள் விடுதலைப் படை இராணுவப் பயிற்சி மட்டுமே பெற்று பயிற்சி முகாமை விட்டு வெளி யேறாது அரசியல் மயப்படுத்தப்பட்ட படையாக இருக்க வேண்டுமென்ற கடசியின் நிலைப்பாட்டை செயல்படுத்துவதில் தோழர் குமாரின் பங்கு அளப்பரியதாகும்!

1984ம் ஆண்டு நடந்த எமது கட்சியின் முத லாவது காங்கிரஸில் தோழர் குமார் மத்திய கமிட்டி உறுப்பினராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். மட்டு அம்பாறை மாவட்ட கட்சிப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டு அங்கு கட் சியின் பரந்துபட்ட அரசியல் நிர்வாகத்தை அமை த்துச் செயற்படுத்தினார்.

தோழர் குமார் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாராள வாதத்தை கைக்கொண்டவரில்லை. அவரது சொந்தக் கிராமமான தம்பிலுவிலில் ஒரு சில தோழர்கள் இழைத்த தவறுகளை கண்டித்ததோடு, பிராந்தியக் கமிட்டி எடுத்த முடிவின்படி நடவடிக் கைக்கு அவர்களை உட்படுத்தியது அதற்குச் சிறந்த ஓர் உதாரணமாகும்.

சாதி, மதம், இனம் என்ற குறுகிய வேறுபாடு களெல்லாம் இவரிடம் கிடையாது. எல்லோரை யும் தோழர்கள் என்ற ஒரே பார்வையிலே பார்க்கும் தன்மையுடைவராவார். 1985ன் ஆரம்பத்தில் சிறிலங்கா அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட தமிழ்-முஸ்லீம் இனக்கலவரத்தில், சில தமிழ்க் கிராமங்கள் முற்றாகத் தாக்கப்பட்டவேளையில் முஸ்லீம் தீய சக்திகளை எதிர்த்துப் போராட விடுதலை இயக்கங்கள் ஆயுதங்களுடன் செய லில் ஈடுபட்டனர்.

ஆனால் முஸ்லீம் தீய சக்திகளுக்கு எதிராக ஆயுதம் தூக்கினாலும், அது- முஸ்லீம் மக்க ளுக்கு எதிராகத் தூக்கினோம் என்று வரலாறு நிச்சயம் சுட்டிக்காட்டும் அதனால் நாம் ஆயுதத் தின் மூலம் இதைத் தடுப்பதை விடுத்து, கலவ ரத்திற்குக் காரணமான சம்பவங்களை ஆராய்ந்து இனிமேல் அப்படியொரு சம்பவம் நடந்துவிடாமல் தடுப்பதற்கான வேலைகளை மேற்கொள்வோம் என்று தோழர்களுக்கு தெளிவு படுத்தினார்.

அத்தோடு, முஸ்லீம் பெரியோர்களையும், தமிழ்பெரியோர்களையும் அழைத்துப் பேசி கல வரத்திற்கான காரணங்களைக் கேட்டறிந்தும், இச் செயல்களைத் தடுப்பதற்காக ஏனைய இயக்கங்களுடன் பேசி, தமிழ்- முஸ்லீம் கிராம எல்லையில் தோழர்களை நிறுத்தி சகஜ நிலை யை ஏற்படுத்திய பெருமையும் தோழர் குமாரையே சாரும்.

ஆண்டாண்டு காலமாக சகோதரர்கள் போல் வாழ்ந்த தமிழ் - முஸ்லீம் மக்களில் முரண்பாடு வருவதற்குக் காரணமாய் இருந்தது சிறிலங்கா அரசு என்றாலும், அதற்குக் காரணமாக சக இயக்கங்களின் வேண்டத்தகாத நடவடிக்கையும் ஒரு காரணமென்பதை உணர்ந்து சக விடுதலை இயக்கங்களின் பொறுபபாளர்களையும் சந்தித்து, இதுபோன்ற நடவடிக்கைகளை நிறுத்தும்படியும், மேலும் எமது போராட்டத்தில் முஸ்லீம் சமூகத் தையும் இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது என்பதைத் தெளிவுபடுத்தியதுடன் எமது கட்சியின் நிலைப்பாட்டை கவனத்தில் கொள்ளாது நடந்து கொண்ட தோழர்களுக்கு தண்டணை வழங்கவும உத்தவிட்டார்.

1985-86ல் கட்சிக்குள் ஏற்பட்ட உட்கட்சிப் பிரச்சினையில் கட்சித் தலைமைத் தோழர்கள் மீது குற்றம் சுமத்தி முன்வைக்கப்பட்ட அறிக் கைக்கு பதிலாக தோழர் குமார் மற்றொரு அறி க்கையை எழுதினார் ஆனால் அவ் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

புலிகள் எம்மீது தாக்குதல் தொடுத்த சில நாட்களின் பின்னர் சிதறிக் கிடந்த தோழர்களை ஒன்று திரட்டி வேலைகளை முன்னெடுப்பதற்கு பிராந்தியக் கமிட்டியைக் கூடியது அந்த வீட்டைச சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் தாக் குதல் தொடுத்தபோது காயப்பட்ட தோழர் குமார் எதிரே, தோழர் அருள், தோழர் நவீனன், தோழர் கமலன் சயனைட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டனர்.

ஆனால், தோழர் குமாரும், இன்னுமொரு முன்னணித் தோழருமே உயிருடன் இருந்தனர் அவ்வேளையில் திடீரெனக் கையை உயர்த்தி சரணடைவது போல வீட்டு வாசலில் நின்ற படையினரிடம் சென்றவர் படையினர் எதிர்பார்க் காத நேரத்தில் கட்டிப்பிடித்து மற்றத் தோழரை தப்பும்படி கட்டளையிட்டு அந்தத் தோழரைக் காப்பாற்றினார்.

இச்சமயத்தில் பின்னால் நின்ற படைவீரரின் துப்பாக்கிச் சூட்டுற்கு இலக்காகி வீரமரணம் அடைந்தார்.

தோழர் குமார் தான் இறப்பது நிச்சயம் என்று தெரிந்தும், இறுதி நேரத்திலும் தன் உயிரைப் பணயம் வைத்து சக தோழர்களைக் காப்பாற்றி னார்.

தோழர் குமார் விடுச் சென்ற பணிகள் மிக வும் கடினமானவை. விசாலமானவை.

தோழர் குமார் பிராந்திய மக்களிடமும், எம் தோழர்களிடமும் என்றும் மறக்க முடியாதவர். அவர் என்றும் எமது நெஞ்சங்களிலே உயிர் வாழ்கின்றார்.

மனிதநேயமும், ஜனநாயகமும் ஒரு மனிதன உயிர் வாழும்வரை. அவனுடன் ஒட்டியிருக்க வேண்டிய பெரும் பொக்கிசங் களாகும்.

# என்றும் எம்மோடு வாழும் தோழர் அருள்.



தனது சிறு வயதிலிருந்த தன்னை முழுமை யாக இயக்கப பணிக்கு அர்ப்பணித்துக் கொண்ட இவர் கட்சியின் அனைத்துத் தலைமைத்துவத் தோழர்களுக்கும் நன்கு பரிட்சயமானவர் எல்லோ ராலும் "தம்பி" என்று அழைக்கப்பட்டார். யாழி லிருந்து வந்த சூறாவளி புணர்நிமானக் குழுவில் இடம்பெற்ற எம் தோழர்களோடு சேர்ந்து கொண்டு பணியாற்றியவர். அப்போது சிறு பையனாக இருந்ததால் இவரை எல்லோரும் "தம்பி" என்று அழைத்தனர். இதனால் அந்தச் செல்லப் பெயர் நிலைத்தது. சில பிராந்தியத் தோழ்கள் அவரை "இன்பம்'' என்றும் அழைத்தனர்.

1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின் ஈழ விடுதலைப் போராட்டம் கூர்மையடைந் தது. எமது இயக்கமும் பரவலாக மக்கள் மத்தி யிலான வெகுஜன வேலைகளை செய்யத் திட்ட மிட்டு பிரதேசப் பகுதித் தோழ்களைப் பணித்தது.

தோழர் அருள் அவரின் மண்டூர் தொகுதியில் மக்கள் மத்தியிலான வேலைகளையும், கட்சியின இராணுவ வேலைகளிலும் வெற்றிகரமாகச் செயற் பட்டார். அத்தோடு, பெருந்தொகையான தோழர் களை இராணுவப் பயிற்சிக்கு அனுப்பிவை த்தார். பிரசித்தி பெற்ற மட்டுநகர் சிறையு டைப்பை மக்கள் விடுதலைப் படை வெற்றி கரமாகச் செய்து முடித்தது இதில் தோழர் அருளின் பங்கும் குறிப்பிடத்தக்கது. அதன் பின்பு தோழர் அருள் இராணுவப் பயிற்சி பெற்று தமிழ்நாட்டில் கட்சி அலுவலகம் ஒன்றில் பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

கட்சியின் முதலாவது காங்கிரஸில் கலந்து கொண்ட இவருக்கு காங்கிரஸ் தீர்மானங்களின் படி வேலைகளை முன்னெடுப்பதற்கு உட னடியாக மட்டக்களப்பிற்கு அனுப்பிவைக்கப்பட் டார். அவருக்குக் கொடுக்கப்பட்ட சில இராணுவ நடவடிக்கைகளை மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

ஒரு இராணுவ நடவடிக்கையின்போது எதிரி யின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கடுமை யான சிகிச்சையின் பின்பு குணமடைந்து சில நாட்களின் பின் மக்கள் விடுதலைப்படையின் வேலைகளுக்குத் தயாரானார். மட்டு அம்பாறைப் பிராந்தியத்தில் உள்ளூர் இராணுவப் பயிற்சி முகாங்களை அமைப்பதற்கு மட்டு அம்பாறைப் பிராந்தியத்தின் தளபதி தோழர் சிவாவுக்கு உறுதுணையாக நின்று செயற்பட்டார்.

1985 ன் ஆரம்பப் பகுதியில் தோழர் சிவா வீரமரணம் அடைந்தபோது தோழர் அருள் தற்கா லிகத் தளபதியாக நியமிக்கப்பட்டார். தோழர் சிவாவின் மரணத்தால் சோர்வடைந்த மக்கள் விடுதலைப் படையில் ஏற்பட்ட இடைவெளியை நிவர்த்தி செய்ய பல உடனடி நடவடிக்கை களை மேற்கொண்டார்.

பிராந்தியச் செயலாளரின் முடிவிற்கிணங்க பல பயிச்சி முகாங்களை ஆரம்பித்து பயிற்சி கொடுத்தது மட்டுமல்லாமல், அரசியல் பாசறைக ளில் மக்கள் விடுதலைப் படைத் தோழர்களை யும் கலந்துகொள்ளச் செய்வதில் தோழர் குமா ருக்கு பெரும் ஒத்துழைப்பு வழங்கினார் இதனால பயிற்சி பெற்ற தோழர்கள் அரசியல் தெளிவு உள்ளவர்களாக இருந்தனர்.

புலிகள் எம்மது திடீர் தாக்குதல் தொடுத்ததால நிலை குலைந்துபோன தோழர்களை ஒன்று திரட்டி மீண்டும் புலிகளுக்கு எதிரான தாக்குதலைத தொடுத்து பல பகுதிகளில் நிலைகொண்டு கட்சியை பலப்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

தோழர்களையும், மக்களையும், ஜனநாயக சக்திகளையும் புலிகளிடமிருந்து பாதுகாப்பது பற்றி ஆராய்வதற்காகக் கூடிய பிராந்தியக கமிட்டிக் கூட்டம் நடந்த இடத்தை திடீரென விசேட அதிரடிப் படையினர் சுற்றிவளைத்து தாக்குதல் தொடுத்தபோது நெஞ்சில் குண்டு பாய்ந்து இனி தப்பமுடியாது என்ற நிலையில் சயனைட் உடகொண்டு வீரமரணமடைந்தார். இவ ருடன் உப-தளபதிகள் நவீனன், கமலன், மத்தி யகுழு உறுப்பினர் தோழர் குமார், ஜெயந்தன் ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

தோழர் அருளுக்கு இரண்டு ஆண் சகோ தரர்கள் இருந்தனர். தோழர் அருளின் அண்ணன் மண்டூர் ஈபிஆர்எல்எவ் பொறுப்பாளராக இருந்தார். அவரையும் புலகள் சுட்டுக் கொன்றுவிட்டனர். இருப்பினும் அவரது குடும்பம் பல வழிகளிலும் எமது ஸ்தாபன வளர்ச்சிக்கு உதவியது.

தோழர் அருள் கொண்டிருந்த கொள்கைகளை பின்பற்றி நாம் முன்னேறுவோம். அவர் விட்டுச் சென்ற பணிகளை விடாமல் தொடர்வோம்.

# மனிதநேயம் மிக்க போராளி

## தோழர் பெஞ்சமின

30.03.1987



தோழர் பெஞ்சமின் பொகவந்தலாவ மக்களினல் "ரவி'' என்றும் அன்போடு அழைகப்பட்டார்.

எமது இயக்கத்தின் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்ட தோழர் பெஞ்சமின் ஒரு மருத்துவராகவும் கடமையாற்றினார். தோழர் பெஞ்சமின் எமது தோழர்களுக்கு மட்டுமல்லாது. சக விடுதலை இயக்கங்களுக்கும், மக்களுக்கும், ஏன் இவரைப் படுகொலை செய்த பாசிசப் புலிகளுக்கும், மருத்துவத் துறை சார்ந்து உதவுவதில் முன்நின்றார். இதனால் அவர் கட்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்த யாழ் மாவட்டத்தில் சக போராளி இயக்க போராளிகள், பொதுமக்களின் அன்புக்கும், பாசத்திற்கும் உரியவராக இருந்தார்.

1986 மார்கழி 13ம திகதி யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள ஈபிஆர்எல்எவ் அலுவலகத்தில் வைத்து அவர் ஏனைய தோழர்களுடன் புலிகளால் கைது செய்யப்பட்டார். அங்கு கைது செய்யப்பட்ட அனைவரதும் கைகள் கட்டப்பட்டு வீதியில் நிறுத்தியிருந்து புலிகளின் வாகனத்தை நோக்கி அழைத்துச் சென்றனர். இந்த அலுவலகத்தை தாக்க வந்த புலி உறுப்பினர் ஒருவர் வீசிய கைக்குண்டு வெடித்ததில் மற்றொரு புலி உறுப்பினர் காயமடைந்த விடயம் அப்போது தான் தோழர் பெஞ்சமினுக்கும் இதர தோழர்களுக்கும் தெரியவந்தது. ஆனால், புலிகள் தமது பொறுப்பாளர்களின் தண்டனையிலிருந்து தப்புவதற்காக அலுவலகதில் இருந்தவர்களே கைக்குண்டை வீசியதாக கதையை சோடிக்க முயன்றுகொண்டிருந்தார்கள். தோழர் பெஞ்சமின் தானாகவே முன்வந்து காயமடைந்தவருக்கு தன்னால் சிகிச்சையளிக்க முடியுமென்று கூறி சிகிச்சையளித்தார்.

வைமன் வீதியில் நாவலர் கலாச்சார மண்டபத்திற்கு சமீபமாக உள்ள பப்பா முகாம், நல்லூர் கோவில் வீதியில் தற்போது ஐநா நிறுவன அலுவலகம் அமைந்துள்ள வீடு, மனோகரா திரையரங்கத்துக்கு சமீபமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் சாலமன் சிறில் தலைமையில் இயங்கும் புலிகளின் பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகம் செயற்படும் வீடு போன்ற பல இடங்களில் நீண்ட காலம் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தோழர் பெஞ்சமின் இறுதியாக 1987 பங்குனி 30ம் திகதி யாழ் இந்துக் கல்லூரிக்கு பின்புறமாக தடுத்து வைத்திருந்த இடத்தில் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

மலையகத்தில் பிறந்து சமூக அக்கறையுடன் யாழ் மண்ணில் மக்கள் சேவையில் ஈடுபட்டிருந்த கல்வியறிவும், பல்வகை ஆற்றலும், மனிதநேயமும், இரக்கசுபாவமும் கொண்ட ஒரு இளைஞனை தமிழ் மக்களின் விடிவுக்காக களம்புகுந்த பல நூறு இளைஞர்களை பலிகொண்டது போலவே புலி பாசிசம் பலிகொண்டுவிட்டது. யாழ் மண்ணுக்கு அத்தகைய களங்கத்தை புலிகளுடன் இணைந்து ஏற்படுத்தியவர்கள் இன்று முழு தமிழ் சமூகத்தையும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாக்கியுள்ளார்கள்.

தோழர் பெஞ்சமினையும் அவரை போன்றே தமிழரின் விடிவுக்காக போராடப் புறப்பட்டு யாழ் மண்ணில் மடிந்த இதர போராளிகளையும் இத்தருணத்தில் நினைவுகூருவோம். மரியாதைப்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.ஆர்.எல்.எவ் முன்னணி அமைப்புக்களால் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் சஞ்சிகைகள்


Progressive voice
Volume 1 Number 1 may 1979
into the future
local elections
people elect TULF
mandate reaffirmed

ஈபிஆர்எல்எவ் இன் மாணவர் அமைப்பான ஈழமாணவர் பொதுமன்றத்தின் பெயரில் 1979 இல் இங்கிலாந்திலிருந்து வெளியிடப்பட்டது. இதனை வெளியிடுவதில் பிரதான பங்குவகித்தவர் தோழர் மனோ அவர் 1986க்குப் பின்னர் கட்சிப்பணிகளிலிருந்து முற்றாக ஒதுங்கிக் கொண்டாலும், ஆரம்பத்தில் கடின உழைப்பை வழங்கியவர். அவரோடு இணைந்து இந்த பத்திரிகையை வெளியிடுவதிலும், ஈழமாணவர் பொதுமன்றத்தின் அரசியல் நடவடிக்கைகளையும் முன்னெடுத்தவர்களில் மகாஉத்தமன், நிஷ் ஆகியோரது பங்கு காத்திரமானதாகும்.

ஈழமாணவர் பொதுமன்றத்தின் தமிழ் வெளியீடாக ஈழமாணவர் குரல் வெளியிடப்பட்டது. தோழர் சுகு (தி.சிறிதரன்) யாழ்ப்பாணத்திலிருந்தே வெளியிடப்பட்ட இப்பத்திரிகையை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு பல நூற்றுக்கணக்கான தோழர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். ஈழமாணவர் குரலின் சில வெளியீடுகள் இந்தியாவில் அச்சிடப்பட்டது. இவற்றை வெளியிடுவதில் தோழர் ரமேஷின் பங்கு முக்கியமானது. இதன் பிந்திய வெளியீடுகள் மீண்டும் யாழ்ப்பாணத்திலேயே அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஈபிஆர்எல்எவ் அரசியல் பிரிவுக்கு பொறுப்பாக இருந்த தோழர்களும், மாணவர் அணிக்கு பொறுப்பாக இருந்த தோழர்களும் அச்சிட்டு வெளியிட்டதுடன், விநியோகத்தையும் மேற்கொண்டனர்.


ஈழமாணவர்குரல்
1 ஆனி 1981
"பொபி சான்ட்ஸ்"

மக்களிடையே உள்ள சித்தாந்த ரீதியான அல்லது முரண்பாடான பிரச்சனைகளை தீர்க்கக் கூடிய ஒரே வழி ஜனநாயக ரீதியான முறையாகும். கலந்துரையாடல், விமர்சித்தல் ஆதரவோடு வேண்டுதல், கற்பித்தல் ஆகிய வழிகளை கையாளுவதே அல்லாது வன்மை, அடக்கு முறை ஆகிய வழிகளை கையாளக் கூடாது.


*(எமது சஞ்சிகைகளில் வெளியான தலைவர் மாஓவின் மேற்கோள்களில் ஒன்று)*




1984 காலப்பகுதியில் பயிற்சி முகாமிலிருந்த தோழர்கள் தாயகம் என்ற பெயரில் கையெழுத்து சஞ்சிகை ஒன்றை வெளியிட்டார்கள். தோழர் ஜெகதீஸ் (ஆசிரியர்) தோழர் வாகீசன் (ஓவியம்). தோழர்கள் நவீனன், மோகன் ஒரு குழுவாக இதனை வெளியிட்டனர். ஆகியோர் இச்சஞ்சிகை கவிதை, சிறுகதை, கட்டுரைகள், இலக்கியம் மற்றும் சினிமா விமர்சனம் குறுக்கெழுத்துப் போட்டி ஆகிய அம்சங்களை கொண்டிருந்தது. முகாமில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு குழுவிலிருந்தும் பல்வேறு தோழர்கள் ஆக்கங்களை எழுதியுள்ளனர். இது வெறுமனே அரசியல் விககாரங்கள் குறித்து மட்டுமன்றி சினிமா, இலக்கியம் பெண்கள் உரிமை என்பன தொடர்பாக அவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, அவர்கள் கொண்டிந்த முற்போக்கான சிந்தனை என்பவற்றை காட்டும் கண்ணாடியாக இச்சங்சிகை உள்ளது.



ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியின் வெளியீடான செந்தணல் சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுவதில் ஆரம்பத்தில் தோழர் ரமேஸ் அவர்களின் பங்கு கணிசமானதாகும். இச் சஞ்சிகையின் பிந்திய வெளியீடுகளை ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியின் பெண்தோழர்களே ஆக்கங்களை எழுதி அச்சிட்டு வெளியிடும் ஆற்றல் கொண்டிருந்தனர். இதில் தோழர் அஞ்சலியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும் இச்சஞ்சிகையின் பின் பகுதியில் ஈபிஆர்எல்எவ் இன் கட்டமைப்பை விளக்கும் வரைபடம் பிரசுரமாகியுள்ளது.







1994 காலப்பகுதியில் புழல் இலங்கை அகதிகள் முகாமிலிருந்த மட்டக்களப்பு பிராந்திய தோழர்கள் சமர்ப்பணம் என்ற பெயரில் கையெழுத்துப் பிரதியாக சஞ்சிகை ஒன்றை வெளியிட்டார்கள் இதனை எழுதி வடிவமைத்து வெளியிடுவதில் தோழர் நாபாரவி முக்கிய பங்குவகித்தார். அக்காலப் பகுதியில் தோழர் ராசிக் மட்டக்களப்பு அம்பாறை பிராந்திய செயலாளராக கட்சிப்பணிகளுக்குத் தலைமை தாங்கினார்.

துயர முகங்களோடு கடந்த சில வருடங்களாக சிறைப்பட்டிருக்கும் இந்தப் புழல் வாழ்க்கையில் ...
எமது வரலாற்றுக்கடமைகளை நிறைவேற்றுவதும், அதற்காகத் தொடர்ந்து பாடுபடுவதென்பதும் தவிர்க்கப்பட முடியாதவைகளாகும். ஈழவிடுதலைப் போராட்டப் பாதையில் உயர்ந்த கனவுகளோடு எம் முன்னால் மறைந்த தோழர்களை நினைவு கூருவதும் அவர் களின் நோக்கங்களை, இலக்குகளை அடையும் வரை நாம் உறுதியாகப் போராடுவதென்பதும் எம்மீது சுமத்தப் பட்டுள்ள மிகப்பெரிய கடமையாகும்.




## தோழர் சோபா



தோழர் சோபா அல்லது வதனி என அழைக்கப்படும் மதிவதனி ஈழப்போராட்டத்தில் முதன் முதலில் களத்தில் மடிந்த பெண் தோழர் இவர் இவர் 03.05.1985 இல் காரைநகர் கடற்படை முகாம் எமது இராணுவப் பிரிவினராகிய மக்கள் விடுதலைப் படையினரால் (பி.எல்.ஏ) தாக்கப்பட்ட போது இதில் பங்குபற்றி உறுதியுடன் போராடி விடுதலை போராட்ட வரலாற்றில் பெண்கள் வரிசையில் ஓர் இடத்தை பிடித்துக் கொண்டவர் தோழர் வதனி.

## தோழர் வசந்தி



மக்கள் விடுதலைப்படை போராளியான தோழர் வசந்தி என அழைக்கப்படும் கிருசிட்டி வீதி காங்கேசன்துறையை சேர்ந்த சிவசம்பு வசந்தி 1988 ஆம் வருடம் மாவிடடபுரத்தில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஈழ மாணவர் பொதுமன்றம் நடாத்திய மேதின பொதுக்கூட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சியின் இதர வெளியீடுகள




அமரர் தோழர் கேதீஸ் அவர்களின் கடின உழைப்பில் ஸ்போக்ஸ்மன், தமிழ் காடியன் ஆகிய இரண்டும் வெளிவந்தன. தமிழ்காடியன் என்ற பெயரை பின்னர் புலிகள் அபகரித்துக் கொண்டனர்.











ஈ.பி.ஆர்.எல்.எவ் இனால் 1986 இல் வெளியிடப்பட்ட ஈழம் தபால் தலையும் 1948 இல் மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட தினத்தை நினைவுபடுத்தி 15.11.2006 இல் வெளியிடப்பட்ட தபால் தலையும் முதல்நாள் உறையும்




யாழ் மக்கள் மத்தியில் பிரபலமான "செய்திப்பலகை" 1986




## ஈழ விடுதலைப் போராட்டத்தில் மலையகத் தமிழர்கள்

*தோழர் அ.வரதராஜப்பெருமாள் "குமுறும் எரிமலை" அக்டோபர் 1986 இதழில் மலையக மக்களின் பிரச்சினைகள் குறித்து எழுதியவை*

### முற்போக்கு சக்திகளின் கடமை

ஈழ விடுதலைப் போராட்டம் தவிர்க்க முடியாததும் தடுக்க முடியாததுமான வளர்ச்சிப் போக்குக்கொண்டது என்பதைப் பலரும் அறிவர். இந்நிலையில் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு ஈழ விடுதலைக்கு உட்பட்டதா? இல்லையா என்பதை மலையக மக்களே தீர்மானிக்கவேண்டும் என்பதை யாரும் மறுக்கவும் இல்லை மறுக்கவும் முடியாது. எனினும், மலையக மக்களின் விருப்ப நிலையைப் பிரதிபலிக்கக்கூடிய ஓர் புரட்சிகர அமைப்பு சிறிய அளவிலாயினும் இன்னும் மலையக மக்களின் மத்தியிலிருந்து எழவில்லை என்பதையும் ஒப்புக் கொண்டயாகவேண்டும். இதேவேளை அரசியல் உணர்வுடைய அனைத்துத் தமிழர்களும் மலையக மக்களின் பாதுகாப்புப் பற்றி அக்கறையாக இருக்கிறார்கள். ஆனால் இவர்களிடம் ஏதாயினும் உருப்படியான தீர்வோ, வேலைத்திட்டமோ கிடையாது. ஆகையினால் மலையக மக்களின் பாதுகாப்பு பற்றிய வெற்றுக் கூச்சல்களினால் எதுவித பயனும் இல்லை எனவே மலையக மக்களின் சூழ்நிலைகள் பற்றிய அனுபவ பூர்வமான அறிவோடு அதனூடாக தர்க்க பூர்வமான முடிவுகளை எடுத்துக் கொண்டு அந்த மக்கள் மத்தியில் இறங்கி வேலை செய்து ஒரு புரட்சிகர அரசியல் அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டியது இன்றைய புரட்சிகர சக்திகளின் முன்னுள்ள கட்டாயக் கடமையாகும்.

## களம் புகும் குழுக்களுக்கு

*"குமுறும் எரிமலை" ஜுலை 1986 இதழில் இயங்கங்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தி எழுதப்பட்ட ஆக்கம்.*

ஈழப் போராட்டக் களத்தில் நின்று ஆயுதமேந்திப் போராடும் குழுக்களிடையே அண்மைக் காலங்களில் ஏற்பட்ட பல நிகழ்ச்சிகள் மனதை உறுத்துவ தாயிருக்கின்றது.

எதிரியை நோக்கி ஆயுதத்தை ஏந்த வேண்டியவர்கள் சகபோராளிகளை நோக்கி ஏந்துவது எதிரிக்கு உதவி செய்வதாய் ஆகிவிட்டது. தொடர்ந்து குழுக்களிடையே நடந்து வரும் இந்தப் போராட்டங்கள் ஈழ மக்களிடம் மட்டுமன்றி தமிழ் நாட்டிலுள்ள மக்களிடையே ஒரு கசப்புணர்ச்சியை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றது.

நாட்டு விடுதலையே லட்சியம் எனக் கொண்டு போராடும் இவர்கள், தமது சுயலாபத்திற்காக தலைமையைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தம் குழுவில் உள்ளோர் கருத்து மாறுபட்டால் அவர்களைத் கொல்வது, சககுழுக்களை கசப்புணர்வால் அழித்தொழிப்பது விரும்பத்தக்க தொன்றல்ல.

அண்மையில் திருச்சி கொட்டப்பட்டு முகாமிலிருந்து இலங்கை அகதிகள் அருள், அண்டனி, பெர்னாண்டோ, நாதன், போன்றோர் கடத்திக் கொல்லப்பட்ட போது திருச்சி மாவட்டத்தில் மக்களிடையே எழுந்த கொந்தளிப்பை நாம் மறக்க முடியாது.

இதனைவிட ஈழத்தில் சிறிசபாரத்தினமும் அவரது சகபோராளிகளும், பொது மக்கள் பலரும் சிலரின் தவறான வழிகாட்டுதலால் பழிவாங்கப்பட்ட நிகழ்ச்சி ஏதோ யதார்த்தமாய் நிகழ்ந்ததாய் தென்படவில்லை இவர்களை ஏதோ ஒரு சக்திப ின்னாலிருந்து இயக்குகின்றது. என்பது பரவலாகப் பேசப்படும் உண்மை. எந்த உண்மைகளுமே வெகு நாட்கள் வெளிவராமல் பதுங்கி இருக்கப் போவதில்லை அது வெளிவரும் போது பலரின் முகத்திரை இங்கே கிழிக்கப்படும்.

போராட்டக் களத்தில் இறங்கியபின் இழப்புக்கள் நிச்சயம் உண்டு. அது தவிர்க்க இயலாததுதான். ஆனால் அந்த இழப்புக்கள் எமது வெற்றியை முன்னோக்கிச் செல்லத் தூண்டுவதாக இருக்க வேண்டுமே தவிர பின்னோக்கிச் செல்ல அல்ல ஆனால் சகபோராளிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவது எதனைக் காட்டுகின்றது? இந்தப் படுகொலைகளைக் கண்டித்தும் அதன் பின்விளைவுகளை விளக்கியும் ஈழத்துக் கத்தோலிக்கக் குரு ஒருவரின் அறிக்கையினை அணைவரும் படித்திருக்கலாம். இதைப் போன்று எண்ணற்றோர் தமது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தியிருப்பது எதனைக் காட்டுகின்றது.

தாமே ஈழமக்கள் முழுவதுக்கும் பிரதிநிதி என்று கூறிக் கொள்வதில் அர்த்தமில்லை ஏனெனின் எந்தக் குழுவுமே தற்போதைய கால கட்டத்தில் எல்லா மக்களினதும் ஆதரவைப் பெற்று விடவில்லை அது காலவோட்டத்தில் நிர்ணயிக்கப்படவேண்டியது. இந்நிலையில் மக்களின் சார்பில் தண்டனை வழங்குவதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை மக்களுக்கு இவர்கள் எந்த அளவுக்கு துணைபுரிந்திருக்கிறார்கள் என்பதை வைத்துத்தான் மக்கள் ஆதரவு இவர்களுக்கு எந்த அளவு கிடைக்கும் என்பதை நிர்ணயிக்க இயலும் .

தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற நிலையை இனியாவது இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தனது சுய பலத்தைக் காட்டி ஹீரோ ஆக முயற்சித்தால் அது இறுதியில் மக்களிடையே ஜீரோ ஆகும் நிலையைத் தான் ஏற்படுத்தும். போராடுவது மக்களே என்ற நிலை ஏற்படவேண்டும். மக்களின ஆதரவில்லாமல் எதனைச் சாதித்துவிட இயலும்.

மக்களின் நலனுக்காக மக்களின் துணை கொண்டு போராட அனைத்துக் குழுக்களையும் எரிமலை அழைப்பு விடுக்கிறது

## எழவேண்டும்

மண் தரண்டி கல்லுடைத்து
மலைதிருத்தி வாடி
விண்ணகத்து முகில்நனைய
விம்மியழும் தோழா
புண்படிந்த உன்வாழ்வு
புதுமையுற வேண்டும்
கண்ணயர பொழுதில்லை
கடமைபல உண்டு
உன் மூச்சு பட்ட இடம்
உயிர்பெற்று நிற்கும்
உன் கரங்கள் தொட்ட இடம்
துளிர்த்து அழகாகும்
உன்வாழ்வு காய்ந்த சரு
காகுவது மேனோ
என்ற நிலை அறியாது
ஏங்குவதும் ஏனோ
சாறெடுத்த தேயிலையை
சக்கையென கூறி
தூரஎறி வாரெனவே
துரைமகனார் இன்று
பாரதனில் நீ பிறந்த
நாள்முதலாயுந்தன்
சாறெடுத்த பின் இன்றோ
சக்கையென விட்டார்
இழந்திடவோ சொந்தமென
ஏதுமிலாத் தோழா
பிளந்திடவே உன்னிடமோ
பிறப்படிமையுண்டு
களமறியும் நாளுனக்கு
கட்டுடையும் நாளாம்
எழவேண்டும் உன் துயையாய்
ஒரு கோடி மக்கள்
நாடில்லை என்றுன்னை
நையாண்டி செய்வோர்
காடின்றி உன் கையில்
கணக்கென்ன வேண்டும்
மூடிற்று என் விரல்கள்
மொத்துதற்கு மட்டும்
கூடிற்று என் விரல்கள்
என்ற குரல் போதும்!

*தோழர் ஈழக்குமரன்*
*குமுறும் எரிமலை ஜுலை 86*

## உரிமை

தேனீர் சிவப்பினிலே - எங்கள்
செங்குருதி நிறம் காணும் !
இலங்கை வழங் கொழிப்பில்
இன்தமிழர் உயிர் காணும்!
மண்ணின் மணம் இன்றும் - தமிழ்
மனிதர் உடல் வாடையன்றோ!
இருள் நீக்கிய ஒளிக்கூட்டம்
இலங்கையை விட்டு ஓடுகின்றார்!
உழைத்து உருதருவோன்
உலகின் மைந்தனாகும்
எந்த இன மானாலும்
உழைப்பாளி ஓரினமே
உரிமைக்குப் போராடும்
வாழ்வுக்குப் போராடும்
இலங்கைத் தமிழனும்
சிங்களத் தோழனும்
ஒருமுகமாய்ப் போரிடுவோம்
உரிமைதனை வென்றிடுவோம்!

*வெள்ளையம்மா குன்னூரா*
*குமுறும் எரிமலை, அக். 86*




சிங்கள மக்கள மக்களை எமது போராட்டத்தின் எதிரிகளாக கருதாமல் 1985 ஏப்ரலில் ஈ.பி.ஆர்.எல்.எவ். சிங்கள மக்க ளுக்கு விடுத்த வேண்டுகோள் கைநூலாக வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கியத்தை வலியுறுத்தும் ஈழமுழக்கம்

**1984 மே மாதம் ஒற்றுமையை வலியுறுத்தி "ஈழமுழக்கம்" சஞ்சிகையில் வெளியான கருத்துக்கள்**

ஈழமக்களது புரட்சிகர விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கச் சிறீலங்கா அக்கிரமிப்பாளர்கள் குரூரமான படுகொலை நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். ஈழமக்கள் மீது தனது ஆயுதப்படைகளின் படுகொலைத் தாக்குதலை ஏவி விடுவதன் மூலம் ஈழவிடுதலைப் போராட்டத்தை திணறடித்து முறியடிக்க முடியும் என சிறிலங்கா நவபாசிச அரசு கருதுகிறது.

இந்நிலையில் விடுதலைக்கான முன்னோக்கிய பாதையில் மிகவும் நிதானமிக்க வேகத்துடன் ஈழ மக்கள் ஐக்கியப்பட்டு முன்னேற வேண்டும்.



ஈழ மக்களை விடுதலைக்கான திசைவழியில் கட்டுக்கோப்புடன், ஒழுங்கதைத்து வழிநடத்திச் செல்லும் பாரிய பொறுப்பு ஈழ விடுதலை இயக்கங்களுக்கு உண்டு.

இன்றுள்ள நெருக்கடியான கால கட்டத்தில் பாரிய பொறுப்புக்களைச் சுமக்கும் இயக்கங்கள் தமக்கிடையேயான புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் விடுதலைக்கான பாரிய பொறுப்புக்களை கூட்டு நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

இது எமது ஒற்றுமையின்மையை எதிரி தனக்குச் சாதகமான தாக்கிக் கொள்வதையும் பொது எதிரி எம்மை அழித் தொழிக்கும் போது கூட விடுதலை இயக்கங்கள் தமக்குள் துப்பாக்கிச் சண்டை நடத்தி அழிந்து கொள்ளும் போக்கையும் தடுத்து நிறுத்தும்.

ஈழமக்கள் ஈழத்தின் யதார்த்த நிலையால் ஒன்றுபடும் அவசியத்தை உணர்ந்துள்ளதுடன் போராடும் இயக்கங்களும் ஒன்றுபட வேண்டும் என விரும்புகின்றனர்.

ஆனாலும் ஈழ விடுதலை இயக்கங்கள் அக்கியப்பட்ட வேண்டுமானால் ஒவ்வொரு விடுதலை இயக்கமும் தனது தவறுகளைச் சுயவமர்சன அடிப்படையில் ஏற்றுக் கொள்ளவும் இதன் மூலம் இத்தவறுகள் தொடர்ந்தும் ஏற்படாது திருத்திக் கொள்ளவும் தயாராக இரக்க வேண்டும.

ஏனெனில் தவறுகள் என்பவை சரியானவற்றுக்கு எதிரானது போலவே புரட்சியின் நலன்களுக்கும் விரோதமானவையாகும்.

இதே போல் ஆக்கியப்பட்டுச் செயல்படும் இயக்கங்கள் தமது தனித்துவங்களை இழக்காது தமது இயக்கத்தையும் ஆயுதப்படையையும் பலமாக்கிக் கொள்ளும் வேலையில் அக்கியத்துக்கு விரேதமாக ஐக்கியத்தை பாதிக்கக் கூடிய வகையில் தமது



நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

இந்த ஐக்கியம் என்பது இயக்கங்களது தலைமைகளுக்கிடையே ஏற்படும் ஒன்றாக மட்டும் இருந்துவிடக் கூடாது. ஐக்கியப்பட்டுள்ள இயக்கத் தோழர்கள் புரட்சிக்கான நடைமுறை வேலைகளில் ஒவ்வொருவருக்கொருவர் உதவும் மனப்பான்மையுடனும் தோழமை உணர்வுடனும் செயலாற்றுவதன் மூலமே இயக்கங்களிடையேயான ஐக்கியம் நடைமுறைச் சாத்தியமாகும்.

இதைவிடுத்து ஐக்கியம் பேசியபடியே பிறிதொரு விடுதலை இயக்கத் தோழர்களை வெறுப்புடன் நோக்குவதும் காடைத்தனமாகத் தாக்குவதையும் தன்னை வளர்ததுக் கொள்ளும் வழிமுறையாகக் கொள்ளும் இயக்கங்களின் ஐக்கியம் என்பது அத்திவாரமற்ற கட்டிடத்திற்குச் சமமாகும். இப்படியான ஐக்கியம் எவ்விதமான முன்னேற்றத்திற்கும் வழிவகுக்காது. இது கடந்தகால கசப்பான அனுபவங்கள் கற்றுத்தந்த பாடமாகும்.

எனவே முதலில் உள்ளபடியே அக்கியத்தில அக்கறையுள்ள விமர்சனம் மூலம் தவறுகளை திருத்திக்கொள்ள தயாராக இருக்கும் இயக்கங்களே ஐக்கியப்பட்டு செயல்படும் முன்மாதிரியே ஏனைய விடுதலை இயக்கங்களையும் ஐக்கியத்திற்கான மார்க்கத்துக்கு இட்டுச் செல்லும்.

**ஈழமுழக்கம் மே 1984**

# சமூக விரோதிகள் ஒழிப்பு சரியான நடவடிக்கையா?

ஈழ மக்களுக்கு இப்போதெல்லாம் சமூகவிரோதி என்னும் சொல் மிகவும் பரிச்சயமானதொன்றாகிவிட்டது சில விடுதலை இயக்கங்களை சேர்ந்தவர்கள் ஒரு நபரை சமூக்விரோதி என முத்திரை குத்திச் சுட்டுக் கொல்வது அடிக்கடி நடக்கும் சம்பவங்களாகிவிட்டன. இதனைப் பத்திரிகைகளில் படிக்கின்றோம் நேரில் கூட கண்டிருக்கிறோம். இதைப் பற்றிப் பரவலாக மக்களிடையே பலவிதமான அபிப்பிராயங்கள் எழுந்துள்ளன. மக்களை வழிநடத்தும் சகல இயக்கங்களும் இதனைப் பற்றிய தங்களுடைய உறுதியான நிலைப்பாட்டினை மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டியவர்களாகின்றனர்.

பொதுமக்களின் உயிர், உடல், உடமைகளின், பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிப்பதில் நேரடியாக ஈடுபடுபவர்கள் சமூகவிரோதிகளெனக் கருதப்படுகிறார்கள். இவர்களை தேசத்துரோகிகளிடமிருந்து இனம் பிரித்துக் காண்பது முக்கியம். விடுதலைப் போராளிகளை அரசுக்குக் காட்டிக் கொடுப்பவர்கள், தமது சுயநல நோக்கங்களுக்காகத் தேச நலன்களுக்குக் குந்தகம் விளைவிப்பவர்கள், தேசத் துரோகிகளெனச் சொல்லப்படுகின்றனர்.

பொதுமக்களுக்கு எதிராக குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இனங்கண்டுகொள்ள மக்களுக்கு உதவவேண்டும். இது தவிர, கிராம மட்டங்களில் சிறு அளவுகளிலாவது சுய வேலை வாய்ப்பு திட்டங்களையும் பல்வேறு கூட்டுறவு முயற்சிகளையும் தோற்றுவிக்க வேண்டும். தனிநபர் பயங்கரவாதம் மக்களுக்குப் பெரும் பிரச்சினையைத் தோற்றுவிக்குமேயன்றி அதே ஒரு தீர்வாகாதென்பதை உணர வேண்டும்.

சமூக விரோதி மீதான இயக்கங்களின் நடவடிக்கைகள் சில இடங்களில் சொந்த விசயங்களுக்காகத் துஸ்பிரயோகம் செய்யப்பட்டதையும் கண்டோம். விடுதலை இயக்கங்கள் மக்களுக்குத் தாம் ஆற்றும் பங்கு என்ன என்பதையும் விடுதலைப் போராட்டத்தில் மக்களுக்குள்ள பங்கு என்ன என்பதனையும் தெளிவாக விளங்கிக் கொண்டால் தம் நடவடிக்கைகளிலும் சரியாக இருக்கலாம்.

தம் இன்னல்களைத் தாமே தீர்த்து வைக்க மக்களுக்கு இயக்கங்கள் கற்றுக் கொடுக்க வேண்டும் இதை விடுத்துத் தாங்களே நடவடிக்கை எடுப்பதன் மூலம் மக்களுக்குப் பொதுநலத்தையிட்டு இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியை மழுங்கடித்து விடுகின்றன. சமூகப் புல்லுருவிகளை

**சமூக விரோதி மீதான இயக்கங்களின் நடவடிக்கைகள் சில இடங்களில் சொந்த விசயங்களுக்காகத் துஸ்பிரயோகம் செய்யப்பட்டதையும் கண்டோம். விடுதலை இயக்கங்கள் மக்களுக்குத் தாம் ஆற்றும் பங்கு என்ன என்பதையும் விடுதலைப் போராட்டத்தில் மக்களுக்குள்ள பங்கு என்ன என்பதனையும் தெளிவாக விளங்கிக் கொண்டால் தம் நடவடிக்கைகளிலும் சரியாக இருக்கலாம்.**

மக்கள் இனங்கண்டுகொள்ள உதவுவதுடன் தீர ஆராயாது தண்டிப்பதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் தீர்வு காணும் தீர்க்கமான பங்கு தங்களுடையதே என மக்கள் உணர்ந்து கொள்வதற்கு இயக்கங்கள் தடையாக நிற்கக் கூடாது. பிரச்சினையின் தன்மையினை ஒட்டிப் பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பதோ, விசாரணை மன்றங்கள் அமைப்பதோ எதனையும் மக்களை இணைத்துக்கொண்டே நிறைவேற்ற வேண்டும்.

இதன் மூலம் அயலான் உதவிக்கு அழைக்கும் போது கேளாதவராய்த் தனி வாழ்க்கை வாழும் நிலையில் இருந்து மக்கள் முன்னேறியவர்களாகின்றனர்.

இதற்கு மாறாகக் காரண காரியங்களை ஆராயாது எவ்வகைக் குற்றங்களுக்கும் துப்பாக்கி தூக்குவோமேயானால் சமுதாயத்தில் அடக்கு முறைகளும் ஏதேச்சாதிகாரங்களும் மலிந்துவிட வழி வகுத்தவர்களாவோம். ஈழ மக்களின் உயிரைத் துச்சமென மதித்துக் கொன்று குவிக்கும் அரச படையினருக்கும், தம்மை விடுதலைப் போராளிகள் என்று கூறிக்கொண்டு சில இயக்கங்களைச் சார்ந்து திரிந்து நீதி நியாயமின்றிச் சுட்டுத் தள்ளுபவர்களுக்கும் என்ன வித்தியாசம்?

சாதாரண குற்றச் செயல்களுக்கெல்லாம் மரண தண்டனையையே வழங்கிடுவோமெனில் சனநாயகத்துக்கும், சமத்துவத்துக்கும் போராடுகின்றோம் என நாம் கூறுவதே போலி வேடமாகிவிடுகின்றது. நாமே சமூக விரோதிகளாகின்றோம்.

பகல் கொள்ளை நடத்திப் பகட்டாகப் பெரிய மனிதர் வேடம் போடும் உயர் மட்ட வர்க்கச் சமூக விரோதிகளை பாதுகாப்பாக உலவவிட்டு, ஏழை மக்களைக் கொன்றொழிக்கும் நடவடிக்கையாக சமூகவிரோதிகள் ஒழிப்பு நடவடிக்கை அமைந்துவிடக் கூடாது. தனிப்பட்ட பிரச்சினைகளையும், கோபதாபங்களையும் தீர்க்கும் கீழ்த்தரமான நடவடிக்கையாக சமூக விரோதிகள் ஒழிப்பு என்ற போர்வையில் தமது துப்பாக்கிகளை உயர்த்துவதை சில விடுதலை இயக்கங்கள் இனியாவது நிறுத்திக்கொள்ளட்டும்.

சரியான விசாரணை இன்றி, மக்கள் மத்தியில் புல்லுருவிகளை இனம்காட்டாது தண்டனை வழங்கும் வழிமுறைகளையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

மக்களை புரட்சிக்கு இட்டுச் செல்லும் பாதையை ஒருபோதும் கைவிட வேண்டாம்.

*ஈபிஆர்எல்எவ் வெளியீடுகளில் ஒன்றான ஈழமுழக்கம் சஞ்சிகையின் 1984 ஆண்டு அக்- நவ இதழில் பிரசுரமான கட்டுரையின் ஒருபகுதி இங்கு மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இது சமூகவிரோதிகள் தொடர்பாக, அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுவது தொடர்பாக அன்றைக்கே ஈபிஆர்எல்எவ் எத்தகைய நிலைப்பாட்டை கொண்டிருந்தது என்பதை தெளிவுபடுத்தும்.*

*இதற்கு மாறாக சமூக விரோதச் செயலில் ஈடுபடுபவர்களுக்கு இன்றும் மரண தண்டனைகள் வழங்கப்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிப்பவர்களுக்கு இந்தக் கருத்துக்களின் ஆழம் புரியும். அண்மையில் நல்லூரில் ஒரே நாளில் ஒரே இடத்தில் வைத்து மூவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பது மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை வணங்குகிறோம்– தியாகிகளே!



தோழர் பத்மநாபாவின் படுகொலையை கண்டித்தும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியும் 1990 அக்டோபர் 21ம் திகதி இங்கிலாந்தில் வில்லியம் மொறிஸ் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாண அரசின் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் அபு யூசுப், ஈரோஸ் இயக்கத்தின் ஸ்தாபகர் இரத்னசபாபதி, திருமதி சந்திரிகா குமாரதுங்கா, திரு. உபாலி குரே, திரு மாட்டின் அனல்ஸ் (மாட்டின் அனல்ஸ்ஸின் பேரால் மனித உரிமைகளை பேணிப் பாதுகாப்பவர்களுக்கான விருது வழங்கப்பட்டு வருகின்றது) ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

மானுடவர்க்கத்தின் மனிதப் பணபுகளுடன், அமைதி, சமாதானம், ஜனநாயகம் நிறைந்த சமதர்த வாழ்வை தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க போராடி மரணித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம தோழர் பத்மநாபாவும், பன்னிரு தோழர்களும், 1990 யூன் மாதம் 19ந் திகதி பாசிசப் புலிகளால் கோழைத்தனமாக சென்னையில் படுகொலை செய்யப்பட்டு பதினேழு ஆண்டுகளாகி விட்டன.

ஈழத்தமிழர் வரலாற்றின் துயர்மிகு இந்நாளே, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால், "தியாகிகள் தினம்" எனப் பிரகடனப்படுத்தப்பட்டு உலகெங்கும் வாழும் ஈழத்தமிழ்மக்களால் நினைவு கூரப்பட்டு வருகிறது.

தமிழ்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தில் மரணித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஆற்றல் மிகு தோழர்களுக்கு மட்டுமல்ல, சகஇயக்கப் போராளிகளுக்கும், பலி கொள்ளப்பட்ட பொது மக்களுக்கும் வீரவணக்கம் செலுத்தும் தினமே "தியாகிகள் தினம்".

சிங்களப்பேரின ஏதாச்சிகாரத்திற்கு எதிராக, தமிழர்களின் விமோசனத்திற்காக போராட தங்கள் உயிரை துச்சமாக எண்ணிப் போராட முன்வநத எத்தனை எத்தனை நல் மாந்தரை நாம் பறிகொடுத்து விட்டோம்!

அனைத்து ஈழத்தமிழர்களுமே வெட்கப்படவும், வேதனைப்படவும் வேண்டியது என்னவெனில், இவர்களில் அநேகரது உயிர்களை பறிதததது அரசபடைகள் அல்ல, புலிகள் இயக்கமே!

பாசிசப்புலிகளின் பேடித்தனமான படுபாதக கொலைகளுக்கு பலியாகிப் போன மாந்தர்கள்தான் எத்தனை, எத்தனை! — தலைவர்கள், போராளிகள், புத்திஜீவிகள், சாதாரண பொதுமக்கள் பலர், தேசத் துரோகிகள், சமூக விரோதிகள், எனச் சித்தரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுவிட்டார்கள். அவையெல்லாம் ஈழத்தமிழ்த் தாயை தலை குனிய வைத்த கொலைகள்! ஈழப்போராட்டத்தின் திசையைத் திருப்பிய கொலைகள்!

சிங்களவர் தமிழரைக் கொன்றால் அது இனப் படுகொலை!

இலங்கை இராணுவம் தமிழரைக் கொன்றால் அது ஆக்கிரமிப்புக் படுகொலை!

புலிகள் தமிழரைக் கொன்றால் அதற்குப் பெயர் தமிழ் ஈழ விடுதயைா?

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள், ஈழ விடுதலைப் போராட்டத்துடன் தங்களை இணைத்துக் கொண்டு வாழ்ந்த எத்தனையோ எமது பாசமிகு தோழர்கள் எம்மிடமிருந்து பிரிக்கப் பட்டுவிட்டார்கள்.

தமது மக்களை நேசித்து போராட்டத்தில் இணைந்த ஆயிரமாயிரம் சகோதர சகோதரிகளை, எங்கள் சமூகத்தின் அரசியல தலைவர்கள், புதத்திஜீவிகள், சாதாரண மக்கள் எனப் பலரை, ஈவிரக்கமின்றி படுகொலை செய்து விட்டார்கள்.

இவர்களின் இழப்பு, தமிழ்பேசும் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு!

புலிகளின் பதவி மோகத்தினால் ஏற்படுத்தப்பட்ட இப் படுகொலைகள், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உட்பட சக இயக்கங்களின் தடை, மக்களின் ஜனநாயக உரிமைகள் மறுப்பு, பேரினவாத ஸ்ரீலங்கா அரசு மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் உக்கிரமம் அடைவதற்கு காரணியாகி விட்டன! — தமிழ் மக்களின் போராட்டம் திசை மாறுவதற்கு மூலகாரணமாகி விட்டன!

## தியாகிகளே!

கலங்கரை விளக்காக இருந்த நீங்கள் மறைந்ததால், இன்று தமிழ்ப்பயங்கரவாதிகள ஒரு பக்கத்தாலும், சிங்களப் பேரினவாதம் மறுபக்கத்தாலும் நாளாந்தரம் நசுக்க, எம் தமிழ்பேசும் மக்கள் இருதலைக் கொள்ளி எறும்புகளாக சொல்லொணா இண்ணல்களை அனுபவித்து வருகிறார்கள்.

சமாதானம, அமைதி என்பதெல்லாம் கானல் நீராகிப் போய் விட்ட துர்ப்பாக்கிய நிலையில், கொலை, கொள்ளை, கப்பம், பட்டினிச்சாவு, வரிவிதிப்பு, வறுமை எனும் வாழ்க்கை முறைக்குள் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குருட்டுத் துப்பாக்கி ஏந்தும், வரட்டுச் சித்தாந்தம் கொண்ட முரட்டு வாதிகளால், இடிபாடுகளுக்கு மத்தியில் இருட்டு வாழ்க்கையில் செக்காடுகள் .போல், செம்மறி ஆடுகள் போல் வாழ்கிறார்கள்.

நிலங்களற்று, நிலையிழந்து, பலமிழந்து, மலங்க விழித்து, கலங்கி நிற்கிறார்கள்.

ஒரு அதீத வன்முறை நோயாளிகளின் வீம்பிற்காக வீடுகளிலிருந்தும் இளஞ்சிறார்கள இழுத்துச் செல்லபடுகிறார்கள். கொலைஞர்களும் கொள்ளையர்களுமே கோலேச்சுகிறார்கள்.

புலிகள் அதிகாரமும் கொடூரமும் எங்கள சமூகத்தையே உள்ளிருந்து அழித்துவிட்டன.

## மக்களே!

கொடூரங்கள் நடந்தபோது நீங்கள் மௌனமாக இருந்தீர்கள்!

புலிகளால் மற்றைய இயக்கங்கள் தடை செய்யப்பட்டபோது மெனமாக இருந்தீங்கள்!

புலிகளுடன் இணங்கிப்போகாத மற்றைய இயக்கப் போராளிகள், தலைவர்கள், புத்திஜீவிகள் குற்றியிரும் குலையுயிருமாக எரியூட்டப்பட்டபோது மௌனமாக இருந்தீர்கள்!

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமைத்துவத்தில், திருகோணமலையை தலைமைச் செயலகமாக வைத்து செயற்பட்ட இணைந்த வடக்கு கிழக்கு மாகாண அரசினை இல்லாமலாக்குவதற்கு பிரேமதாசாவுடன் கூட்டுச்சேர்ந்து புலிகள் நாசவேலைகள் புரிந்தபோது மௌனமாக இருந்தீர்கள்!

பிரேமதாசாவிடம் பணமும், ஆயுதங்களும் பெருவாரியாகப் பெற்று இந்தியாவுடன் புலிகள் யுத்தத்தை தொடர்ந்தபோது மௌனமாக இருந்தீகள்!

எம்முடன் ஒன்றாக வாழ்ந்த முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டபோது, இரவோடிரவாக விரட்டப்பட்டபோது, மௌனமாக இருந்தீர்கள்!.

எம் ஊரவர் கொல்லப் பட்டனர் — நாம் ஏன் என்று கேட்கவில்லை! எம் அணடை அயலவர் கொல்லப்பட்டார்கள் — நாம் ஏனென்று கேட்கவில்லை! இறுதியில் நாமே அழிவின் விளிம்பில் நிறுத்தப்படடிருக்கிறோம்— ஏனென்று கேட்க யாரும் இல்லை!

இன்று, வடக்கு கிழக்கின் அவலத்தையும், புலிகளின் அரசியல் வறுமையால் போரின வாதிகளின் கைகள் ஓங்கியிருப்பதையும் நீங்கள் உணர்கிறீர்கள்!

ஈவிரக்கமற்ற யுத்தமும், தமிழர்களின் தலைமை என்று துப்பாக்கிமூலம் அந்தஸ்து கோரும் சர்வாதிகாரப் போக்கும் மக்களையும் அரசியல் கட்சிகளையும் பிரித்துவிட்டது. உற்றம் சுற்றம் நண்பர்கள், உடன் பிறந்தவர்கள், தாய், பிள்ளை, தந்தை, தனயன் எல்லோரையும் பிரித்துவிட்டது. ஈழத்தமிழினம் தேய் பிறையாகி வருகிறது!

இப் போர் சிங்கள பேரினவாதத்திற்கும் புலிப் பாசிசத்திற்குமிடையே நடைபெறும் ஆதிக்கப் போட்டியேயன்றி, சிங்கள, தமிழ், முஸ்லிம் பொதுமக்களின் சுபீட்சத்திற்காக நடாத்தப்படும் போரல்ல.

உங்களைப்போலவே, பெருவாரியான சிங்கள மக்கள் யுத்தத்தை வெறுக்கிறார்கள். யுத்தத்தின் சுமைகள் அவர்களின் அன்றாட வாழ்க்கையையும் அழுத்துகின்றன. யுத்தத்திற்காக வடகிழக்குக்கு அனுப்பப்படும் தமது பிள்ளைகள் உயிருடன் திரும்பவேண்டுமென்று உங்களைப்போலவே அவர்களும் நேர்த்திகள் வைக்கிறார்கள்.

உள்நாட்டு பத்திரிகைகளும், புலம் பெயர்ந்தோர் நடாத்தும் புலிசார்பு ஊடகங்களும் தங்களது வியாபார நோக்கிற்காகவும், புலிகள் மேல் சவாரி செய்தால் பயமில்லாது தங்களை தக்க வைத்துக் கொள்ளலாம் என்ற நோக்குடனும், புலிகளை அண்டி தமிழ் பேசும் மக்களை அடகு வைத்து தம் பிழைப்பை நடாத்துகிறார்கள். இதனால் உண்மைக் காரணங்கள் உங்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை.

நாம் உண்மைக்காரணங்களை அறிவுபூர்வமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒரு எஜமானர்களின் அடிமையிலிருந்து எங்களை மீட்பது இன்னொரு எஜமானர்களின் அடிமைக்கு நாம் ஆளாவதாக அமைந்துவிடக் கூடாது.

நாம் பயத்திலிருந்து விடுபடவேண்டும். சுதந்திரமாக எவர்க்கும் அஞ்சாமல் கருத்துக்கூறும், செயற்படும் நிலை ஏற்படவேண்டும்.

நாம் தமிழ்பேசும் மக்களின் உண்மையான ஜனநாயகத்திற்கும், மனிதஉரிமைகளுக்கும், பொருளாதார சுபீடசத்திற்கும் நாட்டின அனைத்து மக்கள் நலனுக்கும் தொடர்ந்து உழைப்போம்.

ஓ! தியாகிகளே! — உங்கள் மரணம் ஒரு முடிவல்ல!

மக்களுக்காக மண்ணை நேசித்த உங்களது பணிகள் நிறுத்தப்பட்டிருப்பினும், உங்களது, செழுமையால், தியாகத்தால் வளர்க்கப்பட்ட தோழர்களால் அப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். நீங்கள் என்றும் எம் நெஞ்சங்களில் நிறைந்திருப்பீர்கள்!

— உங்களுக்கு தலை வணங்குகிறோம் தியாகிகளே!

# கட்சியின் முன்னணி அமைப்புக்கள்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் **(EPRLF)** வெகுஜன அமைப்பான ஈழ மக்கள் விடுதலை முன்னணி **(EPRLF)** இணைச் யெலாளரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினருமான தோழர் டெவிற்சன் ஈழ முழக்கத்திற்கு அளித்த பேட்டி.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெகுஜன அமைப்புகளை கட்டியெழுப்பியுள்ளதின் நோக்கம் என்ன?

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எதிரிக்கு தலைமறைவாகவே ஆரம்பம் முதல் இயங்கவேண்டி ஏற்பட்டது. ஆக்கிரமிப்பாளர் குறுகிய ஜனநாயக உரிமைகளை அன்று விட்டுவைத்திருந்தார்கள் சட்ட விரோத வேலைகளைச் சட்டபூர்வமான வேலைகளுடன் இணைத்துச் செல்ல எமது மத்திய கமிட்டியின் அரசியல் பீடம் வேலைத்திட்டமொன்றைவகுத்தளித்தது.

இதன்படி கிராமியத் தொழிலாளர் விவசாயிகள் முன்னணி, ஈழப்பெண்கள் விடுதலை முன்னணி, ஈழ வாலிபர் முன்னணி போன்ற அமைப்புக்கள் கட்டியெழுப்பபட்டன. இந்த அமைப்புக்களில் இவற்றுக்கு வழிகாட்டிச் செல்ல சட்டவிரோத வேலைகளைச் சட்ட பூர்வ வேலைகளுடன் இணைக்கும் வழிமுறைபற்றி கற்றறிந்த எமது கட்சித் தோழர்கள் நியமிக்கப்பட்டார்கள். எமது வெகுஜன அமைபபுக்களை அழுங்கமைத்து ஈழ மக்கள் விடுதலை முன்னணி என்னும் வெகுஜென முன்னணியாக கட்டியெழுப்பினோம்.

ஆனால் இன்று நவ பாசிசத்தன்மை அடைந்துள்ள சிறிலங்கா அரசு மிகக்குறுகிய முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளையும் மக்களிடமிருந்து பறித்தெடுத்துள்ளது. ஈழ மக்கள் விடுதலைப் போராட்டத்தின் குரல் வளையை நெரித்துவிட சர்வதேச மனித உரிமைகளுக்கே சவால் விடும் சட்டங்களை உருவாக்கியிருக்கிறது.

எனவே ஈழ மக்கள் விடுதலை முன்னணியும் எதிரிக்கு தலைமறைவாகவே இயங்க வேண்டியுள்ளது. இப்போதும் ஈழ மக்கள் விடுதலை முன்னணி ஈழப் புரட்சியின் குறிக்கோளை மக்களுக்கு தெளிவு படுத்தி தேசிய விடுதலையில் அக்கறையுள்ள அனைத்து மக்கள் பிரிவுகளையும் அணிதிரட்டும் பணியை தொடர்கிறது.

மக்களைப் பார்வையாளர்களாக் கருதும் தனிநபர் சாகசங்களில் அதீத நம்பிக்கை கொண்ட இயக்கங்களினால் ஏற்படுத்தபடப்டுள்ள மாயையிலிருந்து மக்களை மீட்டெடுத்து அவர்களை செயலரங்குக்கு கொண்டுவர எமது வெகுஜனப் பிரிவுகள் தொடர்ந்தும் செயற்படும்.

அது மட்டுமன்றி எமது வெகுஜனப் பிரிவுகள் மூலம் சிறந்த புரட்சிவாதிகள் இனம் காணப்படுகிறார்கள். இதனால் எமது கட்சிக்கு பெருமளவான உறுப்பினர்களைக் கொண்டு வரமுடிந்தது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு உறுப்பினர்கள் இலகுவில் தெரிவு செய்யப்படுவதில்லை. பாட்டாளி வர்க நலன்களில் உறுதியான அக்கறை மார்கசிய - லெனினிய சிந்தனை மீது நம்பிக்கை, தமது நலன்களை கட்சியின் நலன்களுக்கு கீழ்ப்படுத்தும் தன்மை கட்சியின் வேலைத்திட்டங்களைப் பூரணமாக ஏற்று அவற்றின் வெற்றிக்காகப் பணியாற்றுவது என்னும் தன்மை கொண்டவர்கள் மட்டுமே ஈழ மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களாகலாம்.

ஆனால் எமது வெகுஜனப் பிரிவுகளில் தேசிய விடுதலையில் அக்கறையுள்ள எவரும் உறுப்பினராக சேரலாம். மக்கள் விடுதலைப்படையிலும் சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஈழ தேசிய விடுதலையில் அக்கறையுள்ள எவரும் உறுப்பினராகச் சேர்துக் கொள்ளப்படுவர்.

வெகுஜனப் பிரிவுகளிலும், இராணுவப் பிரிவுகளிலும் உ்ள்ள தோழர்களின் நடவடிக்கைகள் அவதானிக்கப்படுவதுடன், அவர்களுக்கு புரட்சிகர கல்வியும் போதிக்கப்படுகிறது. இதன் மூலம் கட்சி தோழர்களாக உயரும் வாய்ப்பை பல தோழர்கள் அடைந்துள்ளனர்.

ஈழமுழக்கம் மே 1984

## ஒரு அடிமையின் கல்லறையில்....!

உன் நண்பர்களெல்லாம் —
புத்தரின் புத்திரர்களால்
படுகொலை
செய்யப்பட்டனர்.
உன் அயலவர்கள் —
வதை முகாம்களில் எதிரிகளால்
வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் !
உன் சகோதரன் —
எங்கே என்றே தெரியாமல்
மனித வேட்டையாடும்
மிருகங்களால்
இரவோடு இரவாய்
புதைக்கப் பட்டு விட்டான்!
உன் தங்கையை!
ஆட்டுக்குட்டியை தூக்குவது போல்
தூக்கிச் சென்று
அவள்
கதறக் கதறச் சிதைத்து
வீசியெறிந்து விட்டனர்.
ஓ! என் நண்ப!
நீ
என்ன செய்து கொண்டிருக்கிறாய்!
இப்போதும் —
இப்போதும்
நீ
போராடாவிட்டால்?
நான்
ஒரு கல்லை எடுத்து வைக்கிறேன்
உன் சமாதியில் வைப்பதற்காக!
நான்
கவிதை யொன்று
எழுதிவைக்கின்றேன்.
ஒரு அடிமையின்
கல்லறையில்
பொறிப்பதற்காக!
ஒரு அடிமையின்
கல்லறையில்
பொறிப்பதற்காக!

ஈபிஆர்எல்எவ் வெளியீடான ஈழமுழக்கம் சஞ்சிகையில் மே 1984 இல் வெளியான தோழர் செழியனின் கவிதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1983 ஜூலை நினைவுகள்

## வெலிக்கடை சிறை படுகொலை தொடர்பாக

அண்ணாமலை வரதராஜப்பெருமாள்

நான் அப்போது யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின பொருளியற் துறையில் தற்காலிக விரிவுரையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன் அதே வேளையில் பொருளியற் கல்வியில் MA பட்டபடிப்பிலும் ஈடுபட்டிருந்தேன் அதற்கான முதலாண்டுத் தேர்வினை 1982லேயே பூர்த்தி செய்திருந்தேன். அப்பட்டத்துக்கான இறுதி ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பது மட்டுமே பாக்கியிருந்தது.

1983ம் ஆண்டு மார்ச் மாத இறுதிப் பகுதியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கார்ல் மார்க்ஸ் மறைந்த நூறாண்டு நிறைவு நினைவாக ஒரு கருத்தரங்குத் தொடரொன்றை மட்டக்களப்பில் சத்துருக்கொண்டான் என்ற இடததில் ஒழுங்கு செய்திருந்தது. தோழர் பத்மநாபா அவர்கள் அதில் என்னைக் கலந்து கொள்ளும்படி செய்தி அனுப்பியிருந்தார். தோழர் சுகுவும் (சிறிதரன்) தோழர் கமலும் என்னிடம் நேரடியாக வந்து வற்புறுத்தினர். உண்மையில் அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த தனியார் ரியூசன் நிறுவனங்கள் பலவற்றில் உயர் கல்வி தராதர வகுப்பு மாணவர்களுக்கு அளவையியல் மற்றும் பாடங்களில் ஆசிரியராகவும் கட்மையாற்றிக் கொண்டிருந்தேன். அந்த மாணவர்களுக்கான பரீட்சை நாட்களும் அண்மித்துக் கொண்டிருந்தமையினால் எனக்கு யாழ்ப்பாணத்தை விட்டு சில நாட்கள் கூட வெளியே போய்வருவது அப்போது சிரமமாக இருந்தது. எனினும் தோழர்களின் வேண்டுகோளகளை மறுக்கமுடியாமல மட்டக்களப்பு செல்ல ஒப்புக் கொண்டேன்.

தோழர் நாபா அவர்கள் ஏற்கனவே இவ்வாறானதொரு கருத்தரங்கை கண்டியிலும் ஒழுங்கு செய்திருந்தார். அப்போது அதில் கலந்து கொண்டதில் எனக்கும் பயனாக இருந்தது. அன்றைய காலகட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது வடக்கு-கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் உறுப்பினர்கள் மத்தியிலும் ஆதரவான இளைஞர்கள் மத்தியிலும் அரசியற் கல்விப் பாசறைகளை நடாத்துவது வழமையாக இருந்தது. அதில் இலங்கையின் அரசியல் வரலாறு, தமிழ் இளைஞர் இயக்கங்களின் அரசியல் வரலாறு, மார்க்சிய சமூக-அரசியல்-பொருளாதார சித்தாந்தங்கள், சர்வதேச புரட்சிகர இயக்கங்கள் என கலவிப் பாசறைகளை அவ்வப்போது நடாத்திக் கொண்டிருந்தது. பல சந்தர்ப்பங்களில் அவற்றில் கேட்போனாகவும், பேச்சாளனாகவும் பங்குபற்றியிருக்கிறேன். நான் மட்டக்களப்பு சென்றதும் அதன் தொடர்ச்சியாகவே இருந்தது.

அப்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நிறுவன ரீதியான உறுப்பினனாக இருக்கவில்லை. ஈழ விடுதலைப் போராட்டத்தின் பொதுவான ஆதரவாளனாகவே இருந்தேன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினர்களோடு மட்டுமலலாது, தமிழீழ விடுதலைப் புலிகளின் அப்போதய முன்னணி உறுப்பினர்களோடும் ஈழப் புரட்சியமைப்பின் அப்போதய முன்னணி உறுப்பினர்களோடும் நெருக்கமான தொடர்புடையவனாக இருந்தேன்.

இருப்பினும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னணி அமைப்புக்களான ஈழ மாணவர் பொது மன்றம் மற்றும் கிராமிய தொழிலாளர்கள் விவசாயிகள் முன்னணி ஆகியவற்றின் செயற்பாடுகளோடே நான் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்தேன். அப்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கட்சியமைப்பு பற்றியோ அல்லது அதன் கட்டமைப்புரீதியான செயற்பாடுகள் பற்றியோ நான் அறிந்திருக்கவில்லை. ஆயினும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியற் சிந்தாந்த நிலைப்பாடுகள், தோழர் பத்மநாபாவை பல ஆண்டுகள் அறிந்திருந்தமையின் அடிப்படையில் அவர்மீது எனக்கிருந்த நம்பிக்கை மேலும் தோழர் சுகு மற்றும் கமல் ஆகியோரின் அரசியல்ரீதியான ஆர்வத்திலும் உழைப்பிலும் நான் கொண்ட மதிப்பு இவையே என்னை ஈ.பி.ஆர்.எல்.எவ் வோடு நெருக்கமாக வைத்திருந்தன.

மேற்குறிப்பிட்ட கருத்தரங்குக்காக நானும் அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் MA படித்துக் கொண்டிருந்த மகேஸ்வரராஜா என்பவரும் மட்டக்களப்பு சென்றோம். அந்தக் கருத்தரங்கில் தமிழர்கள் மட்டுமல்லாது கொழும்புப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களாக இருந்த லக்சிறி பெர்னாண்டோ, புல்சாரா, தயான் ஜயதிலகா மேலும் மனித உரிமைப் போராளியாக இருந்த ஜோ செனிவிரத்னா போன்றவர்களும் பங்கு பற்றியிருக்கிருக்கிறார்கள் என் பதை அறிந்து கொண்டேன். தோழர் நாபா அவர்களும் அங்கே இருந்தார். அப்போது அவர் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்ததனால் தலைமறைவாக இருந்தே இவ்வாறான அரசியல் இயக்கங்களை வழிநடத்தி வந்தார்.

மூன்று நாட்கள் நடந்த அந்தக் கருத்தரங்கில் ஐம்பதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பங்கு பற்றினர். கருந்தரங்கு முடிந்த இறுதி நாளின் மதியத்திலிருந்து பெரும்பாலானோர் அவரவரது இடங்களுக்கு திரும்பி விட்டனர் நானும் மகேஸ்வரராஜாவும் அன்றைய மாலை பஸ்ஸில் யாழ்ப்பாணம் திரும பலாம் என்றிருந்தோம். ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினாகளில் ஒரு பகுதியினர் இறுதி வேலைப்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். சுமார் மாலை மூன்று மணியளவில் திடீரென மட்டக்களப்பு பொலிசார் அங்கே வந்தனர். சட்ட விரோதமான எதையும் செய்யாததால் பொலிஸ வருவதைக் கண்டும் நாங்கள் எதுவும் பதட்டப்படவில்லை. இருப்பினும் பத்மநாபா போன்றவர்கள் அந்த இடத்தை விட்டு விலக வேண்டியிருந்தது பிரதான வீதியிருந்து திரும்பி எமது இடத்தை பொலிஸ் வந்தடைவதற்குள் பத்மநாபாவுடன் வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் மறைந்து விட்டார்கள்.

நானும், மகேஸ்வரராஜாவும், சுந்தரலிங்கம், சிவா, பேரின்பநாதன், பத்மநாதன், தம்பித் தோழர், போன்ற பத்து ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு DIG மகேந்திரன் எங்களை விசாரணை செய்தார். எங்கள் மீது சட்டவிரோதமான் குற்றம் எதுவும் இல்லையென்று தெரிந்திருந்தும் எங்களை அவசரகாலச் சட்டத்தின கீழ் CID யின் விசாரணைக்காக கொழும்புக்கு அனுப்ப வேண்டிய அரசியற கட்டாயம் அவருக்கு இருந்திருக்கிறது. அங்கிருந்து நாங்கள் கல்முனை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு பல்வேறு கோணங்களில் படங்கள் எடுக்கப்பட்டு பின்னர் இரண்டு செல் அறைகளில் ஆறாறு பேராக அடைக்கப்பட்டோம். காலை ஒருவருக்கு மேல் நீட்டித்தான் பெரும்பாலும் இரவு முழுவதுவும் இருந்தபடியே நித்திரை கொண்டோம். அங்கே ASP நவரட்ணராஜா பொறுப்பதிகாரியாக இருந்தார். அப்போதைய காலகட்டத்தில் தமிழ் பொலிஸ் அதிகாரிகள் தமிழ் அரசியற் கைதிகள் விடயத்தில் நியாயமான அனுதாபத்தைக் கூட காட்ட முடியாததொரு நிர்வாக அடிமைகளாகவே இருந்தார்கள் - இப்போதும் கூட அந்த நிலைமை மாறவில்லை என்றுதான் கூற வேண்டும்.

மார்ச் 31–1983ல் சத்துருக்கொண்டானில் கைது செய்யப்பட்ட நாங்கள் ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பு நோக்கி கொண்டு செல்லப்பட்டோம். காலை பத்து மணியளவில் எங்களைக் கொண்டு செல்லும் தயாரிப்புக்கள் நடைபெற்றதால் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களின் உறவினர்கள் நண்பர்களென பெருந்தொகையானோர் கல்முனைப் பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் கூடிவிட்டனர். எனவே நாங்கள் கொழும்பு நோக்கி கொண்டு செல்லப்படுவது பகிரங்கமானதாகியது. ஏனைய தோழர்களின் ஊடாக எங்கள் வீடுகளுக்கும் செய்திகள் போய்ச் சேர்ந்தன. அன்று ஏப்ரல் முதலாம் திகதி என்பதால் எனது மனைவி அது ஏப்ரல் முட்டாள் என ஆக்குவதற்கான விளையாட்டுச் செய்தியென்றே எடுத்துக் கொண்டார் மீண்டும் தோழர்கள் உண்மையென வற்புறுத்திக் கூறியே அவரை உண்மையென்று நம்பவைத்தனர்.

என்னைப் பொலிஸார் கைது செயததனால் வீட்டைச் சோதனையிடுவதற்காக பொலிஸோ அல்லது ஆமியோ வீட்டுக்கு வரக்கூடும் என எனது வீட்டுக்காரர்கள் எதிர்பார்த்தே இருந்தனர். எதிர்பார்த்தபடியே ஏப்ரல் 02 ந்திகதி மதியமளவில் ஆமிக்காரர்கள் வீட்டைச் சோதனையிட்டுவிடடு எனது மனைவியை விசாரணைக்காக வரும்படி கூறி விட்டுச் சென்றனர். முதல் நாள் இரவே எனது நெருங்கிய பல்கலைக்கழக நண்பரும், ஈ.பி.ஆர்.எல்எவ் தோழருமாக வீட்டிலிருந்த அரசியல் சார்ந்த புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை வேறிடத்துக்கு அப்புறப்படுத்திவிட்டனர்.

ஏப்ரல் 3ந் திகதி எனது மனைவி அவரது தந்தையாருடன் இராணுவ முகாமுக்குச் சென்றார். அவர்களைக் கண்டதும் அந்த இராணுவ அதிகாரி மிகவும் கௌரவமாக கதிரையில் உட்கார வைத்து மிகவும் பண்பான முறையிலேயே கேள்விகளையும் கேட்டிருக்கிறார். விசாரணை முடிந்ததும் அந்த அதிகாரி எழுந்து போய்விட்டார். அவ் வேளையில் ஒரு தமிழ் முஸ்லிம் நபரே மொழி பெயர்பாளராகச் செயற்பட்டார். அந்த சிங்கள அதிகாரி போய் சுமார் அரை மணித்தியாலங்களின் பின்னர் எனது மாமனார் விசாரணை முடிவடைந்துவிட்டதா? நாங்கள் போகலாமா என்று அந்தத் தமிழ் முஸ்லிம் அதிகாரியிடம் கேட்டார். அதற்கு அவர் விசாரணை எப்பவோ முடிந்து விட்டது நீங்கள் போறதெண்டாலும் போகலாம் இல்லை இருக்கிறதெண்டாலும் இருக்கலாம் என்று கிண்டலடித்திருக்கிறார்.

தமிழர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த மாதிரியான துறைகளில் இருப்பவர்கள் பெரும்பாலும் சிங்கள அதிகார அமைப்பில் அடிமைத்தன விசுவாசத்துக்கு ஆட்பட்டே இருக்கிறார்கள். இவ்வாறானவர்கள தமது பதவிகளிலிருந்து இளைப்பாறியதன் பின்னர் அதற்குத் தலைகீழாக தமது இன சமூகம் பற்றி மிக அதிதீவிரமான அக்கறையுள்ளவர்கள் போல நடந்து கொள்கிறார்கள்.

கொழும்பு கொண்டு செல்லப்பட்ட நாங்கள் நேரே CID விசாரணைக்காக [illegible] கொண்டு செல்லப்பட்டோம். அங்கு எமது வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டன. இரண்டு நாட்களின் பின்னர் மகஸின் சிறைக்கு கொண்டு வரப்பட்டோம்.

என்னையும் மகேஸ்வரராஜாவையும் தனிமைப்படுத்தி அதிக காவல் கொண்ட சிறைப்பகுதியில் தனித்தனி அறைகளில் அடைத்தார்கள். மற்றவர்களை அதற்குப் பக்கத்தில் இருந்த இன்னொரு சிறைப்பகுதியில் வைத்தார்கள்.

சிறிது நேரததில் எங்களைக் கொண்டிருந்த சிறைகட்டிடத்திலேயே காங்கேசன்துறையைச் சேர்ந்த வாமதேவனும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு கொண்டேன். வாமதேவன் 1975ம் ஆண்டு காங்கேசன்துறை இடைத் தேர்தல் காலத்தில் திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கு கார் வாகன ஓட்டியாக இருந்தார். அந்தத் தேர்தற் பிரச்சாரத்தின் போது முழு நேரமாக நான் ஈடுபட்டிருந்ததால் வாமதேவன் எனக்கு ஏற்கனவே அறிமுகமானவராக இருந்தார். இவர் மட்டக்களப்பு பரமதேவா மற்றும் சிலரோடு செங்கலடி வங்கிக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டிருந்தார். இவர் பல வருடங்களாக அந்த சிறையில் தொடர்ந்து இருந்ததால் அந்த சிறையின் அதிகாரிகளோடும் மற்றும் நீண்டகால சிறைக் கைதிகளோடும் நன்கு பரிச்சியப் பட்டிருந்தார். அவரைக் கண்டது எனக்கு ஒரு மனோ தைரியத்தைத் தந்தது. மேலும் அவர் எமக்கு பல்வேறு வகையிலும் உதவியாகவும் இருந்தார். இவரே பிற்காலத்தில் புளொட் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இருந்தார்.

1986ல் புளொட்டில் ஏற்பட்ட உள்ளியக்கப் பிரச்சினைகளின் போது விலகிப் போய்விட்டார். மும்பேயின் கள்ளக கடத்தல் உலகில் பிரமுகராகிவிட்டதாக பின்னர் இந்திய சஞ்சிகை ஒன்று தகவல்கள் வெளியிட்டிருந்தது.

நாங்கள் இருந்த சிறைப்பகுதியில் கடுங்காவல் தண்டனைக் கைதிகளாக இருவர் இருந்தனர். அதில் ஒருவரே 'அக்குண சந்ரே' என அழைக்கப்பட்ட ஹேமச்சந்திரா எனப்படுபவர். மற்றவர் மருதானைப் பகுதியைச் சேர்ந்த பல கொள்ளைகளில் ஈடுபட்ட கடுங்காவல தண்டனைக் கைதி. அவர் ஒரு இஸ்லாமியர். அவரின் பெயர் என் நினைவிலில்லை. இவர்களுடன் வாமதேவன் மிகவும் நல்ல உறவுடன் இருந்தார். அது எமக்கும் அவர்களோடு விரைவில நண்பர்களாக இருக்க உதவியாக அமைந்தது.

என்னோடு மட்டக்களப்பில் கைதான மற்ற பத்து பேரும் கிழக்கு மாகாண மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அவர்கள் வைக்கப்பட்டிருந்த மகஸின் சிறைப்பகுதியில் ஏற்கனவே தங்க மகேந்திரன் என்பவரும் தண்டனை பெற்ற கைதியாக வைக்கப்பட்டிருந்தார். தங்க மகேந்திரன் 1975ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின முக்கியமான தலைவர்களில் ஒருவராவார். இவர் 1976ம் ஆண்டு நடைபெற்ற புலோலி வங்கிக் கொள்ளை வழக்கில் தண்டனை பெற்றிருந்தார்.

அந்தப் பகுதியிலேயே இன்னொரு சிறைக்கட்டிடத்தில் அலிற்றாலியா விமானக் கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட சேபால எக்கநாயக்கா வைக்கப்பட்டிருந்தார். எமது பகுதிக்கும் என்னோடு கைது செய்யப்பட்ட மற்றவர்கள் வைக்கப்பட்டிருந்த பகுதிக்குமிடையில் ஒரு தகர வேலியே இருந்தது. இதனால எமக்கிடையில் பரிமாற்றங்கள் இருந்தன. சேபால எக்கநாயக்கா தனக்குள்ளேயே ஒரு பெரிய மனிதர் என்ற நினைப்போ என்னவோ தமிழ்க் கைதிகளோடு பெரிதாக எந்தப் பேச்சு வழக்கையும் அதிகமாக வைத்துக் கொள்வதில்லை.

ஜூலைப் படுகொலைகளுக்கு சில நாட்களுக்கு முன்னர் வெளிநாட்டு நாணய மோசடி வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஒரு கொழும்பு பணக்கார வட்ட தமிழர் ஒருவரும் மகஸின் சிறைக்கு கொண்டு வரப்பட்டார். அவர் அப்போது லண்டனிலிருந்து நாடு கடத்தப்பட்டிருந்தார் என நினைக்கிறேன். அவர் பெயரை நினைவுக்குக் கொண்டு வரமுடியவில்லை. அவர் சேபாலாவின கட்டிடப்பகுதியிலேயே வைக்கப்பட்டிருந்தார். அவர் மூலமாகவே சேபாலாவைப் பற்றிய தகவல்களைப் பரிமாறிக கொண்டோம்.

தங்க மகேந்திரனோடு அதே வழக்கில் தண்டனை பெற்ற மற்றொருவர் ஜெயக்கொடி எனபவர். இவர் அப்போது வெலிக்கடைச் சிறையில் எச் வார்ட்டில் வைக்கப்பட்டிருந்தார். 1983ம் ஆண்டில் நடைபெற்ற மட்டக்களப்பு சிறையுடைப்பின் போது வெளியே வந்த இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் வில் இணைந்ததைத் தொடர்ந்து வெலிக்கடை சிறைப்படுகொலை என ஒரு சிறு நூலை எழுதினார். ஈ.பி.ஆர்.எல்.எவ் அதனை அப்போதே வெளியிட்டது.

சிறைக்குக் கொண்டு செல்லப்படுபவர்களை அன்றோ அல்லது மறுநாளோ அந்தச் சிறையின் சுப்பிரண்டண்ட் நேரடியாக விசாரிப்பது வழக்கம் அவ்வாறு எங்களையும் கூப்பிட்டார்கள். எனது முறை வந்து நான் அந்தச் சிறையின் எஸ்.பி யைக் கண்டதும் ஒரு சிறிது நேரம் திடுக்கிட்டு விட்டேன் அந்த எஸ் பியின் பெயர் இரத்நாயக்கா. 1975-77 காலகட்டத்தில் நான் வெலிக்கடை சிறைச்சாலையில் மேலே குறிப்பிட்ட எச் வார்ட்டில் கைதியாக வைக்கப்பட்டிருந்த காலத்தில் இந்த இரத்நாயக்கா அவர்கள் சிறை ஜெயிலர்களின் மேலதிகாரியாக (சீவ் ஜெயிலர்) இருந்தார். அப்போது அரசியல் கைதிகளாக அங்கிருந்த நாங்கள் அனைவரும் அவரை ஒரு மோசமான சிங்கள இனவெறி பிடித்த சிறை அதிகாரியாகவே கண்டோம்.

*1985ம் ஆண்டு திம்புவில் இலங்கை அரசுக்கும் தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த பேச்சுவார்த்தை அரங்குக்கு நானும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஒரு பிரதிநிதியாகப் பங்குபற்றினேன். தமிழர்களின் தாயகம் என்று எங்கேயிருக் கிறது? அப்படியொரு பகுதி இலங்கையில் கிடையாது. இலங்கை முழுவதுவும் இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் தாயகமே என்று அந்த அரங்கத்தில் அரசதரப்பு பிரதிநிதியான எச் டபிள்யு ஜெயவர்த்தனா கூறினார். அதற்குப் பதிலளித்துக் கூறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது நான் "தமிழர்கள் 1958ம் ஆண்டு கொழும்பு பாணந்துறை, களுத்துறைப் பகுதிகளில் இருந்து அடித்து அகதிகளாகத் துரத்தப்பட்ட போது சிறிலங்கா அரசு தமிழர்களைக் கப்பலில் ஏற்றி மட்டக்களப்பி லேயே இறக்கியது. 1977ல் கொழும்பில் தமிழர்கள் அடித்து அகதிகளாக ஆக்கப்பட்டபோது அங்கேயே வைத்து தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்காமல் உங்களது அரசாங்கம் தமிழர்களை லங்கா ராணியில் ஏற்றி யாழ்ப்பாணத்தில்தான் கொண்டு வந்து இறக்கினீர்கள். இவ்வாறாக தமிழர்களுக்கு இலங்கையின் ஏனைய பாகங்களில் பாதுகாப்பு இல்லையென நீங்களே தமிழர்களுக்கு பாதுகாப்பான தாயகம் வடக்கு கிழக்கில்தான் இருக்கிறதென உறுதிப்படுத்தி யதற்கு வரலாற்றில் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இப்போது நீங்கள் வடக்கு–கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகமல்ல என்று சொல்வது எந்தவகையிலும் பொருத்தமானதாக இல்லை" எனக் குறிப்பிட்டதை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும்.*

தொடர்ச்சி 10ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1983 ஜூலை நினைவு........

ஆனால் மகஸின் சிறையில் நான கண்ட போது அவரை மிகவும் வித்தியாசமான அதிகாரியாக – நல்ல மனிதராக அடையாளம் கண்டேன். அது 1975-77க்கும் 1983க்கும் இடையில் நான் அடையாளம் கண்டு கொண்டதில ஏற்பட்ட தவறு என்று சொல்லமாட்டேன் மாறாக ஏதோ ஒரு காரணத்தினால் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றது என்றே கூறுவேன்.

ஜூலைப் படுகொலை சந்தர்ப்பம் பார்த்து நடத்தப்பட்ட ஒரு செயல் என பதை என்னால் உணர முடிகின்றது. கொழும்புத் தமிழர்கள் மீதான ஒரு பரவலான படுகொலைத் திட்டம் ஒரு குறிப்பிட்ட அரசியல் மற்றும் இரகசியத துறை வட்டாரங்களில் இருந்திருக்கலாம். 1983ல் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட எங்களை இரண்டு நாட்களின் பின்னர் கொழும்பு நாலாம் மாடிக்குக் கொண்டு சென்றனர். அங்கு கொண்டு செல்லப்பட்ட அன்று இரவு விசாரிப்பதற்காக ஒரு பொலிஸ் ஏ.எஸ்பி அதிகாரி என்னை தனது அறைக்கு அழைப்பித்தார். அவா ஏற்கனவே என்னைப்பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருந்தார். நான் அவரது அறைக்குச் சென்ற போது அங்கு நடராஜா என்னும் சி.ஐ.டி அதிகாரியைக் கண்டேன் அவர் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் உளவுத் துறை அலுவலகத்தில் எஸ்.ஐ யாக இருந்த போதே எனக்கு அவரைத் தெரியும்.

பல தடவைகள் அந்த அதிகாரி என்னை பார்த்து கத்தியதை நினைத்துப் பார்த்திருக்கிறேன்.

மகஸின் சிறைச்சாலையில் அப்போதிருந்த ஜெயில் காவலர்கள் மற்றும் அதிகாரிகளின் மத்தியில் சிங்கள இனவாதிகளும் இருந்தார்கள் அதே வேளை இனபேதமற்ற நியாயமானவர்களும் இருந்தார்கள். ஜூலை 24ந் திகதி கொழும்பில் தமிழ்க்கடைகள் வீடுகள் எரிக்கப்பட்ட போது எரிந்த காகிதத்துண்டுகள் காற்றில் பறந்து வந்து சிறைக்குள்ளும் விழுந்தன. வெளியே நடப்பவைபற்றி சில காவலர்கள் ரகசியமாக எங்களுக்குக் கூறினார்கள். அன்று மாலை என்னோடு பேசிக் கொண்டிருந்த காவலர் ஒருவர் இலங்கையை ஐம்பது வருடங்கள் பின்னுக்குத் தள்ளிவிட்டார்கள் என்று கவலையோடு கூறியதை பல தடவைகள் நினைத்துப் பார்த்திருக்கிறேன்

ஜூலை 25ம் திகதி வெலிக்கடைப் படுகொலை தொடர்பாக எங்களுக்கு எந்தவகையான முன்னறிவும் இருக்கவில்லை. ஆனால் 25ம் திகதி மாலையில் உரிய நேரத்துக்கு முதலிலேயே எங்களை அறைகளுக்குள் வைத்து பூட்டிவிட்டார்கள். அன்று இரவு றேடியோவில்தான் விபரங்கள் கேட்டோம்.

அடுத்த நாள் காலையில் நாங்கள் அறையை விட்டு திறந்துவிடப்பட்ட

09ம் பக்கத் தொடர்ச்சி

நாங்கள் இருந்த சிறைக்குள் பெரிதாக கட்டுப்பாடுகளெதுவும் புதிதாக விதிக்கப்படவில்லை. அதிகாரிகளே சிறையில் இருந்தோரின் நடமாட்டங்களை ஓரளவு கட்டுப்படுத்தி வைத்திருந்தனர்.

ஜூலை 27ம் திகதி காலையில் சில மணி நேரம் ஊரடங்குச்சட்டம் சற்றுத் தளர்த்தப்பட்டதால் கொழும்பையும் கொழும்பை அண்மித்த பகுதிகளையும் சேர்ந்த கைதிகளின் உறவினர்களும் நண்பர்களும் சிறைக் கைதிகளைப்பார்த்தனர். இந்த சந்தர்ப்பத்தில்தான் வெலிக்கடையில் அன்றைக்கு நடத்தவெனத் திட்டமிடப்பட்டிருந்த இரண்டாவது படுகொலை நடவடிக்கைகளை மகசின் சிறையிலும் அங்கிருந்த சிங்கள சிறைக்கைதிகளைக் கொண்டு நடத்தத் திட்டமிட்டிருந்ததாக என்னுடன் பேசிய அதிகாரி ஒருவர் நாங்கள் மகஸின் சிறையிலிருந்து மட்டக்களப்புக் கொண்டு செல்லத் தயாரான போது குறிப்பிட்டார் மகஸின சிறையில் அவ்வாறு நடக்காமல் தடுத்தது சிறை சுப்பிரண்டண்ட் இரத்நாயக்காதான். இதுவரைக்கும் நீங்கள் உயியோடிருபபதற்கு அவருக்குத்தான் நீங்கள் நன்றி கூற வேண்டும் என்றார்.

அன்று எங்களுக்கு மதியம் சாப்பாடு வழங்கப்பட்டதன் பின்னர் சிறிது நேரத்தில் எம்மை திடீரென எமது

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முன்னணி அமைப்புக்களான ஈழ மாணவர் பொது மன்றம் மற்றும் கிராமிய தொழிலாளர் விவசாயிகள் முன்னணி ஆகியவற்றின் செயற்பாடுகளோடே நான் அதிகமாக ஈடுபாடு கொண்டிருந்தேன். அப்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கட்சியமைப்பு பற்றியோ அல்லது அதன் கட்டமைப்புரீதியான செயற்பாடுகள் பற்றியோ நான் அறிந்திருக்கவில்லை. ஆயினும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியற் சிந்தாந்த நிலைப்பாடுகள், தோழர் பத்மநாபாவை பல ஆண்டுகள் அறிந்திருந்தமையின் அடிப்படையில் அவர்மீது எனக்கிருந்த நம்பிக்கை மேலும் தோழர் சுகு மற்றும் கமல் ஆகியோரின் அரசியல் ரீதியான ஆர்வத்திலும் உழைப்பிலும் நான் கொண்ட மதிப்பு இவையே என்னை ஈ.பி.ஆர்.எல்.எவ் வோடு நெருக்கமாக வைத்திருந்தன.**

1972-75ம் ஆண்டுகளில் தமிழ் இளைஞர் பேரவையில் செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் எனது நடவடிக்கைகளைக் கண்காணிப்பதில் ஈடுபட்டிருந்தவர். 1983ல் அவர் ஒரு ஏ.எஸ்.பி யாகியிருந்தார். அவரினூடாக அந்த மற்ற சிங்கள் பொலிஸ் அதிகாரி எல்லாவற்றையும் தெரிந்திருப்பார் என்பதை ஊகித்துக் கொண்டேன். எனினும் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழ் இயக்கங்களுக்கும் எனக்கும் இடையில் இருந்த உறவு யாருக்குமே தெரிந்திருக்க முடியாது என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை இருந்தபடியால் எனக்கு சி.ஐ.டி விசாரணை பற்றி எந்தவித குழப்பமும் என்னுள் இருக்கவில்லை.

இருப்பினும், அந்த அதிகாரி கேட்ட கேள்விளுக்கு பதில் சொன்னபோது அவற்றைக் காதில் கேட்டவுடன் தூசண மழை பொழிந்துகொண்டு இருந்தார். இடைக்கிடை என்னை அறைந்து தனது உடல்வலிமையையும் காட்டிக்கொண்டார். சிறிது நேரத்தின் பின்னர் என்னிடம் தமிழர்களின் போராட்டம் பற்றிய அரசியல் விடயங்களில் ஆத்திரங்களைக் கொட்டி கேள்விகளை யெழுப்பினார். அதற்கு நான் பதில் சொல்லிக் கொண்டிருந்த போது மேசை மேல் இருந்த அந்த அதிகாரி உதைத்தார் நான் மூலையில் போய்விழுந்தேன். அவர் ஆத்திரங்களைக் கொட்டி பெரிய சத்தமாகக் ஒரு நாளைக்கு பம்பலப்பிட்டி வெள்ளைவத்தையெல்லாம் எரியுமடா என்று கத்திய படி விழுந்துகிடந்த என்னை மீண்டும் உதைத்தார். இது நடந்தது ஏப்ரல் முதலாம் தேதியோ இரண்டாம் தேதி –ஜூலைப்படு கொலைகளுக்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர். அதற்குப்பிறகு நான் அந்த அதிகாரியைப் பர்த்ததில்லை. அவரது பெயரையும் அறிய முற்பட்ட தில்லை. ஆனால்

சில மணி நேரங்களில் அக்குணே சந்திரே கூட எங்கள் மீது ஆத்திரத்தில பல்லை நறுமித் திரிவதாக வாமதேவன் எச்சரித்து அவனுடன் எதுவும் கதைக்க வேண்டாம் என்றுவிட்டார். அதுநாள் வரை நன்கு பழகிக் கொண்டிருந்த சந்திரே எங்களோடு பேசுவதை நிறுத்தியதுடன் முகபாவத்திலும் மாற்றங்களைக் காணமுடிந்தது. இனவாதமானது பல ஆயுட்கால சிறைத்தண்டனை பெற்ற ஒரு பயங்கர கொலைகார கொள்ளைக்காரனைக் கூட விட்டுவைக்கவில்லை.

நிலைமை பிழையாக இருப்பதை உணர்ந்த நாங்கள் எஸ் பி இரத்நாயக்காவிடம் மற்ற தமிழ்க்கைதிகளின் இடத்துக்கு மாற்றிவிடும்படி கேட்டுக் கொண்டோம். இதற்கிடையில் நான் முதலில் குறிப்பிட்ட கொழும்புத் தமிழ்ப்பிரமுகரும் ஏற்கனவே எஸ்பி யைச் சந்தித்து நிலைமைகள் பிழையாக இருப்பதைக் கூறி உடனடி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருக்கிறார். சில மணி நேரங்களில் என்னையும் மகேஸ்வரராஜா மற்றும் வாமதேவனையும் மற்றப்பகுதியில் இருந்த ஏனைய தமிழ் அரசியற் கைதிகளுடன் இருக்க மாற்றிவிட்டார்கள்.

அப்போது சேபால எக்கநாயக்கா இருந்த கட்டிடததில் வைக்கப்பட்டிருந்த அந்தக் கொழும்புத தமிழ்தான் சேபால எக்கநாயக்காவும் அந்த சிறை மண்டபத்துக்குள் ஏனைய சிங்கள கைதிகள மத்தியில் சிங்கள இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

ஜூலை 26ம் திகதி கொழும்பில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததால் சிறையில் இருந்த கைதிகளைப்பார்க்க அவர்களது உறவினர்களோ நண்பர்களோ வரவில்லை. ஜெயில் அதிகாரிகள் மற்றும் காவலர்களிடமிருந்தும், றேடியோவின் செய்திகளிலிருந்தும் மட்டுமே வெளிநிலைமைகளை அறிய முடிந்தது. அன்று

மண்டபத்துக்குள் அடைத்து விட்டனர். மகஸின் சிறை முழுதிலும் சிறைக் கைதிகள் அவ்வாறே அடைக்கப்பட்டு விட்டதாக சிறிது நேரத்தில் அறிந்து கொண்டோம். அது எங்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்தது. வெலிக்கடையில் 25ம் திகதி நடந்தது போல இங்கும் நாங்கள் தாக்கப்படக் கூடும் என்ற அபிப்பிராயம் அங்கிருந்த எங்கள் எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டது. வழமையாக மாலை 5 மணிக்கு சாப்பாடு தருவார்கள் பின்னர் 6 மணிக்கு மண்டபத்துக்குள்ளே இருக்கும் அறைகளில் அறைக்கு மூன்று பேர் அல்லது நான்கு பேரென வைத்துப் பூட்டி விடுவார்கள். அன்றைக்கு மாலை சாப்பாடு எடுக்கையில் நாங்கள் எல்லோரும் சற்று அதிகமாகவே உறைப்புக் குழம்பு எடுத்துக் கொண்டோம். தும்புக்கட்டை, தண்ணி மற்றும் மூத்திரத்துக்கென தரப்படும் வாளிகள் மற்றும் சாப்பாட்டுக் கோப்பை இவற்றைத் தவிர எம்மிடம் வேறேதுவும் அங்கு இருக்கமுடியாது. ஏதாவது ஆபத்தை எதிர்நோக்கினால் அவற்றைத் தான் எமது தற்காப்பு ஆயுதங்களாகப்பயன்படுத்த வேண்டும்.

உண்மையில் இரண்டாவது தடவையாக வெலிக்கடையில் தாக்குதல்கள் நடைபெற்ற போது பெரும்பாலும் இந்தப்பொருட்களைப் பயன்படுத்திப் போராடியே பலர் உயிர் தப்பினர்.

எம்மை அறைகளுக்குள் அடைக்காமல் மண்டபத்துக்குள் ஒன்றாக இருப்பதற்கு அனுமதிக்கும்படி அந்தவேளையில் காவலிலிருந்த காவலர்களிடம் கேட்டோம். அது எமக்கு ஏதும் ஆபத்து நேரிடுமானால் சந்திக்க வலுவாக இருக்கும் எனக் கருதினோம். சிறைக்காவலர்கள் மறுத்து விட்டனர். சுப்பிரண்டனிடம் அவ்வாறு கோருவதற்கு எமக்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை. எம்மை அறைகளில் அடைத்த காவலாளர்களுள் ஒருவர், அவர் தமிழர்களுக்கு

எதிரான ஒரு இனவாதி, அவர் எமது அறைகளில் வேறேதாவது ஆயுதங்களை இரும்புக்கம்பிகளை வைத்திருக்கிறோமா என்று ஆர்வமாகத் தேடி அப்புறப்படுத்தினர். எமது அறைகளில ஒரு தும்புக் கட்டைக்கு மேல் வேறெந்தவொரு தடியும் கூட இல்லாமல் செய்து விட்டார். ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் எங்களுக்கு சட்டத்தின் பெயரில் தற்பாதுகாப்பு எதுவும் இல்லாமற் செய்த காவலர்களும் அங்கிருந்தனர்.

இரவு ஏழு எட்டு மணியளவில் (சரியான நேரம் நினைவிலில்லை) வெலிக்கடைச் சிறையிருந்து எழும் பெருஞ் சத்தங்களை எம்மால் ஓரளவு கேட்க முடிந்தது. நெஞ்சிடியிலேயே எமது நேரம் கடந்தது.

சில மணி நேரங்களில் இரவு பத்தரை பதினொரு மணியளவில் எமது மண்டபத்துக்குள் திடீரென சிறை உயரதிகாரிகள் வந்தனர். அறைக்கதவுகள் திறக்கப்பட்டன. எமது உடுப்புகள் உடைமைகளை எடுத்துக்கொள்ளும்படி உத்தரவிடப்பட்டோம். எல்லோரையும் வரிசையாக சிறையின் அலுவலகப்பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அங்கு பதிவுகள் கையெழுத்து வாங்குதல்கள், அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த எமது பொருட்களைத் திருப்பித் தருதல் என வேகமாக நடைபெற்றன. எமக்கு என்ன நடக்கின்றது எங்கே அழைத்துச் செல்லப்படுகிறோம் ஏன் அழைத்துச் செல்லப்படுகிறோம் என்று தெரியவில்லை. திகில் நிறைந்திருந்தது. எல்லாம் கனவுலகில் நடப்பது போல் இருந்தது. கடைசியாக சிறைக்கு வெளியே கொண்டு செல்லப்படுகையில் சுப்பிரண்டண்ட இரத்நாயக்கா எனக்கருகில் வந்து மிகவும் மன வேதனையுடன் சொறி என்று விட்டு உங்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுகிறோம் என்று கூறினார். எங்கே என்று எதுவும் சொல்லவில்லை. அது மனத்தெம்பைத் தந்தாலும் நாங்கள் பாதுகாப்பான இடத்துக்குத்தான் மாற்றப்படுகிறோமா என்று நம்புவதற்குக் கூட அந்த நேரத்துச் சூழ்நிலை இடம்தரவில்லை.

மகஸின் சிறையிலிருந்து வெலிக்கடையோடு இணைந்ததாக இருந்த சிறைகளின் ஆணையாளரின் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு பல வாகனங்கள் இராணுவத்தினர் அதிகாரிகளின் கட்டளைகள் என ஒரே அமர்க்களமாக இருந்தது. அப்போது அங்கு சிறைகளின் ஆணையாளராக இருந்த தர்மதாஸ என்பவர் அதிகாரிகளுக்குக் கட்டளைகள் இட்டுக் கொண்டிருந்தார். அவரை ஏற்கனவே நான் 1976ல் கண்டிச் சிறைச்சாலையில் சுப்பிரண்டண்ட் ஆக இருந்த போது பார்த்திருக்கிறேன். அப்போது அந்தச் சிறையில் 10 நாட்கள் இருக்க வேண்டியேற்பட்ட வேளையில் அவரின் குணாதிசயங்களைக் கண்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாது கண்டிச்சிறையில் பல ஆண்டுகள் இருந்த தமிழ் அரசியற் கைதிகள் பலர் அவரை ஒரு ஜெண்டில்மென் எனக் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த இரவு அவரைக் கண்ட எனக்கு ஏதோ நல்லதை நோக்கித்தான் விடயங்கள் நகருகின்றன என மேலும் ஒரு நம்பிக்கை உருவாகியது..

மகஸின் சிறையிலிருந்து கொண்டுவரப்பட்ட எங்களை ஒரு இராணுவ வாகனத்தில் அடைத்தார்கள் எல்லாம இருட்டில் சிறு வெளிச்சங்களுடன் நடைபெற்றன. வெளியே எதையும் தெளிவாகப் பார்க்க முடியவில்லை. பல வாகனங்களைக் கண்டோம். யார் எவர் என்று எதுவும் தெரியவில்லை. சிறிது நேரத்தில் வாகனங்கள் தொடராகப் புறப்பட்டன. கொழும்பு ஆஸ்பத்திரியடியில் சிறிது நேரம் தரித்திருந்தோம் அங்கும் ஒரே பரபரப்பு என்ன நடக்கின்றதென ஊகிக்கக் கூட முடியவில்லை. பின்னா வாகனங்களின் பயணம் தொடர்ந்தது. திடீரென காலிமுகத் திடல் முன்னால் நின்றது. ஏமக்குத் பகீர் என்றது. இறக்கி வரிசையாக விட்டு சுட்டுத் தள்ளப்போகின்றார்களோ என்ற வரை ஊகித்துவிட்டோம்.

கடைசியாக கட்டுநாயக்கா விமானத் தளப்பக்கமாகக் கொண்டு வந்திருக்கின்றார்கள என்பதைக் கண்டுகொண்டோம். யன்னல்கள் எல்லாம் பூட்டப்பட்ட வாகனத்தில் அத்தனை பேரும்

பல மணிநேரம் இருந்தோம். மூத்திரம் போவதற்கு வெளியே செல்லவும் அனுமதியில்லை. வியர்த்துக் கொட்டியது. சிலர் இருந்தபடியே வாகனத்துக்குள்ளேயே சலம் கழித்துவிட்டனர். சில மணி நேரங்களின் பின்னர் இராணுவத்தினர் தாங்களாகவே சலம் கழிப்பதற்கென ஒவ்வொருவராக அனுமதித்தனர். அப்போதுதான் விமானப்படைத்தளத்தின் பக்கம் நாங்கள் இருக்கிறோம் என்பதைக் கண்டு கொண்டோம்.

அத்துடன் எம்மோடு வந்த ஏனைய இராணுவ மற்றும் சிறைச்சாலை வாகனங்களில் வெலிக்கடையிலிருந்தும் தமிழ்க் கைதிகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு கொண்டோம். எல்லாம் இருட்டான பகுதியிலேயே நடந்தது. வெலிக்கடைச் சிறைச்சாலையிருந்து கொண்டுவரப்பட்டவர்களில் எவரோடும் நேரடியாகப் பேசும் வாய்ப்பு எம்மில் எவருக்கும் கிடைக்கவில்லை.

27ம் திகதி இரவு இவ்வாறாகக் கழிந்து 28ம் திகதி விடிந்தது. அடுத்தது என்ன என்று எம்மால் இன்னமும் ஊகிக்கவும் முடியவில்லை. காலை ஆறு, ஏழு மணியளவில் இராணுவ விமானங்களில் ஏற்றினர். வானில் ஏறிய விமானங்கள் மட்டக்களப்பு விமான நிலையத்தை வந்தடைந்தன. எல்லோரது முகத்திலும் அப்போதுதான் ஒரு மகிழ்ச்சிக் களை தெரிந்தது. பாதுகாப்பான இடத்துக்கு வந்துவிட்டோம் என்ற உணர்வு ஏற்பட்டது. விமானப்படையினரின் வாகனங்களில் ஏற்றப்பட்டு மட்டக்களப்பு சிறைக்குள் சென்ற பின்னாதான் ஒருவரையொருவர் கட்டித் தழுவி வாய்விட்டு கதறியபடி முதல் நாள் நடந்தவற்றை ஒருவருக்கொருவர் பரிமாறி மனதைத் தேற்றிக் கொண்டனர். வடக்கு கிழக்கு தான் இலங்கைவாழ் தமிழர்களின் தாயகம் என்று கோரப்படுவது பற்றி பல வாதப்பிரதிவாதங்கள் உண்டு. அவை எவ்வாறாக இருந்தாலும் கொழும்புச் சிறைகளில் எமக்கு பாதுகாப்பு இல்லையென்று நாங்கள் மட்டக்களப்புக்கு கொண்டு செல்லப்பட்டபோது – மட்டக்களப்பு மண்ணில் நாங்கள் காலடி வைத்தபோது எமக்கு ஏற்பட்ட மன உணர்வுதான் அந்தத் தாயக உறவு என்பதே எனது புரிதலாகும்.

1985ம் ஆண்டு திம்புவில் இலங்கை அரசுக்கும தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் இந்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்த பேச்சுவார்த்தை அரங்குக்கு நானும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஒரு பிரதிநிதியாகப் பங்குபற்றினேன். தமிழர்களின் தாயகம் என்று எங்கேயிருக்கிறது? அப்படியொரு பகுதி இலங்கையில் கிடையாது. இலங்கை முழுவதும் இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் தாயகமே என்று அந்த அரங்கத்தில் அரச தரப்பு பிரதிநிதியான எச்.டபிள்யு ஜெயவர்த்தனா கூறினார். அதற்குப் பதிலளித்துக் கூறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது நான் "தமிழர்கள் 1958ம் ஆண்டு கொழும்பு பாணந்துறை களுத்துறைப் பகுதிகளில் இருந்து அடித்து அகதிகளாகத் துரத்தப்பட்ட போது சிறிலங்கா அரசு தமிழர்களைக் கப்பலில் ஏற்றி மட்டக்களப்பிலேயே இறக்கியது. 1977ல் கொழும்பில் தமிழர்கள அடித்து அகதிகளாக ஆக்கப்பட்டபோது அங்கேயே வைத்து தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்காமல் உங்களது அரசாங்கம் தமிழர்களை லங்கா ராணியில் ஏற்றி யாழ்ப்பாணத்தில்தான் கொண்டு வந்து இறக்கினீகள் இவ்வாறாக தமிழர்களுக்கு இலங்கையின் ஏனைய பாகங்களில் பாதுகாப்பு இல்லையென நீங்களே தமிழர்களுக்கு பாதுகாப்பான தாயகம் வடக்கு கிழக்கில்தான் இருக்கிறதென உறுதிப்படுத்தியதற்கு வரலாற்றில் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இப்போது நீங்கள் வடக்கு-கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகமல்ல என்று சொல்வது எந்தவகைகையிலும் பொருத்தமானதாக இல்லை" எனக் குறிப்பிட்டதை இங்கு சுட்டிக் காட்டுவது பொருததமானதாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். மூர்த்தி கொழும்பு.

**கேள்வி:- சர்வதேச நாடுகளினால் விதிக்கப்பட்ட எல்ரீரீஈ மீதான தடை நீக்கப்படும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்:- ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீதும் மட்டுமல்லாது, அதனது அணுகுமுறைகளை ஏற்றுக்கொள்ளாத மற்றைய தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள், சிங்கள, தமிழ், முஸ்லிம் பொதுமக்கள், புத்திஜீவிகள், ஆகியோர் மீதும், எல்.ரி.ரி.ஈ காலாகாலமாக கட்டவிழ்த்தப்படும் பயங்கரவாத செயல்களே அதனது தடைக்குக் காரணமாகும். எல்.ரி.ரி.ஈ இன் இச் செயற்பாடுகளை சர்வதேச நாடுகளும், மனித உரிமை அமைப்புகளும் அவைகளின் தொடர்புகள் மூலமாகவே நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எனவே, சர்வதேச நாடுகள் புலிகள் மீதான தடையை நீக்குவதானால் சொல்லிலும் செயலிலும் அவர்கள் தம் பயங்கரவாத வழிமுறைகளைக் கைவிடவேண்டும். அப்படி அவர்கள் செய்யும் பட்சத்தில் சர்வதேச நாடுகள் தாமாகவே அத் தடையை நீக்கிவிடும். இதுதான் யதார்த்தம். மாறாக, புலிகள் ஆற்றும் வன்முறைகளை மூடியும் மெழுகியும் மறைத்துக்கொண்டு அவற்றினைக் கைவிடுமாறு புலிகளுக்கு அழுத்தம் கொடுக்காது, தங்களது சமூக அந்தஸ்திற்கும் பணத்திற்கும் பிழைப்புக்கும் புலிகளுக்கு பந்தம் பிடிப்பவர்களும், உண்மை விஷயங்களை அறியாது உணர்ச்சி வசப்பட்டு செயற்படும் அப்பாவி தமிழர்களுடன் அவ்வப்போது நடாத்தும் ஆர்ப்பாட்டங்கள் கோஷங்கள் அனைத்தும், வேண்டுமானால் அவர்களுக்கு ஒரு நல்ல பொழுதுபோக்காக இருக்கலாம், ஆனால் அவை பயனற்ற வெறும் வெற்றுவேட்டுகள் தான்!

கா. உலகநாதன் பிரான்ஸ்

**கேள்வி:- ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மனிதஉரிமைகள் மீறல்கள் பற்றி புலம்பெயர் நாடுகளில் இருக்கும் தமிழ் அமைப்புகள் கண்டனப் பேரணிகள் பலவற்றை நடாத்தியும், சர்வதேச நாடுகள் போதியளவிற்கு அக்கறை எடுப்பதாகத் தெரியவில்லயே?**

பதில்:- நீங்கள் குறிப்பிடும் தமிழ் அமைப்புகள் பல எல்ரீரீஈ இன் அமைப்புகளே. ஸ்ரீலங்கா அரசிற்கு எதிரான மனிதஉரிமைகளை மீறல்களுக்கு கண்டனம் தெரிவித்தும், சர்வதேச நாடுகள் கவனமெடுக்க வேண்டும் எனக் கோரியும் அவ்வப்போது நடாத்தப்படும் கண்டனங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகிய அனைத்துமே ஏறத்தாழ, புலிபெருமை பேசி தங்களை சமூகத்தின முக்கியஸ்தர்கள் என்ற அந்தஸ்தை தக்கவைத்துக் கொள்வோராலும், புலிகளின் பணத்தில் தங்கள் வாழ்க்கையை ஓட்டுபவர்களாலுமே முன்னின்று ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை, கண்டிக்கப்பட வேண்டியவை, நிறுத்தப்பட வேண்டியவை. ஆனால், இப்படியான நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவோர், ஒரு பக்கம் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு எதிரான கோஷைங்களை முன்வைத்தும், அதே சமயம் மறுபக்கம் புலிசார்பு கோஷங்களையும், சர்வதேசபொலிசான **"interpol"** இனால் தேடப்படும ஒருவராகிய பிரபாகரனின் படம் தாங்கிய பாதகைகளையும் தாங்கிச் செல்ல வைக்கப்படுகின்றனர். புலிகள் தங்களது வன்முறைகளைக் கைவிடாது தொடர்ந்து அதை இறுக்க தழுவிக் கொண்டே ஸ்ரீலங்கா அரசாங்கந்தான் உலகிலேயே மோசமானது என்று முன்னெடுக்கப்படும் பிரச்சாரங்கள், சர்வதேச நாடுகள், அமைப்புகள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் மத்தியில் எடுபடாது புஸ்வாணமாகப் போய்விடுகின்றன. இப்படியான முறையில் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிகள் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்தப்படும் மனிதஉரிமை மீறல்களை மேலைநாட்டு ஜனநாயக அரசுகள் அலட்சியப்படுத்த அடிகோலி விடுகின்றன. இதனால் அவைகள் தமிழர்களின் உண்மை நலன்களுக்கு கைகொடுக்க போதியளவு முன்வரத் தயக்கம் காட்டுகின்றன. சர்வதேச சமூகத்தின் பார்வையில் புலிகளின் பின்னணிச் சாயம் வெளுக்கும்போது தமிழர்களின் நியாயமான மனிதஉரிமைக் கோரிக்கைகளும் அடிபட்டுப் போகின்றன. புலிகளின் நலனையும் தமிழர்களின் நலனையும் சேர்த்துக் குழப்புவதால் வரும் வினை இது!

எஸ். ஞானசீலன் வெள்ளவத்தை.

**கேள்வி:- புலிகள் தங்கள் வான்படைத் தாக்குதல்களினால் இலங்கை அரசாங்கத்தை நிலை இழக்கச் செய்துவிட்டனவே பார்த்தீர்களா?**

பதில்:- ஆமாம்! ஏற்கனவே வைத்திருந்ததைவிட அதிக சக்தி வாய்ந்த மிக் 29ரக விமானங்களை இலங்கை அரசு வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்துவிட்டது. இந்தியாவினால் நவீனரக ராடர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஏற்கனவே விமானப்படையிலுள்ள கிபிர் ரக விமானங்கள் நவீனப்படுத்தப்படுகின்றன. விமானங்கள் நாளாந்தரம் தமிழர்பகுதிகளில் குண்டுகள் பொழிகின்றன. புலிகளின் நிலைகளுக்கு எதிராக முன்னர் பகலில் மட்டுமே மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள் இப்பொழுது இரவுகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன. அப்பாவித் தமிழ்மக்கள் செய்வதறியாது நிலை குலைந்து இருதலைக் கொள்ளி எறும்புகள் போல் தவிக்கிறார்கள்.

வ. திருநாவுக்கரசு திருகோணமலை.

**கேள்வி:- 1987 இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தில் தலைமைத்துவம் வகித்த ஈபிஆர்எல்எவ் இனால் உருவாக்கப்பட்ட ஒரு பொதுவான கொடி, இப்பொழுது வடக்கு மாகாணத்திற்கு ஒரு கொடியாகவும், கிழக்கு மாகாணத்திற்கு வேறொரு கொடியாகவும் இலங்கை அரசினால் இரண்டாக்கப்பட்டு விட்டதே?**

# அபிமன்யு பதில்கள்

பதில்:-
பட்டுவேட்டி பற்றிய
கனவில் இருந்தபோது
கட்டியிருந்த கோவணம்
களவாடப்பட்டது"

என்ற கவிஞர் வைரமுத்துவின் வரிகளின் தாற்பரியத்தினை மக்கள் நன்றாகவே புரிய வைக்கும் நிகழ்வு! இதற்கெல்லாம் மூலகாரணம் யார் என்பதை மக்கள் சிந்திக்க வைக்கும் நிகழ்வு!

ப. தயாளன் வவுனியா.

**கேள்வி:- புலிகளினால் படுகொலைசெய்யப்பட்ட டெலோ இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினம் நினைவு நாளையொட்டி, இப்பொழுது புலிகளுடன் இயங்கும் ரெலோ பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சென்ற மாதம் லண்டனில் நிகழ்வொன்றினை நடத்தினராமே?**




பதில்:- அந் நிகழ்வு பற்றி ரெலோ இயக்கத்தைச் சார்ந்த ஜானகி என்பவர் எழுதிய கவிதை இணையதளம் ஒன்றில் பிரசுரமாகியிருந்தது. ஒரு தர்ம நியாய இதயத்திலிருந்து பீறிட்ட அக்கவிதையிலிருந்து சில வரிகளை மட்டும் கீழே தருகிறேன்-

**"இன்று மீண்டும்**
**எமது தலைவர்**
**இன்னொருமுறையும்**
**சுடப்பட்டிறந்தார்!**
**இரத்தமும் சதையுமாய்**
**அவரோடிருந்து**
**எம்.ப. பதவிக்கும்**
**எலும்புத் துண்டுக்கும்**
**சோரம்போன தமிழ்-தேசிய நீசர் இருவர்**
**இன்னொரு முறையும்**
**எமது தலைவரை**
**கொன்று புசித்தனர்"**

........................

இன்னும் சில வரிகள்-

**"மரித்த எமது தோழரின் குரல்கள்**
**எங்களை இன்னமும் அதட்டிக் கேட்கிறது!**
**எங்களை ஏன் கொலை செய்தார்கள்?**
**எங்களை ஏன் உயிருடன் எரித்தார்கள்?**
**எங்கள் உடல்களை புதைத்தது எங்கே?**
**எங்கள் பெற்றோர் அனாதரவானதேன்?**
**எங்கள் பெண்டிரை ஏன் விதைவைகள் ஆக்கினீர்?**
**எங்கள் பிள்ளைகள் ஏன் அநாதைகள் ஆயினர்?**
**எங்ஙனம் நாங்கள் துரோகிகள் ஆயினம்?**
**எங்களைக் கொன்றதால் விடுதலை வந்ததா?**

.............

அவர் மேலும் கேட்கிறார்-

**"வெட்கம் கெட்ட**
**வேஷதாரிகளே!**
**எவருடைய கைகளில்**
**அடைக்கலம் புகுந்தீர்?"**

ந. அன்ரனிதாஸ் ஜேர்மனி

**கேள்வி:- புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களிடையே வன்முறைக் கலாச்சாரம் வளர்வதாக செய்திகள் வருகின்றனவே?**

பதில்:- எல்லாத் தமிழர்களுக்கும் ஓரே முத்திரையை குத்துவது தவறு. எனினும், தமிழர்கள் பெரும்பான்மையாக கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் வன்முறை நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு ஓரளவு வழமையாகி விட்டது போலும் உதாரணத்திற்கு, கடந்த மே மாதம் "தமிழர் ஆதரவுக் கழகம" என்ற லண்டன் அமைப்பு அங்கு ஓர் உதைபந்தாட்ட நிகழ்ச்சியை நடாத்தியது. அது தொடர்பான துண்டுப் பிரசுரத்தை அங்கிருக்கும் நண்பர் எனக்கு அனுப்பியிருந்தார். அதில் தெரிவிக்கப்பட்டிருந்த மைதானத்திற்குள் அனுமதிப்பதற்கான சில நிபந்தனைகள்-

"மைதானத்திற்குள் பின்வருவன தடை செய்யப்பட்டுள்ளன-

1. மதுபானம் வைத்திருத்தல், பாவித்தல்
2. கூரிய, ஆபத்து விளைவிக்கும் ஆயுதங்கள் வைத்திருத்தல்
3. பாதுகாப்பு அதிகாரியுடன் வாக்குவாதம் செய்தல்
4. அகலமான தோல்பட்டி அணிந்து வருதல்

உங்கள் பாதுகாப்பு கருதி விளையாட்டு மைதானத்தில் **CCTV** கமரா அமைக்கப்படடிருக்கும்."

தமிழர்கள் தமிழர்கள் மீதான வன்முறை முன்னெடுப்புகளைத் தடுப்பதற்குத் தான் இந்த நிபந்தனைகள்! நீங்களே தீர்மானியுங்கள்- வன்முறைக் கலாச்சாரம் எந்தளவிற்கு இருக்கின்றது?

க. காந்தருபன் மட்டக்களப்பு

**கேள்வி:- எப்போதுதான் தமிழர்களுக்கு விடிவு கிட்டும்?**

பதில்:- கிணற்றுத் தவளை சிந்தனையை கைவிட்டு எப்போது விரிந்த உலகை தரிசிக்கத் தயாராகிறார்களே அப்போது.

செ. தவக்குமரன் யாழ்ப்பாணம்

**கேள்வி:- யாழ் குடாநாட்டில் பொருடகளின் விலை வானளாவ உயர்ந்திருப்பதற்கு கொள்ளை இலாபமீட்டும் வர்த்தகர்கள் தான் காரணமா?**

பதில்:- ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தவிச்ச முயல் அடிப்பவர்கள், எரிகிற வீட்டில் பிடுங்கியது மிச்சம் என மக்களின் வயிற்றில் அடிப்பவர்கள் இல்லை என்று கூறமுடியாதுதான் ஆனால், யாழ் குடாநாட்டில் பொருட்களின் விலை உயர்வுக்கு அவர்கள் மட்டும் காரணமில்லை. பெருந்தொகை பணம் கப்பமாகவும், வரியாகவும் செலுத்த வேண்டியிருப்பது தான் மூல காரணம். பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பது தெரிந்திருந்தும் மக்களை பிழிந்தெடுக்கும் பணம் எங்கு போய் சேர்கின்றது என்பதையும் அறிந்திருப்பதால் சம்பளம் வாங்கினாலும் தமது பணியை செய்ய முடியாத நிலையில் உள்ள விலைக் கட்டுப்பாட்டு திணைக்கள அதிகாரிளும் காரணம்.

# கண்ணீர் கவிதை

அழுங்கள்..
கண்ணீர் வற்றும் வரை
அழுங்கள்;

நாளையும் கண்ணீர்
நிச்சயமாய் ஊறும்
நாளை அழுவதற்காய்

ஒவ்வொரு தோழனின்
பிரிவிலும்
மனம் ரணமாகும்
தினவெடுத்த தோள்கள்
துடிக்கின்ற போதிலும்
வேடிக்கின்ற கண்ணீர்
மட்டும்
உணர்வுகளாக;

பாடைகளின் ஊர்வலம்
நாளையும் தொடரும்
இன்னொரு தோழனை
சுமந்தபடி..
அது நீயோ நானோ;

இறப்பதற்கு முன்னால்
நாளைய அஞ்சலியை
நாமே எழுத விடுவோம்

சுமக்கும் தோழர்களுக்கு
அழுவதை மட்டும்
மிச்சமாக்கி செல்வோம்

சுதந்திர வாழ்வுக்காய்
போராடினோம்.
இருந்த வாழ்வையும்
தொலைத்துவிட்டு
மனித வேட்டையில்
நாமே பலியாகினோம்;

இதுவும் ஒரு
திருப்பலிதான்
இன்றைய புனிதர்கள்
சிலுவையில் அல்ல
துப்பாக்கி ரவைகளின்
துளைகளில் பலியெடுப்பு

ஆயிரம் வருடங்களில்
எங்கள் வாக்கும்
வேதமாகலாம்.
ஆனால் அடுத்த
சந்ததிக்காகவும்
எங்களால்
அழமட்டும்தான்
முடிகிறது.

பொலிவிய மலைகளில்
லட்சியம் தாங்கி
படுத்துறங்கினான்
அந்த சே.

உன் கைகள் துப்பாக்கி
தொடாதவை
பேனாவின் பலத்தையும்
உன் புத்தியில் முளைத்த
சிந்தனை
முத்துக்களையும்
எங்கள் இலட்சியங்களாய்
விட்டு விட்டு
நீ படுத்துறங்குகிறாய்

பாசிசம்
பொறுக்கவில்லை
ஆம் அதற்கு தெரியும்
துப்பாக்கிகளைவிட
உனது சிந்தனை வீரியது
என்று,

பேய்கள் நடமாடும்
ஊரினிலே
தேவர்களுக்கு என்ன
வேலை
ஆதனால்தானோ காலம்
உன்னை
பறித்து கொண்டது

நீ உயரத்தில்
வாழந்திருக்கலாம்
பள்ளத்தில் இருந்தவரின்
பரிதாபம் கண்டு இறங்கி
வந்தாய்
துணிச்சலோடு..

மேட்டுக்குடியின்
உச்சாணியில்
நீ உலக மூலையில்
எங்கோ
கடற்காற்று அணைக்கும்
நந்தவனத்தில்
குடிகொண்டிருக்கலாம்

பள்ளத்து
பாலைவனங்களை
கண்டு
நெஞ்சில் ஈரத்தோடு
வந்தாய்

மெல்லிய உடலும்
மேவிய நெற்றியும்
கூரிய பார்வையும்
மென் பேச்சும்..
ஆடம்பரமில்லா
எளிமை கொண்டவனே
பாசிசத்தின் மத்தியில்
துணிசசலோடு
நின்றவனே
உன்னை காத்திட
திராணியில்லா நாங்கள்
வெட்கத்தோடு
அழுகிறோம்
நாங்கள் எங்களையே
காக்க முடியாமல்

பாசிசத்தின் துப்பாக்கி
குழல்
என்றும் வென்றதில்லை
அது ஓர் நாள்
மரணிக்கும்
உங்கள் இலட்சியங்களும்
அந்நாள் உயிர் பெறும்

ஆனால் அதுவரைக்கும்
எத்தனை உயிர்களை
விலை
கொடுக்கப்போகிறோம்..
நிழலாடும் சூனியம்தான்
எங்கள் முன்னே
நிஜமாகி கிடக்கிறது.

**கண்ணீரோடு**
**தோழர் போல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம் கட்சிப் பத்திரிகை

ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் கட்சிப் பத்திரிகையாக "செந்தளம்" தமிழகத்திலிருந்து வெளியிடப்பட்டது. இதனால் உரிய காலத்தில் இதனை எடுத்துவந்து விநியோகிப்பதில் ஏற்பட்ட தடங்கல்கள தாமதங்கள் காரணமாகவும், மக்களுடன் தொடர்ச்சியாக கருத்து ரீதியன தொடர்பு பேணப்பட வேண்டிய அவசியத்தை கவனத்தில் கொண்டும் உளளுரிலேயே பத்திரிகை ஒன்றை வெளியிட வேண்டிய தேவை எழுந்தது.




இத்தகைய ஒரு சூழலில் தான் 1984 காலப்பகுதியில் கண்ணோட்டம் பத்திரிகை பிறப்பெடுத்தது.

அக்காலப்பகுதியில் நிலவிய இராணுவ கெடுபிடிகளுக்கு மத்தியில் ஒரு பத்திரிகையை பகிரங்கமாக அச்சுக்கூடங்களில் அச்சிட்டு வெளியிடுவது சாத்தியமானதாக இருக்கவில்லை. கட்சியின் பொருளாதார வளமும் அதற்கு ஈடுகொடுப்பதாக இல்லாமையால் கண்ணோட்டம் பத்திரிகை முதலில் ரோனியோ செய்யப்பட்டே வெளியிடப்பட்டது. பத்திரிகைக்கான ஆக்கங்களை எழுதியும், சேகரித்தும் அப்பத்திரிகைக்கு வடிவம் கொடுத்தவர் அக்காலப்பகுதியிலும், 1986 மார்கழியில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகும் வரையும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அரசியல் பிரிவின் செயலாளராக பொறுப்பு வகித்த தோழர் தாஸ் ஆவார். பத்திரிகையை மறைவிடம் ஒன்றில் வைத்து பிரதிகளாக்கி வெளிக்கொண்டு வருவதில் தோழர் வினோத் பிரதான பங்கு வகித்தார்.



தோழர் மஹநாமா
செயலாளர்
அரசாங்க லிகிதர்
சேவை சங்கம்

தோழர் வினோத் 1984 நவம்பர் 14ம் திகதி கட்சிப் பிரசுரங்களை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற வேளை, சங்கத்தானையில் விபத்துக்குளளாகி உயிரிழந்தார். தோழர் வினோத் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன அரசியல் பிரிவின் செயற்பாட்டாளர். ஆரம்பத்தில் கட்சியின் முன்னணி அமைப்புக்களான ஈழமாணவர் பொதுமன்றத்திலும் பின்னர் ஈழவாலிப முன்னணியிலும் அங்கம வகித்தார். மக்களை அணிதிரட்டுவதிலும், தோழர்களை அரசியல் மயப்படுத்துவதிலும் அவரது பங்களிப்பு கணிசமானதாகும்.

ரோனியோ பிரதியாக வெளியிடப்பட்ட கண்ணோட்டம் பத்திரிகை பின்னர் அச்சிட்டு வெளியிடப்பட்டது. பத்திரிகையின் வளர்ச்சக்கு தோழர் தாசின இடையறாத, கடின உழைப்பும் தோழர் கஸ்ரோவின் பங்களிப்பும் பிரதான மானவையாகும். 15நாட்களுக்கு ஒரு முறை வெளியிடுவது மாதம் ஒரு முறை வெளியிடுவது என்று திட்டங்களும் தீர்மானங்களும் மேற்கொண்ட போதும் பாதுகாப்பு காரணங்களாலும் நிதி நெருக்கடியினாலும் இடையிடையே நின்றுபோகும் பத்திரிகை வெளியீடானது 1986 காலப்பகுதியில் மீண்டும் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தோழர் தாசன் அந்த வேலைகளை பொறுப்பேற்றிருந்தார். கண்ணோட்டம் பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவதற்கு எப்போதும் பக்கபலமாக இருந்தவர் தோழர் கஸ்ரோ ஆரம்பகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் பெரும்பாலான பிரசுரங்களை அச்சிடுவதற்கு பெரிதும் துணையாய் இருந்தவரும் அவரே. புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஐ அழித்தொழிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளையிட்டு மனம் புண்பட்டிருந்தாராயினும் கட்சியை மீண்டும் கட்டியமைத்து செயற்பட வேண்டும் என்பதில் உறுதியோடிருந்தார்.

1987 ஜுன் 01ம் திகதி தனது வீட்டிலிருந்து சைக்கிளில் சென்றவர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார். தோழர் கஸ்ரோ கட்சியின் வளர்ச்சிக்கு பல்வேறு விதத்திலும் பங்களித்தவர். அதனையும் இவ்விடத்தில் குறிப்பிடாமல் விடமுடியாது. ஆயுதப்பயிற்சி பெறச் சென்ற அனேக தோழர்கள் அவரை மறந்திருக்க முடியாது. பயிற்சிக்கு சென்ற பல அணிகளை சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட தோழர்களுக்கு பல மாதங்கள் தங்குமிடமளித்து, உணவளித்து பாதுகாத்து அனுப்பிவைத்தவர். நேரகாலம் பார்க்காமல் கட்சிக்கு தேவையிருந்தபோது தனது உழைப்பை வழங்கியவர்.

கண்ணோட்டம் பத்திரிகையானது பல நூற்றுக்கணக்கான தோழர்களின் அர்ப்பண உணர்வு மிக்க உழைப்பு, பங்களிப்போடு மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டது. அதேவேளை மக்களின் உளப்பூர்வமான ஆதரவு, பொருளாதார ரீதியிலான பங்களிப்பு பத்திரிகையை தொடர்ந்து வெளியிடுவதற்கு உந்துதலாயிருந்தது. நாள் முழுக்க பத்திரிகை விற்பனையில் ஈடுபட்ட தோழர்கள் தமது உணவுக்காகக் கூட அந்த பணத்திலிருந்து ஒரு சிறு தொகையையேனும் செலவிடுவதை தவிர்த்து மொத்தப்பணத்தையும் தான் சார்ந்த கட்சி அமைப்புக்களில் ஒப்படைப்பதிலேயே திருப்தி கொண்டிருந்தார்கள். அந்தளவிற்கு போராட்டத்திற்கு விசுவாசமாகவும், சமூகத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்ற அர்ப்பண உணர்வோடும் உழைத்த பல நூற்றுக்கணக்கான தோழர்களை போராட்ட களத்திலிருந்து பிறந்த மண்ணிலிருந்து விரட்டினார்கள் மண்ணுக்காகப் போராடும் புலிகள்.

புலிகள் ஈ.பி.ஆர்.எல்எவ் மீது தாக்குதல் தொடுக்கும் வரை வெளிவந்து கொண்டிருந்த கண்ணோட்டம் பத்திரிகை புலிகளின் தாக்குதலையடுத்து, இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் 1988 ஆம் வருடம் புதிய கண்ணோட்டம் என்ற பெயரில் மீண்டும் மககளுடன் அரசியல் பேசியது. கொழும்பிலுள்ள அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் ஒரு அறையிலிருந்து சிங்கள முற்போக்கு, ஜனநாயக சக்திகளின் உதவியுடன் பிரசுரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. நேர்த்தியாகவும், கிரமமாகவும் பத்திரிகை வெளிவந்தது. எழுத்தாற்றல் உள்ள பல தோழர்களின் பங்களிப்பு இருந்தபோதும் முன்நின்று மீண்டும் வெளிக்கொண்டு வந்தவர் தோழர் வரதராஜப் பெருமாள் அவர்களே.

மாகாண அரசின் புதிய பொறுப்புக்களாலும் பத்திரிகை வெளியீடு மீண்டும் தடைப்பட்டுப்போனது. ஆனால், இக்காலப்பகுதியில் மக்களுடனான தொடர்புகளை பேணுவதற்கு விடுதலை என்ற தினசரிப் பத்திரிகை வெளியிடப்பட்டது. இந்த பத்திரிகையின் பிரதிகள் மக்களை பலவந்தப்படுத்தி விற்கப்படுவதாகவும், அமைதி காப்பு படையின சோதனைச் சாவடிகளில் பயணிகள் பத்திரிகையை வாங்குமாறு வற்புறுத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்தது. இவ்வாறான சம்பவங்கள் நடக்கவே இல்லை என்று அடித்துக் கூறமுடியாது.

ஆனால், எக்காலத்திலும் கட்சித் தலைமை இவ்வாறான செயற்பாட்டுகளை அனுசரிக்கவில்லை அவ்வாறு சில இடங்களில் இடம்பெற்றதாக கேள்வியுற்றவுடன் அவற்றை தடுத்து நிறுத்தவே பிரயத்தனம் எடுத்தது.

ஆனால், சோதனைச் சாவடிகளில் விடுதலை பத்திரிகை பலவந்தப்படுத்தி விற்பனை செய்வதாக குற்றம்சுமத்தி பேசியும் எழுதியும் வந்தவர்கள் ஏ9 வீதியில் வைத்து புலிகள் பணமாகவே பறித்தெடுத்தபோது அவர்களின் வாயும், பேனாவும் அசைவற்றுக் கிடந்தன. மறுபுறத்தில் இந்த பலவந்தத்தை வரி என்றும் பங்களிப்பு என்றும் நியாயப்படுத்தியவர்களையும் கண்டோம். இவ்வாறு ஒருகண்ணில் வெண்ணெயும மறு கண்ணில் சுண்ணாம்பையும் தடவும் தமிழ் சமூகத்தின் குணாம்சமும் தான் எமது போராட்டத்தின் தேக்கத்திற்கும், சிதைவுக்கும் ஒருவகையில் காரணம் என்றால் மிகையில்லை.

1994 இல் மீண்டும் அதே பொலிவுடன் புதிய கண்ணோட்டம் பத்திரிகை வெளியிடப்பட்டது. அவ்வப்போது சில தாமதங்கள் காணப்பட்ட போதும் 1999 வரை பத்திரிகை தொடர்ந்து வெளியிடப்பட்டது. இக்காலத்தில் பத்திரிகைக்கு ஆக்கங்களை எழுதும் ஆற்றல் கொண்ட தோழர்களினது பங்களிப்பு மேலும் அதிகரித்திருந்தது. அவர்களது பங்களிப்புடன் அப்போது கட்சியின் செயலாளர் நாயகமாக பதவிவகித்த சுரேஸ் பிரேமச்சந்திரனின் மேற்பார்வையில் பத்திரிகை வெளியிடப்பட்டது. அக்காலத்தில் அவர் பத்திரிகையில் எழுதிய கருத்துக்களுக்கும் இன்று அவர் எடுத்திருக்கும் நிலைப்பாட்டுக்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமான இடைவெளி காணப்படுவதற்கு அப்பத்திரிகைகளும் சான்று பகரும்.



தோழர் கஸ்ரோ

இக்காலத்தில் வவுனியா மன்னார் பகுதிகளில் மீண்டும் தோழர்கள் வீடுவீடாகவும், வர்த்தக நிலையங்கள் தோறும் சென்று பத்திரிகை விற்கும் சூழல் காணப்பட்டது. கொழும்பில் பத்திரிகை விற்பனையில் ஈடுபடும் வர்த்தக நிலையங்கள் ஊடாகவும் பத்திரிகையை விநியோகிக்க முடிந்தது. அந்தக்காலத்திலும் பத்திரிகையை வாங்கி யாருடைய கண்ணிலும் படாமல ஏனைய புத்தகங்கள் பத்திரிகைகளுக்கிடையே மறைத்து வைத்துவிட்டு அடுத்த தடைவ போகும்போது ஒருவரும் வாங்கவில்லை என்று திருப்பித்தந்த தமிழ் தேசியவாதிகளும் இருக்கத்தான் செய்தார்கள்.

யாழ் குடாநாட்டில் 10 ரூபா பெறுமதியான பத்திரிகையை விற்பனை செய்வதற்காக கடைகடையாக ஏறி இறங்கிய தோழர்களிடம் சில கடை உரிமையாளர்களே முதலாளி இல்லை என்று சொனன சம்பவங்களும் இவர்களை புலிகள் அழைத்தபோது புலிகளின் மறைவிடங்களுக்குச் சென்று பல இலட்சங்களை கப்பமாக செலுத்திவிட்டு வந்து கமுக்கமாக இருந்து கொண்ட சம்பவங்களும் எமது சமூகத்தில் நிகழ்ந்திருக்கின்றது.




புலிகள் அச்சுறுத்தியும், மிரட்டியும மாற்றுக் கருத்துக்கள் மக்கள் மத்தியில செல்வதை பலவழிகளிலும் தடுக்க முற்பட்டார்கள். பத்திரிகை முகவரிக்கு கெட்டவார்த்தைகள் கலந்த, கலப்படமில்லாத கடிதஙகளை அனுப்பினார்கள். வெளியிடுபவர்களும், விநியோகிப்பவர்களும், நுகர்வோரும் புலிகளால் அச்சுறுத்தப்பட்டார்கள். கருத்து சுதந்திரம் பற்றி பேசுகின்ற பலர் புலிகளின் இந்த நடவடிக்கையை கருத்துச் சுதந்திரம் மீறப்படுகின்ற ஒரு செயலாக வகைப்படுத்தாமல் அரசியல் பேதம், இயக்கங்களிடையேயான மோதல் என்றே வகைப்படுத்தி ஒதுங்கிக் கொண்டனர்.

புலிகள் மட்டுமன்றி புலிகளை போன்றே இதர இயக்கங்களை சேர்ந்தவர்களும் புலிகளின் அதே பாணியில் தங்களை விமர்சித்து பத்திரிகையில் எழுதக் கூடாது என்றும், எங்களுடைய ஏரியாவில் பத்திரிகை விற்கக் கூடாதென்றும் பத்திரிகை விற்பனையில் ஈடுபட்ட பல தோழர்களை அடித்து துன்புறுத்திய, பத்திரிகைகளை பறித்து நாசம் செய்த சம்பவங்களும் பல தடைவ நடந்திருக்கின்றது. இவற்றை இப்போது எண்ணிப்பார்த்தால் அவர்களுக்கே வியப்பாக இருக்கும் இதற்காக தமது மனவருத்தத்தை தெரிவித்து நாம் சரியானதை செய்கின்றோம் என்ற உணர்வை ஏற்படுத்தியவர்களும் இல்லாமல் இல்லை.

இரண்டாயிரமாம் ஆண்டு ஆரம்பத்தில் வரதராஜப்பெருமாளை கட்சியிலிருந்து வெளியேற்றுவதாக தன்னிச்சையாக முடிவெடுத்த சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது பெயரில் புதிய கண்ணோட்டம் பத்திரிகையின் பதிப்புரிமையை பெற்றிருந்த காரணத்தினால் கட்சியின் இதர உடமைகளை போன்றே பத்திரிகையையும் தனதாக்கிக் கொண்டார். வரதராஜப்பெருமாளின் வெளியேற்றத்தால் கட்சி பிளவுபடவில்லை தனது தலைமையின் கீழ் கட்சி தொடர்ந்து செயற்படுகின்றது. என்று காட்டுவதற்காக இரண்டு இதழ்களை வெளியிட்டதுடன் கட்சிப் பத்திரிகை முடக்கப்பட்டது.

எனவே, நீண்ட வரலாற்றை கொண்ட கட்சிப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர வேண்டும், எமது அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக அவ்வப்போது மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் அவை தொடர்பாக அவர்களது அபிப்பிராயங்களை தெரிந்துகொண்டு எமது நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும் என்ற நோக்குடன் மீணடும் கண்ணோட்டம் பத்திரிகைக்கு பதிப்புரிமை பெற்று கட்சிப்பத்திரிகையாக வெளியிடப்பட்டு வருகின்றது.

ஆரம்பித்த நாளிலிருந்து இன்று வரை கட்சியின் அரசியல் நிலைப்பாடுகளை மக்களுடன் பகிர்ந்து கொள்வதுடன் மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து குரல் கொடுத்தும் வருகின்றது. எமது போராட்ட வரலாற்றுடன் தொடர்புடைய பிரதான இயக்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பத்திரிகையை வெளியிட்ட போதும் இன்றுவரை தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பது புலிகளின் விடுதலைப் புலிகள் பத்திரிகையும், எமது கண்ணோட்டம் பத்திரிகையும் மாத்திரமே. புலிகளின் பத்திரிகை ஆரம்பத்திலிருந்தே மளமளப்பான தாளில் பல வண்ணத்தில் வெளிவந்தது. எமது கட்சியின் நிதி நிலமைக்கு தகுந்தாற் போல் பத்திரிகை தனது உருவத்தை மாற்றிக் கொண்டாலும் உள்ளடக்கம் எப்போதும் மக்களின் நலன் சார்ந்தும், தூரநோக்குடனான அரசியல் பார்வையுடனும் கருத்துக்களை முன்வைத்து வந்திருப்பதை வெளியீடுகள் ஒவ்வொன்றும் பறைசாற்றும்.

வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு தோழர்களின் பொறுப்பின் கீழ் அவர்களின் வழிகாட்டலில் ஒரு கூட்டு உழைப்பில் எமது பத்திரிகை செழுமையும் முழுமையும் பெற்று நிலைத்திருக்கின்றது. பல நூற்றுக்கணக்கான தோழர்களின் கடின உழைப்பு எமது பத்திரிகையை வாழவைத்திருக்கின்றது. ஆவர்களது கடின உழைப்பு காலத்தை வென்று வாழும்.



தோழர் வினோத்

*குறிப்பு: இந்த பயணத்தில் உயிர் நீத்த தோழர்களதும், கட்சிக்காக உழைத்து பின்னர் பல்வேறு காரணங்களுக்காகவும் ஒதுங்கிக்கொண்டவர்களினதும் பெயர்கள் மட்டுமே இங்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பத்திரிகையின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்பை வழங்கிய இன்னும் சிலரது பெயர்கள் இங்கு இடம்பெறவில்லை*

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, ... C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மாணவர் பொதுமன்றத்தின் அரசியல் நடவடிக்கைகள் சில

அரசின் அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகவும் ஒருமித்து குரலெழுப்ப மக்களை அணிதிரட்டும் நோக்கில் 1982 ஏப்ரல் 5 முதல் 7 வரை புரட்சிகர எழுச்சி யாத்திரை ஒன்றை ஈழ மாணவர் பொதுமன்றம் ஏற்பாடு செய்திருந்தது. யாழ் பெரிய கோவில் முன்பாக பொலிஸாரின் தடையையும் மீறி செல்ல முற்பட்ட பாதயாத்திரையை பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசி கலைத்தனர். இந்த பாதயாத்திரையை முன்னிட்டு ஈழமாணவர் பொதுமன்றத்தின் செயலாளர் மு.டேவிற்சன் விடுத்த பத்திரிகை செய்தியையும் பாதயாத்திரையில் திரண்ட மக்களை பொலிஸார் வழிமறித்து நிற்பதை அருகிலுள்ள படத்திலும் காணலாம்.

## ஈழமாணவர் பொதுமன்றத்தின் புரட்சிகர எழுச்சி யாத்திரை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்தும், கைது செய்யப்பட்ட அனைத்து ஈழவிடுதலைப் போராளிகளை விடுவிக்கவும் சிங்கள முதலாளித்துவ அரசின் சகல ஒடுக்கு முறைகளை எதிர்த்தும் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற புரட்சிகர எழுச்சி யாத்திரை ஒன்றை நடாத்த ஈழமாணவர் பொதுமன்றம் தீர்மானித்துள்ளது. யாத்திரையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் விவசாயிகள் இளைஞர்கள் பெண்கள் மாணவர்கள் இணைவதற்கு ஈழமாணவர் பொதுமன்ற அங்கத்தினர்கள் தொகுதி ரீதியாக ஒழுங்குகளை செய்து வருகின்றனர். இப்புரட்சிகர யாத்திரை வேலைத்திட்டங்களில் சகல முற்போக்கு சக்திகளையும் அணிதிரண்டு ஆதரவளிக்குமாறு அறைகூவல் விடுக்கும் அதேவேளையில் இப்பாதயாத்திரை வெற்றி ... உதவிகளை நாடி மக்கள் மத்தியிலும் எமது அங்கத்தினர்களுக்கு பூரண ஆதரவளிக்குமாறும் ஈழமாணவர் பொதுமன்றத்தினராகிய நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். பாதயாத்திரைக்கான முன்னேற்பாடுகள் செய்து முடிந்ததும் மேலதிக விபரங்களை அறியத்தருவோம்.

இவ்வாறு ஈழமாணவர் பொதுமன்ற நிர்வாகச் செயலாளர் இரு.மு.டேவிட்சன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சர்வசன வாக்கெடுப்பு ஒன்றில் பானைக்கு வாக்களிப்பதன் மூலம் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிப்பதற்கு அன்றைய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு தொழிற்சங்கங்களுடன் ஒன்றிணைந்து ஈழமாணவர் பொதுமன்றமும் குரல் கொடுத்தது. பல்வேறு சமூகத் தளங்களிலிருந்தவர்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியை ஈபிஆர்எல்எவ் ஆரம்பத்திலிருந்தே பின்பற்றி வந்ததற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். அனைத்து முற்போக்கு, ஜனநாயக சக்திகளையும், வெகுஜன அமைப்புக்கள், தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் போராட்டத்தை வீரியம் மிக்கதாக்குவதற்கான வேலைத்திட்டங்களிலேயே ஈ.பி.ஆர்.எல்.எவ் எப்போதும் ஈடுபட்டு வந்திருக்கின்றது. இதற்கு எதிர்மாறாக தமிழர்களின் பலத்தை சிதறடிக்கும் நடவடிக்கையிலேயே புலிகள் அன்றும் இன்றும் எப்போதும் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். இந்த தொழிற்சங்க கூட்டுக்குழுவில் அங்கம்வகித்த நவ சமசமாஜக் கட்சியின் வடபிரதேச தலைவரும் தொழிற்சங்கவாதியுமான தோழர் அண்ணாமலை, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேசத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான தோழர் எஸ். விஜயானந்தன் ஆகிய இருவரும் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். அவர்கள் இருவரையும் இத்தியாகிகள் தினத்தில் நினைவு கூர்ந்து மரியாதைப் படுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

பாராளுமன்றத்தின் ஆயுள் காலத்தை நீடிப்பதை எதிர்ப்போம்!
ஜனநாயகத்தை அழிக்கும் முயற்சியை தோற்கடிப்போம்!
சர்வாதிகாரப் போக்கை முறியடிப்போம்!
குடம் சின்னத்துக்கு வாக்களிப்போம்!

25 தொழிற்சங்கங்கள் இணைந்து நடாத்தும்

### மாபெருங் கூட்டம்

இடம்: யாழ் திறந்தவெளியரங்கு
காலம்: 15 - 12 - 82 புதன்கிழமை மாலை 5 மணி

பேச்சாளர்கள்:

1. தோழர் R. M. T. B. இரத்நாயக்கா (தலைவர், அ. வி. சே. சங்கம்)
2. ,, V. S. ராஜா (இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம்)
3. ,, A. இளஞ்செழியன் (இலங்கைத் தொழிலாளர் அணி)
4. ,, T. அந்திராதி (மத்திய வங்கி ஊழியர் சங்கம்)
5. ,, S. விஜயானந்தன் (இ. தொ. ச. ச.)
6. ,, H. N. பெர்னாண்டோ (இலங்கை ஆசிரியர் சங்கம்)
7. ,, ஆ. துரைராஜசிங்கம் (கூட்டுத் தொழிலாளர் சங்கம்)
8. ,, S. டேவிட்சன் (ஈழ மாணவர் பொது மன்றம்)
9. ,, W. L. D. அன்ரன் (தொ. ஐ. போ. போ. சங்கம்)
10. ,, ப ஜீவரத்தினம் (இ. வி. தொ. முன்னணி)
11. ,, D. S. மல்லவாராச்சி (அகில தொழிலாளர் சங்கம்)
12. ,, S. தம்பு (இ. போ. ச. ஊழியர் சங்கம்)
13. ,, வை. வன்னியசிங்கம் (நகரசபை தொழிற் சங்கம்)

அனைவரும் வருக.

விடுதலை எழுச்சி
விழா! மே 1
மாபெரும்
புரட்சிகர மேதின ஊர்வலம்
ஆரம்பம்: பி.ப. 3மணி
இடம்: காரைதீவு
பொதுக்கூட்டம்
நேரம்: பி.ப. 4மணி
இடம்: கல்முனை
☆ ஈழத்தொழிலாளர் விவசாயிகளே அணிதிரள்வீர்!
☆ ஈழமக்கள் விடுதலைக்கு தொழிலாளர் விவசாயிகள் தலைமையை உறுதிப்படுத்துவோம்!
☆ ஈழமக்கள் விடுதலைப் போராட்டம் வெல்க!

கிழக்கில் மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

யாழ் மானிப்பாயில் பிஎல்ஓ ஆதரவுக் கண்காட்சி

GUES
கண்டனக் கூட்டம்
மாலை 5.00மணி
கண்காட்சி
காலை 9.00 - மாலை 4.00
ஜூலை 23

ஈழமாணவர் பொதுமன்றத்தின் பணிகளை தமிழ்மக்கள் மத்தியில் தனது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த காலத்தில் அதன் வேலைகளில் முக்கிய பங்குவகித்த தோழர்கள் டேவிற்சன், ஜீவா (கி.பி) தவிர்ந்த ஏனையோர் தலைமறைவாகவே செயற்பட்டனர். இதனை கட்சித் தலைமையானது திட்டமிட்டே மேற்கொண்டது. இவ்வாறு ஈழமாணவர் பொதுமன்றத்தின் பணிகளில் ஈடுபட்ட தோழர்கள் சிலர் இறந்துவிட்டார்கள், சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டார்கள், ஏனையோர் தொடர்ந்தும் எமது கட்சிப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். யாழ் பிராந்தியத்தை சேர்ந்த தோழர்கள் அசோக், சேகர், சுகு, கமல், ராது, செழியன், ரோஹான், ராஜன் ரவி, றெக்ஸ், மட்டக்களப்பு பிராந்தியத்தைச் சேர்ந்த தோழர்கள் சிவா, குமார், பாலா, தைரி, வன்னி பிராந்தியத்தைச் சேர்ந்த தோழர்கள் நடேசலிங்கம், ரட்ணம், சாந்தி கொழும்பில் தோழர் தயுர் இங்கிலாந்தில் தோழர் சாந்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.



அரசின் கல்வி வெள்ளை அறிக்கைக்கு எதிராக ஈழமாணவர் பொதுமன்றம் ஏற்பாடு செய்திருந்த கண்டனக் கூட்டத்தை முன்னிட்டு ரி. சுகுமார் (தோழர் சுகு) வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் இதுவாகும். அரசின் தவறான போக்கை கண்டித்து தமிழ் சமூகத்தின் நலனுக்காக குரல் கொடுத்த அதிபர் ஆனந்தராஜா பின்னர் தமது விருப்பு வெறுப்புக்களுக்கு இணங்க செயற்படவில்லை என்ற காரணத்தினால் அரசின் அடிவருடி என பழிசுமத்தி புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதை இங்கு நினைவு படுத்த விரும்புகின்றோம். புலிகளுக்கு மிகவும் அனுசரணையாக செயற்பட்ட யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனும் பின்னர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கண்டனக் கூட்டம்

இடம்: யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: 24 - 1 - 82 ஞாயிறு
காலை 9 - 00 மணி

GUES

வெள்ளை அறிக்கை,
ஈழ மக்களுக்கு
அபாய அறிக்கை

- இலவசக் கல்விக்கு குழிபறிப்பு
- கொத்தணி முறையின் தாக்கம்
- பாடசாலை நிர்வாகத்தில் சிக்கல்
- சமூகவியலில் அதன் தாக்கம்
- பாடத்திட்டத்தில் பாதிப்பு

இவற்றை முன்வைத்து உரை நிகழ்த்துவோர்

திரு மு. நித்தியானந்தன் (விரிவுரையாளர்)
சு. மகாசிவம் (ஆ. ச. செயலாளர்)
வெ. யோகேஸ்வரன் (யாழ் பா. உ.)
எஸ். லோகநாதன் (ஆசிரியர்)
ம. செல்வின் (பல்கலைக்கழக மாணவன்)
திரு க. அருணாசலம் (அ. ச. செயலாளர்)
சி. ஆனந்தராஜா (பரியோவான் கல்லூரி அதிபர்)
கோவை மகேசன் (சுதந்திரன் ஆசிரியர்)
ந. இராசநாயகம் (மாணவர் அமைத் தலைவர்)

மாணவ சமூகமே அணிதிரண்டு வா!
மக்கள் சமூகமே அலையென எழுந்து வா
கொடுமையை உணருங்கள்! அனைவரும் வாருங்கள்!
ஆதரவு தாருங்கள்!

ஈழ மாணவர் பொதுமன்றம் (G.U.E.S.) பிரசுரம்

இலங்கையில் ஆயுதப்படைகளின் வன்முறைகளுக்கு எதிராக ஈழமாணவர் பொதுமன்றம் இங்கிலாந்தில் உள்ள இலங்கை தூதரகத்தின் முன்னால் மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தியது 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்த போராட்டத்தின் போது வெளியிடப்பட்ட பிரசுரம்

STOP
BUTCHERING THE TAMILS IN SRI-LANKA !!!

GUES

GENERAL UNION OF EELAM STUDENTS CALL FOR A SIT-IN TO PROTEST AGAINST THE ATROCITIES BY THE ARMED FORCES OF SRI-LANKA GOVERNMENT.

WE INVITE ALL MEMBERS OF THE TAMIL COMMUNITY AND OTHER INTERNATIONAL SUPPORTERS TO PARTICIPATE IN THE

SIT-IN

IN FRONT OF THE SRI-LANKA HIGH COMMISSION,
13, HYDE PARK GARDENS,
LONDON W2.
AT 8 A.M ON FRIDAY
26th AUGUST 1977.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் புலிகளின் சிறையிலிருந்து தப்பிய ஒரு கைதியின் அனுபவங்கள்.

நான் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) அங்கத்தவனாயிருந்தேன். தனிப்பட்ட காரணங்களுக்காக, இந்திய இராணுவம் இலங்கையில் இருந்த வேளையில் நான் அமைப்பை விட்டு வெளியேறினேன். அதன பின் எனது தனிப்பட்ட வாழ்கையை நடாத்துவதற்காக ஒரு வான் **(VAN)** ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு சீவியம நடத்தி வந்தேன்.

அன்று 1990ம் ஆண்டு யூலை மாதம் 25ம் திகதி என்று நினைக்கிறேன். நான் பிளவுஸ் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். அப்போது ஆயுதம் தாங்கிய இரு இளைஞர்கள் என்னை நோக்கி வந்தனர் "பொன் மாஸ்ட்டர் (உள்ளூர் புலி பொறுப்பாளர்) உன்னை சந்திக்க வேண்டுமாாம்" என்று கூறி என்னை அழைத்து சென்றனர். நான் பொன் மாஸ்டரின் முகாமில் விடப்பட்டேன்.

ஆரியகுளம் சந்தியில் நின்ற எனது வானையும் அவர்கள் எடுத்து வந்தனர். நான் சென்ற நேரம் பொன் மாஸ்ட்டர் அங்கு இருக்கவில்லை. முதல் நாள்தான் வவுனியாவில் இருந்து புறப்பட்டு இரவிரவாக வானில் வந்தேன். இதனால் எனக்கு நித்திரை கொள்ளவேண்டும் போல் இருந்தது. என்னை எனது வானில் படுக்க விடும்படி கேட்டேன். அனுமதித்தார்கள். படுத்தேன்.

மாலை 5 மணியளவில் என்னைத் தட்டி எழுப்பினார்கள். பொன் மாஸ்டர் வந்திருப்பதாகவும் என்னை பார்கப்போவதாவும் கூறினர். நான் பொன்மாஸ்டரை சந்தித்தபோது வேறு யாரோ ஒருவர் என்னை சந்திக்க வருவதாவும் ஓரமாக இருக்கும் படியும் கூறினார். இரவு 7 மணிவரை எவரும் வரவில்லை. என்னை வீட்டுக்குப் போகவிடுங்கள் நாளை காலை நான் திரும்பி வருகிறேன் என்று கேட்டேன். அவர்கள் மறுத்து விட்டனர். இரவு 9 மணிக்கு அறையொன்றுள் படுக்க விட்டனர். இரவு 11 மணிக்கு சாப்பிட ஏதோ தந்தனர்.

மறுநாள் காலை என்னை முகம் கழுவ அனுமதித்தனர். காலை எட்டு மணி இருக்கும் வெள்ளை நிற வான் ஒன்றில் ஒரு உயரமான மனிதன் வந்திறங்கினான். பொன் மாஸ்ரரிடம் எதோ பேசினான். பின்னர் என்னைப் பார்த்து "வானில் ஏறி குப்புறப்படு" என உரத்த தொனியில் கத்தினான்.

நான் வானிற்குள் ஏறினேன் அங்கு என்னைப்போல் ஒருவனும் குப்புறப் படுத்திருந்தான்.

சுமார் 15 நிமிடப் பயணத்தின் பின்னர் வான் ஓர் அழகான மாடி வீட்டின் முன் நின்றது. கிட்டத்தட்ட 10 விசாலமான அறைகளைக் கொண்ட வீடு அது. அங்கு என்னை ஓர் அறைக்குள் விட்டுப் பூட்டினர் ஏற்கனவே அறைக்குள் 15 பேர் இருந்தனர்.

இரண்டு மணிநேரம் வரை யாரும் என்னுடன் பேசவில்லை. நான் மௌனம் கலைத்து "எப்போது கைது செய்யப்பட்டீர்கள்" என்று கேட்டேன். கடந்த பத்து நாட்களுக்குள் கைது செய்யப்பட்டதாகக் கூறினார்கள். நாம் எங்கு இருக்கிறோம் என்பது யாருக்குமே தெரிந்திருக்கவில்லை.

ஆனால் அடிக்கடி கோயில் மணிஓசை கேட்டது. நல்லூர் திருவிழா நேரம் அது. எனவே நல்லூருக்கு கிட்டடியில் ஏதாவது ஒரு இடமாக இருக்கலாம் என ஊகித்துக் கொண்டோம்.

மாலை 3 மணியிருக்கும் துப்பாக்கி சகிதம் 15 வயது மதிக்கத்தக்க ஒரு புலி உறுப்பினர் எமது அறைக்குள் வந்தான். யாராவது மலசலம் கழிக்க வேண்டியிருக்கிறதா என கேட்டான். யாராவது தப்பியோட முனைந்தால் தலை பறக்கும் என எச்சரித்து விட்டு இருவர் இருவராக எம்மை வெளியே அழைத்துச் சென்று மலசலம் கழிக்க விட்டான்.

மாலை 5 மணியளவில் நான் இன்னோர் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு என்னை அழைத்து வந்த உயரமான மனிதன் இருந்தான்.

என்னைக் கண்டவுடன் ஆத்திரம் கொண்ட அவன் எனது வானை எங்கே வாங்கியதென்றும், வானின் சாரதி எங்கே [illegible] பற்றி சகல விபரங்களையும் தருமாறு என்னை வற்புறுத்தினான். நான் எல்லாவற்றையும் கூறினேன். திடீரென்று என்னை ஒரு பொல்லால் என்னை தாக்க தொடங்கினான். எங்களிடம் அகப்படாமல் இதுவரைக்கும் எங்கு ஒளிந்திருந்தாய் எனக் கூச்சலிட்டு என்னை அடித்தான். மீண்டும் பழைய அறைக்குள் என்னை அடைத்தான்.

27 ம் திகதி காலை அதே உயரமான மனிதன் என்னிடம் வந்தான். எனது வானில் என்னை ஏற்றிக் கொண்டு குப்புறப்படுக்குமாறு கட்டளையிட்டான். சுமார் 15 நிமிடம் பயணத்தின் பின்னர் என்னை எழுப்பி எனது சாரதியின் இடத்தை காட்டுமாறு கேட்டான். நான் அவனுக்கு சாரதியின் வீட்டிற்கு வழி காட்டினேன். அச்சமயம் சாரதி வீட்டில் இருக்கவில்லை.

சாரதி வந்தவுடன் பொன் மாஸ்ரரை போய் பார்கச் செல்லுமாறு சாரதியின் குடும்பத்திற்கு உத்தரவிட்ட பின்னர் மீண்டும் வானில் ஏறினான். வரும் வழியில் வேறெங்காவது சாரதி நிற்கக்கூடுமா என என்னிடம் கேட்டான். நான் அவரது சகோதரி வீட்டை காட்டினேன். அங்கும அவர் இருக்கவில்லை. அதே உத்தரவுகளை சாரதியின் சகோதரிக்கும் பிறப்பித்து விட்டு மீண்டும் என்னை முந்திய இடத்திற்கு கொண்டு வந்து விட்டான்.

28ம் திகதி எனது சாரதியை என்முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். என்னைக் கொண்டு அவரை அடையாளம் கண்டு கொண்டனர்.

29ம் திகதி எம்மிருவரது கண்களும் கட்டப்பட்டன. நாம் வேறொரு பழைய வீடொன்றிற்கு அழைத்துச் செல்லப்பட்டோம் அந்த வீட்டில் ஏறத்தாள 15 இற்கும் 18 இற்கும் இடைப்பட்ட வயதுடைய பத்து இளைஞர்கள் இருந்தனர். அனைவரும் கைகளில் பெரிய பொல்லுகளுடன் நின்றனர். எமது பெயர் விபரங்கள் எடுக்கப்பட்டன. பின்னர் நாம் அறை யொன்றினுள் அடைக்கப்பட்டோம். 10 அடி நீள அகலமுடைய அவ்வறையில் ஏற்கனவே 30 கைதிகள் இருந்தனர். ஒரு மாதத்திற்கு மேலும் 2 மாதத்திற்கு உட்பட்டுமுள்ள கால கட்டத்திலிருந்து அக் கைதிகள் அங்கிருப்பதாக அறிந்து கொண்டேன். எனக்குத் தெரிந்த அனைத்தையும் புலிகளிடம் செல்லி விட வேண்டும் எனவும் இல்லாவிடில் "கசாப்புக் கடைக்கு" அனுப்பப்படுவேன் என்றும் அங்கு சென்றவர்கள் திரும்பியதற்கு சரித்திரமே இல்லையென்றும் கூறினார்கள்.

2ஆம் திகதி காலை 11 மணி இருக்கும் "ஆரந்த ரெலோ வேசைமோன், R என்ற சத்தத்துடன் ஒருவன் கதவைத் திறந்தான். அவன் வாயில் என் பெயர் வந்தது எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. ஏனென்றால் வழமையாக என் பெயருக்கு பதிலாக இலக்கம் ஒன்றை சொல்லியே கூப்பிடுவார்கள். பெயர் சொல்லி கூப்பிட்டவன் என்னை கூட்டிக்கொண்டு போய் ஒரு தூணில் கட்டினான்.

எனது சாரதி அசைவற்று நிர்வாணமாக எனக்குப் பக்கத்தில் கிடந்தார். பொல்லால் அடித்த காயங்களால் அவர் உடல் முழுவதும் நிரம்பியிருந்தது. நான்கு இளைஞர்கள் கையில் பொல்லுடன் அங்கு நின்றனர் அவர்கள் நால்வரும் 15 வயதிற்கு குறைந்தவர்களென நிச்சயமாக நான் கூறுவேன். சாரதி இறந்து விட்டதாக அவர்கள் என்னிடம் கூறினர். அதன் பின்னர் பொல்லுகளால் என்னை அடிக்கத்தொடங்கினர். யாரைக் கொலை செய்தாய், எங்கு கொள்ளையடித்தாய், உனது ஆயுதங்களை எங்கே மறைத்து வைத்திருக்கின்றாய், போன்ற கேள்விகளை கேட்டு என்னைத் தொடர்ந்து அடித்தனர். நான் இவ்வாறான எந்தச் செயல்களிலும் சம்மந்தப்படவில்லை, என்னை அடிக்காதீர்கள் எனக் கெஞ்சினேன். அது செவிடன் காதில் ஊதிய சங்கானது. நான் சுய நினைவை இழக்கும் வரை என்னை அடித்துக் கொண்டேயிருந்தனர்.

மூன்றாம் தேதி காலை அவர்கள் மீண்டும் என்னை அறையிலிருந்து இழுத்துச் சென்றனர். சாரதி எல்லாவற்றையும் சொல்லி விட்டான். நீ உணமையைச் சொல்லாவிடில் உனக்கும் சாரதிக்கு நேர்ந்த கதிதான் என்று கூறினர். எனது வாய்க்குள் பெரிய மரத் துண்டொன்றை ஒருவன் திணித்தான். மற்றவர்கள் பார்த்து சிரித்தனர். தொடர்ந்தும் பலத்த சித்திரவதை. எனது குடும்ப உறவினர் பற்றிய சகல விபரங்களையும் கேட்டு எழுதினர். ரெலோ அமைப்பைப் பற்றிய சகல விபரங்களையும் கேட்டு எழுதினர். ரெலோ அமைப்பைப் பற்றிய சகல விபரங்களும் அடங்கிய அறிக்கை ஒன்றை தயார் செய்து அதில் எனது பங்களிப்பு பற்றியும் எழுதி 30 பக்க வாக்குமூலம் ஒன்றை தயார் செய்தனர். கௌதமன் எனும் பெயர் கொண்ட திருமலையைச் சேர்ந்த ஒருவன் எனது வாக்கு மூலத்தை தயார் செய்தான்.

அந்த சிறையில் ஒரு நாளிற்கு இரு முறை மட்டும் மலசலம் கழிப்பதற்கு அறையிலிருந்து வெளியே கொண்டு வரப்படுவோம மற்றய நேரங்களில் 15 வயதுக்குட்பட்ட பையன்களின் பொல்லடி எமக்கு தொடர்ந்து கிடைத்தது.

10ம் தேதியன்று காலை சகல கைதிகளும் அறைக்கு வெளியே கொண்டு வரப்படனர். கிட்டத்தட்ட 35 பேர் வரை இருக்கும் பத்துப்பேராக நாம் பிரிக்கப்பட்டோம். ஆறு உருக்கு உருளைகளைக் கொண்ட சங்கிலியால் 10 பேரையும் ஒன்றாகக் கால்களில் கட்டினர். மாலை 3 மணி அளவில் அனைவரும், நாம் முன்பிருந்த மாடி வீட்டிற்கு அழைத்து செல்லப்பட்டோம் அங்கு எமது கண்கள் கட்டப்பட்டன. ஒருவரின் சாரத்தை மற்றவர் பிடிக்குமாறு பணிக்கப்பட்ட பின் ஒரு பெரிய வானில் ஏற்றப்பட்டோம். எறத்தாள இரண்டு மணி நேரப பயணத்தின் பின்னர் வான் நின்றது நாம் இறங்குமாறு பணிக்கப்பட்டோம். "இந்த பன்றிகளெல்லாம் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கின்றனவா?" என ஒருவர் உரத்த குரலில் கேட்டதும் இன்னொருவன் ஆமோதித்ததும் எனக்கு கேட்டது. நாங்கள் இறங்கும் போது ஒவ்வொருவருக்கும் பச்சை கருக்கு மட்டை அடி வழங்கப்பட்டு வரவேற்பு கிடைத்தது. நாம் அறைக்குள் செல்வதற்கு சில படிகள் ஏறவேண்டியிருந்தது. கண்கள் கட்டப்பட்ட நிலையில் தடு மாறினோம். ஆளை ஆள் பிடித்துக்கொண்டு ஏறுமாறு பணிக்கப்பட்டோம் அப்போது கூட அவர்கள் பனை மட்டை அடியை நிறுத்தவில்லை. சில புலி உறுப்பினர்கள் எமது நிலையை பார்த்து எக்காளமிட்டு சிரிப்பதை நாம் கேட்டோம். நாங்கள் வீட்டுக்குள் சென்றவுடன் எமது கண்களைத் திறந்து விட்டனர். பின்னர் எம்மை வட்டமாக இருக்க உத்தரவிட்டு, 35 பேருக்குமாக இன்னோரு பெரிய சங்கிலி பொருத்தப்பட்டது. சில மணி நேரங்களின் பின் ஏறத்தாள 15 அடி நீளம் 10 அடி அகலம் கொண்ட அறைக்குள் நாங்கள் தள்ளப்படடோம் காலையில் இருந்து உண வருந்த எதுவும் தரப்படவில்லை.

11ம் திகதி யாரோ வந்து எம்மைப் பிணைத்திருந்த பொதுவான சங்கிலியை அகற்றினார்கள். அதன் பின்னர் சுமார் 20 புலி உறுப்பினர்கள் ஒவ்வொருவராக எமது அறைக்குள் வந்தனர். எம்மை எந்த அமைப்பை சார்ந்தவர் என விசாரித்தனர். எம்மை அடிப்பதற்கு அவர்கள் தவறவில்லை. காலை 8 மணி அளவில் நாம் காலைக் கடன்களை முடிப்பதற்கு இருவிருவராக அழைத்துச் செல்லப்பட்டோம் அப்போது தான் அந்த முகாமின் கோரமும் எமக்கு தெரியவந்தது.

## முகாமின் அமைப்பு

ஆள் அரவமற்ற வெளியில் அமைந்துள்ள தென்னந்தோப்பு அது. அதற்குள் ஒரு பெரிய வீடு. ஏறத்தாள 30 அடி அகலமும 10 அடி நீளமும் 8அடி உயரமும் கொண்ட கூடாரம் ஒன்று அவ்வீட்டுடன் சேர்ந்து அமைக்கப்பட்டிருந்தது. அந்த கூடாரம் 03 பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. அக் கூடாரத்தின் பக்கங்கள் நெருக்கமாகப் பின்னப்பட்ட கம்பி வலையால் அடைக்கப் பட்டிருந்தன. அதைச் சுற்றி சுருட்கம்பியாலான இன்னொரு வேலியும் அதனை சுற்றி மீண்டும் நெருக்கமாக பின்னப்பட்ட கம்பி வேலியும் அடைக்கபட்டிருந்தன. அந்த கூடாரத்தின் வாசலில் பெரிய இரும்புக் கேற். ஆமைப் பூட்டால் பூட்டப்பட்டபடி சாத்தியிருந்தது. அக் கூடாரக் கூரையின் சிலாகைகளில் நைலோன் கயிறுகளால் கைகள் பிணைக்கப்பட்டு 10 கைதிகள் தொங்கவிடப்பட்டிருந்தனர். அனைவரும் நிர்வாண கோலத்தில் அவர்களது கைகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தன. அனைவரும் நீண்ட தாடி தலைமயிருடன் காட்டு வேடர்கள் போல் காணப்பட்டனர். அது ஓர் மயிர் கூச்செறியும காட்சி. எனது காலைக்கடன்கள் முடிந்தவுடன் நான் மீண்டும் வீட்டுக்குள் அழைத்துவரப்பட்டேன்.

என்னுடன் வந்த 35 பேரும் நானும் மாலை 5 மணி போல் அந்த கூடாரத்திற்குள் அழைத்து செல்லப்பட்டோம். கிட்டத்தட்ட 10 அடி நீளம் 10 அடி அகலம் கொண்ட அதன் ஒரு பிரிவுக்குள் நாம் தள்ளப்பட்டு, கால்களுக்கு சங்கிலி பிணைக்கப்பட்டது. அதன் பின்பு திரும்புவதற்கு கூட இடம் இருக்கவில்லை.

அங்கு படுத்திருக்கும் போது இரவில் யாராவது கதைத்தால் மறுநாள் காலை விசாரணை நடக்கும். சில வேளையில் நாம் நித்திரையாய் இருக்கையில் சத்தமிட்டது யாரென தெரியவராது. யாரும் ஒப்புக் கொள்ளாவிடில் எல்லோருக்கும் அடி விழும். யாராவது ஒப்புக்கொண்டால் அவரை சுடு வெய்யிலில் வெறும் உடலுடன் மணிக் கணக்கில் உருள விடுவார்கள். யாருக்காவது இரவில் வயிற்றோட்டம் போயிருந்தால் கூட மறுநாட் காலை வரை அப்படியே படுக்க வேண்டியதுதான்.

அந்த முகாமில் அடைபட்ட இரணடாவது நாள் காலை 8 மணிஅளவில் 20 கதிரைகளையும் ஒரு மேசையையும் தூக்கி வருமாறு ஒரு கைதி பணிக்கப்பட்டார். 20 புலி உறுப்பினர்கள் அங்கு வந்து அமர்ந்தனர். அவர்கள் கைதிகளின் பெயர்களைக கூப்பிட்டு விசாரிக்கத் தொடங்கினர். சில கைதிகளை நிலத்தில் படுக்க வைத்து முகத்தில் தண்ணீர் தொடர்ந்து இறைத்தனர். சிலர் மிருகத்தனமாக தாக்கப்பட்டனர். தங்களை சித்திரவதை செய்ய வேண்டாமென அக் கைதிகள் அர்களிடம் கெஞ்சினர். தங்களுக்குத் தெரிந்த கடவுளையெல்லாம் அழைத்து தங்களின் துயரத்திற்கு விடிவு தரும்படி கதறினர். மற்றக்கைதிகள் கூரைச் சிலாகைகளில் கைகளில் நைலோன் கயிறு கட்டியபடி தொங்கிக் கொண்டிருந்தனர். அவர்களது கால் பெருவிரல் மட்டும் நிலத்தை மட்டுமட்டாக தொட்டுக் கொண்டிருந்தது. 11 மணி வரையும் அரக்கத்தனமான சித்திரவதைகள் தொடர்ந்தன. மீண்டும் அனைவரும் கூடாரத்துள் அடைக்கப்பட்டோம். உப்பில்லாக் கஞ்சியும். பீற்றூட் அவித்த தண்ணியும் உணவாகத் தரப்பட்டன. மாலை 5 மணிக்கு மீண்டும் எம்மை சங்கிலியால் பிணைத்தார்கள் மறுநாளும் இதே கதை தொடர்ந்தது. இந்த சித்திரவதைகளின் போது எம்மிடம் கேட்கப்பட்ட முக்கிய கேள்விகள் —

1. யாரை கற்பழித்தாய்?
2. கொள்ளைகள் எதிலாவது சம்பந்தப் பட்டிருக்கின்றாயா?
3. உனது ஆயுதங்களை எங்கே மறைத்து வைத்திருக்கின்றாய்?

இந்தக் குற்றச் சாட்டுக்களில் ஒன்றாவது நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

## தண்டனைகள்

பச்சை கருக்கு மட்டையால் முதுகில் அடிப்பாங்கள், அவர்களது சித்திரவதைகளை தொடர, உடலின் ஒரு பகுதி கூட மிஞ்சியிராமல் புண்ணாயிருக்கும், மருந்து போட்ட துணியால எம்மை மூடிவிடுவார்கள்.

7 அடி நீளமும் 4 அடி அகலமும் கொண்ட சீமெந்தாலான சரிவான கட்டிலொன்றில் சங்கிலியொன்று நிரந்தரமாக இணைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கைதியும் கால் மேல்பக்கமாகவும் தலை கீழ்பக்கமாக

தொடர்ச்சி 15ம் பக்கம்



**ஒவ்வொரு நாள் மாலையும் கஞ்சி தரப்படும் இதுதான எங்களது ஒரு வேளை உணவு. இவ்வாறுதான் நாங்கள் வாழ்ந்தோம். சனநாயக நாடொன்றில் இப்படி ஒரு வாழ்வை யாரும் கற்பனை கூட செய்திருக்க முடியாது. யாரும் உணவு கேட்டுக் கெஞ்சினால் அடிதான் கிடைக்கும். மூன்று மாதகால துயரவாழ்க்கையின் பின் டிசம்பர் மாதம் வேறிடத்திற்கு மாற்றப்பட்டோம். அங்கு எமது சங்கிலிகள் அகற்றப்பட்டன. கடின உடலுழைப்பு வழங்க நாம் புலிகளால் நிர்பந்திக்கப்பட்டோம். ஏறத்தாள 500 கைதிகள் தண்டவாளங்கள் சிலிப்பர்கட்டைகள் அகற்றுவதிலும் கல்லுடைப்பதிலும் இரவு பகலாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எமக்கு மாதம் ஒரு சோப் தரப்பட்டது. 150 பேருக்கு 1 கிலோ பருப்பு என்ற வீதத்தில் வைக்கப்பட்ட குழம்புடன் வெள்ளைச் சோறு தரப்பட்டது. தப்ப முயன்றவர்கள் பிடிக்கப்பட்டு நிரந்தரமாக முடமாக்கப்பட்டனர். இந்தக் கொடிய வாழ்க்கையை வாழ்வதைவிட சாவது மேல் அல்லது தப்ப முயல்வது என முடிவு செய்தேன் நான்கு மாதகால கடின வாழ்கையின் பின் ஒருவாறு தப்பி ஒடி வந்தேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ( 05.02.1993 - 09.02.1993 )

**01. இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை இந்திய அரசு நிறுத்தவேண்டும்.**

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து யுத்தம் நடந்து கொண்டு இருப்பதாலும், இதில் தொடர்ச்சியாக ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு கொண்டிருப்பதனாலும், வடக்கு கிழக்கு மாகாணத்திலேயே தொடர்ச்சியாக இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகிக் கொண்டிருப்பதனாலும், யுத்த சூழ்நிலை காரணமாக மீன்பிடி, விவசாயம், கைத்தொழில் போன்ற தொழில்கள் முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாலும், இந்தியாவிலிருந்து செல்லும் அகதிகள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு போக முடியாமல் அங்குள்ள அகதிகள் முகாங்களிலேயே தஞ்சம் அடையும் நிலை உள்ளது. அதே சமயம் இந்திய அகதி முகாங்களில் அதிகாரிகளின் நிர்ப்பந்தந்தங்களுக்கு அகதிகள் முகம் கொடுக்கவேண்டியுள்ளது. அகதி முகாம்களில் மருத்துவ வசதியோ, சிறுவர்களுக்கான கல்வி வசதியோ முற்று முழுதாக மறுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளும் மிகவும் சொற்பமானதாக உள்ளது. இந்திய அரசு அதிகாரிகளின் இப்படியான நிர்ப்பந்தகங்களுக்கும், நடவடிக்கைகளுக்கும், இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பிச்செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனவே. தவிர, தமது சொந்த விருப்பத்தின் பேரில் இவர்கள் இலங்கை திரும்பவில்லை.

மேற்கண்ட கருத்துக்களை கவனத்தில் எடுத்து இலங்கையில் அரசியல் தீர்வொன்று ஏற்பட்டு அகதிகள் கௌரவமாக திரும்பிச் செல்லக் கூடிய சுமுகமான சூழ்நிலை தோன்றும் வரை தமிழக அரசும், இந்திய மத்திய அரசும் அகதிகளை அனுப்புவதை உடன் நிறுத்தவேண்டும் என இக்காங்கிரஸ் வற்புறுத்திக் கேட்டுக்கொள்வதுடன் அகதிகளுக்கான மருத்துவம், கல்வி, போன்றவற்றுக்கு ஏற்ற வசதிகளை இவ்வரசுகள் உடன் செய்து கொடுக்க வேண்டும் எனவும், இக்காங்கிரஸ் வற்புறுத்துகிறது.

முன்னாள் பிரதமர்கள், இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோரும் முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி இராமச்சந்திரன் அவர்களும் ஈழத் தமிழ் அகதிகள் தொடர்பாகவும் இலங்கைப் பிரச்சினையில் தமிழ் மக்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டதை நாம் நன்றியுடன் நினைவு கூருவதுடன இன்றைய மத்திய மாநில அரசுகள், அவ்வழிமுறையை முன்மாதிரியாக கொண்டு செயற்படுத்தும் படியும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது.

**02.இலங்கை இனப்பிரச்சினையை தீர்ப்பதில் இந்தியாவின் பங்களிப்பு**

இலங்கைத் தமிழ் மக்கள் அனைவருமே புலிகள் அல்ல, புலிகளின் பாசிசத்தை அடக்க வேண்டும் என்பதில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கோ, ஏனைய இலங்கைத் தமிழ்க கட்சிகளுக்கோ எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் புலிகளை இனங்கண்டு அவர்களை அழிப்பதற்குப் பதிலாக ஒட்டுமொத்தமான இலங்கைத் தமிழ் மக்களையும் குற்றவாளிகள் என்ற கண்ணோட்டத்தில் இந்திய மத்திய அரசும் சரி தமிழக மாநில அரசும் சரி, இந்திய மக்களும் சரி, பார்ப்பது தவறானதும் ஆகும். தமிழ் அகதிகளைப் பயன்படுத்திக் கொண்டு புலிகள் செயற்படுவதாக இந்தியா தொடர்ந்து கருதுமாயின் அதற்குரிய மாற்று வழிகளை இந்தியா சரியான முறையில் கையாள வேண்டும் அதற்குப்பதிலாக தமிழ் அகதிகளை நிர்பந்தப்படுத்தி திருப்பி அனுப்புவது எதிர் விளைவுகளையே உருவாக்கும். அது மாத்திரமல்லாமல் புலிகள் இந்திய அரசுக்கு விரோதமாக நடக்கின்றார்கள். என்பதற்காக இந்திய அரசு சிறிலங்கா அரசாங்கத்தின் இனவிரோத நடவடிக்கைகள் தொடர இடமளிப்பதும் தமிழ் மக்களின் அழிவைக் கண்டும் காணாமல் இருப்பதும் வருந்தத்தக்க செயலாகும், இலங்கையின் இனப்பிரச்சினை ஓர் தீர்வுக்கு வராமல் நீண்டு கொண்டு போக இடமளிப்பதானது. இன்றையிலும் விட பாரிய விளைவுகளையே எதிர்காலத்தில் தோற்றுவிக்கும். இவ்விளைவுகள் இந்தியாவை மாத்திரமல்லாமல் இப்பிராந்தியத்தையே பாதிக்கும் நிலை உருவாகும். எனவே மேற்கண்ட விடயங்களை கவனத்தில் கொண்டு இந்திய அரசும், தமிழக அரசும் இலங்கை இனப்பிரச்சினைத் தீர ஆக்கபூர்வமான பங்களிப்பை செலுத்தவேண்டும் என இக்காங்கிரஸ் கேட்டுக்கொள்கிறது.

**03. இலங்கையில் யுத்த நிறுத்தமும் அரசியல் தீர்வும்.**

இன்று புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடந்து கொண்டிருக்கும் யுத்தம் அர்த்தமற்றதுடன், இவ் யுத்தமானது, இலங்கைத் தமிழ் இனப் பிரச்சினைக்கு எந்தவித தீர்வையும் ஏற்படுத்தாது, மாறாக ஆயிரக்கனக்கான அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கும், கோடிக்கணக்கான சொத்துக்களை அழிக்கப்படுவதற்கும், இலச்சக்கணக்கில் மக்கள் அகதிகளாவதற்குமே, வழிவகுத்து வருகின்றது.

எனவே இலங்கை தீவில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கவும் மக்களின் அனியாய அழிவைத் தடுத்து, மக்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை தோற்றுவிக்க வேண்டும் என்பதை இலங்கை அரசு கருத்தில் கொண்டு, இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கைகளினால் தீர்வு காணமுடியாது என்பதை புரிந்து செயற்படுவதுடன், தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய, இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த உரிமைகளை சிதைக்காத வகையிலும், அவற்றை மேலும் இறுக்கமாக்கி, செழுமைப்படுத்தும் அடிப்படையிலும், இலங்கை அரசாங்கமும் ஓர் அரசியல் தீர்வொன்றை முன்வைத்து தமிழ் மக்களின் சகல பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓர் திட்டவட்டமான தீர்வைக் காணும் படி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் இலங்கை அரசை வற்புறுத்துகின்றது.

**04. இந்திய இலங்கை ஒப்பந்தம்.**

இந்திய இலங்கை ஒப்பந்தம் இரு நாடுகளுக்கு இடையில் உருவாக்கப்பட்ட ஒப்பந்தம். இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்பதற்காக தமிழ் தலைவர்களுடன் சிங்கள அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் யாவும் முன்னர் ஒரு தலைப்பட்சமாக சிங்கள அரசாங்கங்களினால் கிளித்தெறியப்பட்டன. இதேநிலை இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு ஏற்படக் கூடும் என எமது ஐயத்தை நாம் தெரிவித்தபோது, இலங்கை அரசாங்கம் இவ்வொப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் என்பதற்கு, இந்திய அரசாங்கம் தமிழ் கட்சிகளுக்கு உத்தரவாதம் அளித்தது. இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் வட — கிழக்கு மாகாணசபை உருவாக்கப்பட்டு செயற்பட்ட போதும். புலிகள் சிறிலங்கா அரசு கூட்டுச் சதியால் மாகாண அரசு கலைக்கப்பட்டதுடன், சிறிலங்கா அரசு மாகாணசபைகளுக்கான அதிகாரங்களையும் கூட இதுவரை வழங்கவில்லை.

இவ்வொப்பந்தம் இன்று கிடப்பிலேயே போடப்பட்டது மாத்திரமல்லாமல், புலிகளை அழிக்கின்றோம் என்ற போர்வையில், தமிழ் மக்களுக்கு எதிரான ஓர் திட்டமிட்ட யுத்தத்தையும் இவ்வரசாங்கம் தொடர்ந்து நடத்தி வருகின்றது எனவே இந்திய இலங்கை ஒப்பந்தம் சரியான முறையில் அமுல்படுத்தப்படுவதை இந்திய அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும் என்பதனையும், இலங்கையின் இனப்பிரச்சினை தீர இந்தியா தனது பங்களிப்பை சரியான முறையில் செயற்படுத்த வேண்டும் எனவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ், இந்திய அரசைக் கோருகின்றது.

**05. வடக்கு கிழக்கில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்.**

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் ஆகும். இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் பாரம்பரியமாகவே தமிழ் பேசும் மக்கள பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த தமிழ்ப் பிரதேசங்களில் அவர்கள் இன்று சிறுபான்மையினர் ஆக்கப்பட்டு வருகின்றனர். அது மாத்திரமல்லாமல் அவர்களது தாயகமான வடக்கு — கிழக்கு மாகாணங்களை பிரிப்பதை நோக்கமாகக் கொண்டும் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே இப்படியான சிங்களக் குடியேற்றங்கள் யாவும் நிறுத்தப்படுவதுடன் வடக்கு — கிழக்கைப் பிரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் உடன் அகற்றப்படவும் வேண்டும் என இக்காங்கிரஸ் இலங்கை அரசை வலியுறுத்துகின்றது. அத்துடன் யுத்தத்தில் தமிழ் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டு இருக்கும் இச்சமயத்தில் அவர்களது வீடுகளில் சிங்கள மக்கள் அத்துமீறி குடியேறுவதும், கோயில்க் காணிகளில் சிங்கள மக்களை குடியேற்றுவதும் உடன் நிறுத்தப்பட வேண்டும் என இக்காங்கிரஸ் வலியுறுத்துகின்றது.

**06. புனிதப் பிதேச பிரகடனம்.**

திருகோணமலையில் கோணேஸ்வரர் ஆலயமும், மன்னரில் திருக்கேதீஸ்வரர் ஆலயமும், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பழமைவாய்ந்த சித்திரப்பிரசித்தி பெற்ற தலங்கள் ஆகும். அது மாத்திரமல்லாமல் இலங்கையிலும், இந்தியாவிலும் வசிக்கக்கூடிய இந்து மதத்தவரின் முக்கியமான புனித ஸ்தலங்களாகவும், வழிபாட்டுத் தலங்களாகவும் இவை இருந்து வருகின்றன. ஆனால் மேற்கண்ட இரு ஆலயங்களும் இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பது மாத்திரமல்லாமல் திருக்கேதீஸ்வரர் ஆலயம் இராணுவத்தினரால் மிகவும் மோசமாக சீரழிக்கப்பட்டுள்ளது. திருக்கோணேஸ்வரர் கோயில் பகுதியும் புனித ஸ்தல பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென இக்காங்கிரஸ் இலங்கை மத்திய அரசைக் கோருகின்றது.

**07. இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடு**

பல்வேறு நாடுகளில் நிலவிவருகின்ற இனப்பிரச்சினைகள், இன முரண்பாடுகள் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் இன்றைய காலகட்டத்தில் சர்வதேச ரீதியாகவுள்ள பல்வேறு வகைப்பட்ட நாடுகளின் கட்டமைப்புக்களில் விவாதத்துக்குரிய விடயங்களாக கொண்டுவரப்படுவதோடு. இவை தொடர்பான தீர்வுகளில் சர்வதேச நாடுகளுக்கு அக்கறையும் ஏற்பட்டுள்ளது. இவ்வகையில் இந்திய அரசானது சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த அரசு என்ற வகையிலும், இலங்கையின் இனப்பிரச்சினையை இதுவரை காலமும் தானே தீர்த்துக்கொள்வதற்காக ஏற்றுக்கொண்ட அடிப்படையிலும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகயையும், அவை தொடர்பான அரசியல் தீர்வு விவகாரங்களையும் ஐக்கிய நாடுகள் சபை உட்பட சகல சர்வதேச அரங்குகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்தியாவுக்கு உண்டென இக்காங்கிரஸ் கருதுவதோடு இதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென இந்திய அரசை இக்காங்கிரஸ் வலியுறுத்துகின்றது.

**08. காலஞ்சென்ற செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா கொலைவழக்கு.**

புலிகளால் காட்டுமிராண்டித்தனமாக படுகொலை செய்யப்பட்ட எமது மறைந்த தோழர் பத்மநாபாவும், அவருடன் கொலையுண்ட தோழர்களையும், கொலைசெய்த புலிப் பயங்கரவாதிகளை கண்டுபிடித்து, விசாரணைக்குட்படுத்த தமிழக அரசும், தமிழக முதல்வரும் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளுக்கும் இவர்களைக் கைது செய்வதற்காக இரவுபகலாக உழைத்த சகல போலீஸ் அதிகாரிகளுக்கும் இக்காங்கிரஸ் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றது. கொலையாளிகளைக் கைது செய்ய முன்னைய அரசு முயற்சி செய்திருந்தால் காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி அவர்களின் கொலையையும் கூட தவிர்த்திருக்க முடியும். சென்னையின் மத்தியில் ஓர் பாரிய கொலை நடந்தும் கூட அது தொடர்பான கொலையாளிகளை தப்பிச் செல்ல விட்டமையும், பின்னர் அவர்கள் மீண்டும் வந்து இரண்டாவது பெரும் கொலைக்கு திட்டம் வகுக்க, சுதந்திரமாகத் திரிய அனுமதி அளித்ததுமே பாரதத்தின் இளம் தலைவர் ராஜீவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட காரணங்களாகுமென நம்புகிறது.

**09. ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கு எதிரான தமிழீழ மககள் விடுதலைக் கழகத்தின் நயவஞ்சக செயல்கள் நிறுத்தப்படவேண்டும்.**

1988ம் ஆண்டு எமது மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் ஐயா அவர்களும் மேலும் பல தோழர்களும் தமிழீழ மக்கள் விடுலைக் கழகத்தினரால் நயவஞ்சகத்தன்மான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் 1990 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாண சபை பிரதிச் சபாநாயகர் தோழர் கணேஸ் உட்பட மேலும் சில தோழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழீழ மக்கள் விடுலைக் கழகத்தினரின் இவ் நயவஞ்சகத்தனமான செயல்களை இக்காங்கிரஸ் வன்மையாகக் கண்டிப்பதுடன் எதிர்வரும் காலங்களில் இப்படியான செயல்களை தொடரக்கூடாதென தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரைக் கேட்டுக் கொள்கிறது.

**10. தியாகிகள் தினப் பிரகடனம்.**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகர்களில் ஒருவரும் 1990 ஜீன் 19 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட எமது ஸ்தாபனத்தின் செயலாளர் நாயகமுமான தோழர் க.பத்மநாபா அவர்கட்கும் அவருடன் மறைந்த ஏனைய சகல தோழர்களுக்கும், ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது கட்சியில் இணைந்து பணியாற்றி மறைந்த தோழர்கட்கும் இக்காங்கிரஸ் வீர வணக்கத்தைத் தெரிவிப்பதுடன் ஜுன் மாதம் 19ம் திகதியை "தியாகிகள் தினமாக" பிரகடனப்படுத்துகின்றது.

**11. மகா புருஷர் தோழர் பத்மநாபா**

எமது காலஞ்சென்ற செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா அவர்கள், ஈழத் தமிழர் போராட்ட வரலாற்றில் மிக முக்

தொடர்ச்சி 19ம் பக்கம்

# வடபகுதியில் புலிகளின்.........

14ம் பக்கத் தொடர்ச்சி

வும் படுக்கவைக்கப்படுவான் கால்கள் சங்கிலியால் பிணைக்கப்படும். யேசுகிறிஸ்த்து சிலுவையில் இருப்பது போன்ற உருவமே எனது நினைவிற்கு வரும். கைதியின் நெஞ்சு பெல்ற் ஒன்றினால கட்டப்படும். தலையைத் தவிர உடலின் வெறெந்த பகுதியையும் அசைக்க முடியாது. பின்னர் கைதியின் முகத்தைத் தடிப்பான துவாய் ஒன்றினால் மூடுவார்கள். புலி அங்கத்தவன் ஒருவன் துவாயின் இரு பக்கங்களையும் தனது கால்களால் நன்கு மிதித்தபடி நின்று கொண்டு முகத்தில் தண்ணீரை இறைப்பான். மூச்சுத் திணறி கைதி விட்டுககத்துவான். உண்மையைச் சொல்லுமாறும் தாங்கள் அவன் மேல் சுமத்திய குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொள்ளுமாறும் வற்புறுத்துவார்கள். யாராவது பிடிவாதமாயிருப்பின் 10 வாளி தண்ணீர்வரை ஊற்றப்படும். கைதியை அக்கட்டிலில் படுக்க வைத்தபடி இரும்புச் சட்டம் உட்செலுத்தப்பட்ட பெரிய மரக்குற்றி ஒன்றால் தலையிலிருந்து கால்வரை உருட்டுவார்கள். (மரக்குற்றியின் நிறை 300 றாத்தல் இருக்கும்) இன்னொரு குறுகிய அறை காற்றோட்டமற்ற இருட்டறை இந்த அறைக்குள் நிர்வாணமாக கைதி தள்ளப்படுவான். பின்னர் மிளகாய் புகையை அந்த அறைக்குள் செலுத்துவார்கள். பதில் கிடைக்காதவரை இது நிகழும். கைதி இருமத்தொடங்கி சில சமயம் இரத்தம் கக்குவான். இதை விட வேறு வகையான சித்திரவதைகள் தாராளாம்.

இந்த வதை முகாமில் பல நாட்கள் நாங்கள் சித்திரவதைப்பட்டோம் 01.09.1990 காலை 11 மணி இருக்கும் விமானங்கள் குண்டு வீசுவதை நாங்கள் கேட்டோம். விமானங்களோ, கெலிகொப்டர்களோ வரும் சத்தம் கேட்டவுடன் சிறைக்கதவைப் பூட்டுவதே புலிகளின் முதல் வேலையாயிருக்கும் அன்றும் அவ்வாறே செய்தனர். சிறிது நேரம் கழித்து எமது முகாமுக்கருகே ஒரு குண்டு வீழ்ந்தது. நாங்கள் உதவி கேட்டு கதறி கதவை திறக்குமாறு கூவினோம். ஆனால் எம்மை காவல் புரிந்த புலிகள் அனைவரும் 300 யாருக்கு அப்பால சென்று விட்டனர். சில நிமிடங்களின் பின்னர் இன்னொரு குண்டு வீட்டின் மேல் விழுந்து சுவர் நொருங்கியது. மூன்றாவது குண்டு எமது கூடாரத்தின் மேல் விழுந்தது நான் வெளியே தூக்கி வீசப்பட்டேன் அச்சமயத்தில் எல்லாமாக 152 கைதிகள் அங்கு இருந்தனர் இந்தக் குண்டு வீச்சின் போது 70 பேர் மட்டுமே தப்பினோம். அதில் 17 பேர் மோசமான காயங்களுக்கு உள்ளாகி இருந்தனர். நாங்கள் விமானத்தாக்குதல்களுக்கு பயந்து ஓட முற்பட்டோம். நாங்கள் தப்பியோட முயற்சிப்பதாகக் கூறி புலிகள் எங்களை மீண்டும் கைது செது 100 யார்களுக்கு அப்பாலுள்ள பனை மரங்களில் கட்டினர். சிறிது நேரத்தின் பின்னர் வெடிச்சத்தங்கள் கேட்டன. காயம்பட்டு ஓட முடியாதவர்களுக்கு சிறைக்கருகே விழுந்து கிடந்தவர்களும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என பின்னர் அறிந்து கொண்டோம். இரவு 11 மணி அளவில் டிராக்டர் ஒன்று அங்கு வந்து நின்றது எங்களில் 16 பேர் இரத்தப் பெருக்கால் நினைவிழந்திருந்தனர். அவர்களை அந்த டிராக்டர் ஏற்றிச் சென்றது. நள்ளிரவு 1 மணியிருக்கும் இரண்டு டிராக்டர்கள் வந்தன. மீதி 54 பேரும் அந்த இரண்டு டிராக்டர்களிலும் கண்கள் கட்டப்பட்ட பின் ஏற்றப்பட்டோம் சுமார் 24 மைல்களுக்கு அப்பால் நாம் இறக்கப்பட்டோம்.

மறுநாள் காலை இன்னும் 70 கைதிகளைக் கண்டோம் அதில 45 பேர் சிங்களப் பெலிஸார். காலை 10 மணியிருக்கும் எங்களை நல்ல இடமொன்றிற்கு மாற்றப் போவதாக ஒருவன் வந்து சொன்னான். எங்கள் கண்கள் கட்டப்பட்டு ஒரு மூடிய லொறிக்குள் ஏற்றப்பட்டோம். நாங்கள் ஒரு மணித்தியாலம் பயணம் செய்திருப்போம் மூடிய லொறியும் ஆள் நெருக்கமும் சேர்ந்து வியர்வையால் முழுக்க நனைந்து விட்டோம் லொறி ஒரு வீட்டின் முன் நின்றது வீட்டிற்குள் நாங்கள் கொண்டு செல்லப்பட்டோம் வீட்டின் வாசலில் இரும்புக்கதவொன்றிருந்தது. சதுர அமைப்பைக் கொண்ட அவ் வீட்டில் இரு பெரிய அறைகள். 14 சிறிய அறைகள். பெரிய அறைகள் ஏறத்தாள 10 அடி நீள அகலம் உடையவை. சிறிய அறைகளில் 7அடி நீளம் 2 அகலம் உடையவை. சிறிய அறைகளில் 2 அடி நீள அகலப் பகுதி கழிவறைப் பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அவை இருட்டறைகள். காலை 10 மணியிலிருந்து மாலை 3 மணிவரை மெல்லிய ஒளிக்கீறல்கள் ஊடுருவும் அவ்வளவுதான். அங்கிருந்த கைதிகள் மாதக்கணக்காக பூட்டிய அறைக்குள் இருந்தனர். அவர்களது தாடியும் தலைமுடியும் நீண்டு தொங்கியது. தலை முழுக்கப் பேன் பிடித்து தலைப்புண்ணால் வருந்தினார்கள். அவர்களுக்கு எவ்வித வைத்தியமும் செயயப்படவில்லை. இதனால் அந்த அறைகள் சகிக்கமுடியாதபடி துர் நாற்றம் வீசின.

ஒவ்வொரு நாள் மாலையும் கஞ்சி தரப்படும் இதுதான் எங்களது ஒரு வேளை உணவு. இவ்வாறுதான் நாங்கள் வாழ்ந்தோம். சனநாயக நாடொன்றில் இப்படி ஒரு வாழ்வை யாரும் கற்பனை கூட செய்திருக்க முடியாது. யாரும் உணவு கேட்டுக் கெஞ்சினால் அடிதான் கிடைக்கும். மூன்று மாதகால துயரவாழ்க்கையின் பின் டிசம்பர் மாதம் வேறிடத்திற்கு மாற்றப்பட்டோம் அங்கு எமது சங்கிலிகள் அகற்றப்பட்டன. கடின உடலுழைப்பு வழங்க நாம் புலிகளால் நிர்பந்திக்கப்பட்டோம். ஏறத்தாள 500 கைதிகள் தண்டவாளங்கள் சிலிப்பர் கட்டைகள் அகற்றுவதிலும் கல்லுடைப்பதிலும் இரவு பகலாக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எமக்கு மாதம் ஒரு சோப் தரப்பட்டது. 150 பேருக்கு 1 கிலோ பருப்பு என்ற வீதத்தில் வைக்கப்பட்ட குழம்புடன் வெள்ளைச் சோறு தரப்பட்டது. தப்ப முயன்றவர்கள் பிடிக்கப்பட்டு நிரந்தரமாக முடமாக்கப்பட்டனர். இந்தக் கொடிய வாழ்க்கையை வாழ்வதைவிட சாவது மேல் அல்லது தப்ப முயல்வது என முடிவு செய்தேன். நான்கு மாதகால கடின வாழ்கையின் பின் ஒருவாறு தப்பி ஓடி வந்தேன்.

(ஜனநாயகத்திற்கும் மனித உரிமைகளுக்குமான தமிழர்கள் என்ற பெயரில் வெளியான அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நேசித்து மரணித்தவர்கள்

## தோழர் சிவா



பெரிய கல்லாறு எனும் கிராமத்தில் செல்லத்தம்பி மனோன்மணி தம்பதியினருக்கு மகனாகப பிறந்தா் சிவலிங்கம் என்ற தோழா் சிவா. அக்குடும்பத்தில் அவரே மூத்த பிள்ளை, செல்லப்பிள்ளையும் அவரே! தனது பாடசாலைக் கல்வியை சொந்த ஊரிலே பயின்றாா். கல்வியில் சிறந்து விளங்கிய சிவலிங்கம் நான்காம் வகுப்பிலிருந்து ஆறாம வகுப்பிற்கு வகுப்பேற்றப்பட்டவா். அவா் கல்வி பயின்ற பெரிய கல்லாறு மகாவித்தியாலயத்தில் மாணவா் தலைவராக இருந்துள்ளாா். பாடசாலையில் நடக்கும் சிரமதானப் பணி மற்றும் பொது நிகழ்ச்சிகளில் முன்நிற்பாா்.

மாணவா்களின் பல்கலைக்கழக நுழைவில் இலங்கை அரசு கொண்டு வந்த தரப்படுத்தலுக்கு எதிராக "சிவலிங்கம்" "ஈழ மாணவா் பொதுமன்றம்" என்ற அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு பல மாணவா் போராட்டங்களை நடாத்தியுள்ளாா்.

தனது இளமைக் காலங்களில் ஊரில் நடைபெறும் சமூகப்பிரச்சினை, சாதிப்பிரச்சினைகளுக்குத் தீா்வு காண்பதில் அக்கறை கொண்டிருந்தா் தனது கிராம மக்களால் "லிங்கன்" என அன்புடன் அழைககப்பட்ட சிவலிங்கம் அவ்வூா் மக்களின் சேவகனாகத் திகழ்ந்தாா். அவரது நடவடிக்கைகள், செயறபாடுகள், அனைத்திலும் சுயநலமின்மை காணப்பட்டது.

1978 காா்த்திகை 23ல் கிழக்குப் பகுதியை சூறாவளி தாக்கியபோது ஏற்பட்ட அனத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பல சிரமதானப் பணிகளைச் செய்துள்ளாா். இக்கட்டான காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து புனா்வாழ்வுப் பொருட்களோடு வந்த ஈழ மாணவா் பொது மன்றத்தினருடன் சோ்ந்து அப்பொருட்களைப் பாதிக்கப்பட்டவா்களுக்கு வழங்குவதற்கு பெரிதும் உதவினாா். பாதிக்கப்பட்ட தனது குடும்பத்தாருக்கு அதில் எந்தப் பொருட்களையும் அவா் எடுக்கவில்லை என பின்னா் சில தோழா்கள் அவரை நினைவு கூருவா்.

எக்காரியத்தையும் திறம்படச் செய்வதில் அவருக்கு நிகா் அவரே! தீவிரமானவராகவும், மனிதநேயம் மிக்கவராகவும் செயற்பட்ட சிவலிங்கம் அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடுவதற்கு ஸ்தாபன ரீதியாக இணைந்து கொண்டு தோழா் "சிவா" என்ற புனைப்பெயருடன் இயங்கினாா் அனைவராலும் அன்பாக "சிவாத் தோழா்" என அழைக்கப்பட்டாா் மக்களுடைய நலனிலும், தோழா்களுடைய நலனிலும் மிகவும் அக்கறையாக இருந்து வந்தாா்.

இலங்கை அரசு முதன் முதலாக ஜனாதிபதித் தோ்தலை நடாத்திய போது இதற்காகத் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டு தனது பகுதிக்கு வந்த "தமிழ் காங்கிரஸ்" தலைவா் திரு. குமாா் பொன்னம்பலம் தோழா் சிவாவின் ஊா் மக்களை அவ்வூா் கோயில் ஒன்றின் ஆலமர நிழலிலே கூட்டினாா். அக் கூட்டத்தில் ஒருவராக நின்ற சிவா அங்கு முன்வைத்த கருத்துக்கள் அவ்வூா் மக்களின் வாக்குகளை பெற முடியாத நிலையை அவா்களுக்கு ஏற்படுத்தியது.

கிழக்குப் பிராந்திய முன்னணித் தோழா்கள் பலா் சத்துருக்கொண்டான் என்னும் இடத்தில் அரசியல் வகுப்பொன்றை ஏற்பாடு செய்து நடாத்திக் கொண்டிருந்தபோது சிறிலங்கா அரச படைகளால் கைது செய்யப்பட்டனா். அவா்களுடன் தோழா் சிவா அவா்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டாா்.

1983 ஜூலையில் நடந்த இனக்கலவரத்தின்போது வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டாா். சிறைச்சாலைக்குள் இருந்துகொண்டே மக்கள் விடுதலைப் படையின் திட்டங்களை நிறைவேற்றி சிறை உடைப்பிற்கு பெரிதும் உதவினாா். இலங்கை அரசின் இனவெறிக் கொள்கைக்கு எதிராகப் போராடுவதறகாக பலநூறு இளைஞா்களைத் திரட்டி அவா்களுக்குத் தலைமை ஏற்று இராணுவப் பயிற்சிகள் கொடுத்தாா். தோழா் ஆயுதப் பயிற்சி பெற்றபோது பயிற்சியாளா்களின் பாராட்டைப்பெற்றவா். குறிபாா்த்துச் சுடுதலிலும் இராணுவத் தந்திரங்களிலும் ஆற்றல் உள்ளவராக விளங்கினாா்.

மட்டுஅம்பாறை மாவட்ட மக்கள் விடுதலைப் படையின் தளபதியாக பொறுப்பேற்ற தோழா் சிவா பல இராணுவத் தாக்குதல்களை திறம்பட செயதுள்ளாா். ஒரு சமூக மாற்றத்தினூடாகவே அனைத்துத் தடைகளையும் தகா்த்தெறிய முடியும் என்ற அடிப்படைக் கொள்கையில் விடாப்பிடியாக இருந்து செயற்பட்டவா்.

தமிழ் - முஸ்லீம் சமூகத்தினரிடையே உள்ள பிணக்குகளைத் தீா்த்து வைத்து கிழக்குப் பிராந்திய (மட்டுஅம்பாறை) முஸ்லீம் மக்களின் நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தவா். வீடில்லாதோா், கலவரத்தினால், வீடிழந்தோா் பலருக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளாா். மக்களின் இன்ப துன்பங்களுடனும், அவா்களின் வாழ்க்கை முறையோடும் இரண்டறக் கலந்து மக்களுக்காகவே வாழ்ந்த தோழா் சிவா அவா்கள் 29.03.1985ல் விசேட அதிரடிப்படையின் சுற்றிவளைப்புக்கிடையே அகப்பட்டு சரணடையாது வீர மரணமடைந்தாா்.

## தோழர் சின்னவன்



தோழா் சின்னவன் 4 பிள்ளைகளின் தந்தை. துடிப்பானவா், துணிச்சல் மிககவா் சா்வதேச பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றவா். மட்டக்களப்பு சிறை உடைப்பு, கரைநகா் கடற்படை முகாம் தாக்குதல் என்பவற்றில் பிரதான பங்கு வகித்தவா். பயிற்சி முகாம்களில் ஆயிரக்கணக்கான தோழா்களை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவம் பயிற்றுவித்த இராணுவ பயிற்றுவிப்பாளா்களில் ஒருவராவாா்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தயாரிப்பான மோட்டா், அதற்கான செல் என்பவற்றை தயாரிப்பதில் ஈ.பி.ஆா.எல்எவ் இன் தொழிற்சாலைகளில் தனது கடும் உழைப்பை வழங்கியவா். அவற்றைப் பிரயோகிப்பதிலும் வல்லவராய் இருந்தாா். வெடிமருந்தை கையாள்வதில் தோ்ச்சி பெற்றவா். ஆயுதங்களை லாவகமாக கையாள்பவா். காரைநகா் கடற்படை முகாம தாக்குதலின் போது பலியானா். தோழா்கள் வேலு - மட்டக்களப்பு கணேஷ்-திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தை சோ்ந்த ஷோபா, விஜயன், அரவிந்தன் ஆகியோரும் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனா்.

## தோழர் ராஜன்




யாழ்ப்பாணம் கோப்பாயை சோ்ந்தவா் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ் பிராந்தியக் குழுவின் முன்னாள் உறுப்பினரும், ஸ்தாபனத்தின் வெகுஜன அமைப்பான ஈழ மக்கள் விடுதலை முன்னணியின் (ஈ.பி. எல்.எவ்) ஸ்தாபகா்களுள் ஒருவருமாவாா். தோழா் ராஜன் ஈழவாலிப முன்னணி, ஈழப்பெண்கள் விடுதலை முன்னணியின் ஆரம்பகால அமைப்பாளராகவும், ஈழமாணவா் பொதுமன்றத்தின் நிா்வாகக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியவா்.

சா்வதேச விடுதலை இயக்கம் ஒன்றின் போா்முனைப் பாசறையில் பயிற்சி பெற்றவரும், மாக்சிச லெனினிசத்தின் மீது வழுவாத பற்றும் கொண்டவா்.கட்சியின் வளா்ச்சிக்காக கடுமையான உழைப்பும், ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் தீரமுடன செயலாற்றியவா். மக்கள் விடுதலைப் படையின் பயிற்சி முகாம் ஒன்றில் இடம்பெற்ற வெடி விபத்தில் உயிா் நீத்தாா்.



## தோழர் ரவி

மானிப்பாய் நூல்நிலையத்தில் பணியாற்றிய தோழா் ரவி ஈழமாணவா் பொதுமன்றத்தின் அரசியல் நடவடிக்கைகளுடனும் ஈ.பி.ஆா்.எல்.எவ் இன் ஆரம்பகால வேலைகளிலும் பிரதான பங்கு வகித்தவா். தோழா்களுக்கான அரசியல் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதிலும், வரும் தோழா்களின் தேவைகளை ஊா் மக்களின் ஒத்துழைப்புடன் கவனிப்பதிலும் வல்லவராக திகழ்ந்தாா். பல தோழா்களை இராணுவத்தினரிடமிருந்து பாதுகாத்த தோழா் ரவி தன்னை புலி பாசிசத்திடமிருந்து பாதுகாக்க முடியவில்லை.

## தோழர் குமார்



யாழ்ப்பாணம் குருநகரில் பிறந்த தோழா் குமாா் மக்கள் விடுதலைப்படையின் யாழ் பிராந்திய கமிட்டி உறுப்பினா்களினல் ஒருவராவாா். ஈழமாணவா் பொதுமன்றம், ஈழவாலிபமுன்னணி ஆகியவற்றின் அரசியல் வேலைகளுக்கூடாக புடம்போடப்பட்டு மக்கள் விடுதலைப்படைக்கு தெரிவுசெய்யப்பட்டவா்.

1985 ஆம் ஆண்டு அவரது பிறந்த இடமான குருநகா் வீதி ஒன்றில் காத்திருந்த இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டாா். தனது பிரதேசத்தை சோ்ந்த பின்தங்கிய அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் ஈடேற்றம் குறித்து ஆழ்ந்த அக்கறையும், ஈடுபாடும் கொண்டிருந்தவா்.

ஆரம்பகாலத்தில் ஈழமாணவா் பொதுமன்றம், ஈழவாலிப முன்னணி, மக்கள் விடுதலைப் படை என்வற்றுக் கூடாக கட்சிப்பணிகளை முன்னெடுப்பதில் காத்திரமான பங்கு வகித்தவா். 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் முதலாவது காங்கிரசில் கலந்து கொண்டவராவாா்.

## தோழர் கதிர்



பூநகரியை சோ்ந்தவா் கிளிநொச்சி மாவட்ட வேலைகளுக்கு பொறுப்பாக இருந்தவா். மக்கள் விடுதலைப் படையில் பயிற்சி பெற்று கிளிநொச்சி மாவட்ட தளபதியாக செயற்பட்டாா். காரைநகா் கடற்படை முகாம் மீதான தாக்குதல், கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் என்பவற்றில் முக்கிய பங்கு வகித்தவா்.

மக்கள் விடுதலைப்படைக்கு இளைஞா்களையும், யுவதிகளையும் அணி திரட்டுவதிலும் அவா்களுக்கு பயிற்சியளிப்பதிலும் அயராது பாடுபட்டாா். 13 மாா்கழி 1986 இல் ஈ.பி.ஆா்.எல்எவ மீது புலிகள் தாக்குதல் தொடுத்த வேளை புலிகளால் கைது செய்யப்பட்டாா்.

1987 முற்பகுதியல் இராணுவத்தினா் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடாத்தி முன்னேற முற்படுகையில் ஆனையிறவு இராணுவ முகாமை அண்டிய பகுதிகளிலிருந்து வன்னி பிரதேச புலிகளின் இராணுவ பிரிவினா் பின்வாங்கி தென்மராட்சிக்கு வந்தனா். அச்சமயம் தோழா் கதிரும் தென்மராட்சிக்கு அழைத்து வரப்பட்டு தென மராட்சியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆா்.எல்.எவ் தோழா்களுடன் தடுத்துவைக்கப்பட்டாா்.

புலிகளின் இந்த முகாம் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கானது. புலிகள் அனைவரும் தப்பியோடி விட்டனா் அருகிலுள்ள வீடொன்றில் பாதுகாப்பு தேடி மறைந்து கொண்ட தோழா் கதிரும் இதர தோழா்களும் விமான தாக்குதல் நிறுத்தப்பட்டதும் உயிரை காவு கொள்ள மாட்டாா்கள் என்ற அற்ப நம்பிக்கையுடன் மீண்டும் புலிகளின் முகாமுக்கு திரும்பி வந்தனா். இதன் பின்னா் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்ட தோழா் கதிா் பங்குனி 30 இல் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தமிழ அரசியல் கைதிகளில் ஒருவராய் ஆனாா்.

## தோழர் முகுந்தன்



வட்டுக்கோட்டை மூளாயை சொந்த இடமாக கொண்ட தோழா் முகுந்தன் பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளராவாா். ஆரம்ப கலந்தொடக்கம் ஈ.பி.ஆா்.எல்எவ் உடன் இணைந்து செயற்பட்டவா். சா்வதேச பயிற்சிப்பாசறையில் பயிற்சி பெற்றவா். இராணுவ ரீதியான அறிவு நிரம்பியவராயினும் கொலை வெறி கொண்டவா் அல்ல. அன்பும், இரக்கமும் நிரம்பியவா். கடின உழைப்பாளி, சுய கட்டுப்பாடு மிக்கவா் அதனால் சகதோழா்களும் ஒழுங்கு கட்டுப்பாட்டை வழுவாது பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துபவா். தானே முன்னுதாரணமாக திகழ்ந்தவா்.

எமது பயிற்சி முகாங்களில் அரசியல் இராணுவ பயிற்றுவிப்பாளராக கடுமையாக உழைத்தாா். 1988 ஆம் ஆண்டு பலாலியில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்து சென்னையில் சிகிச்சை பெற்றாா். குணமடைந்ததும் கட்சிப்பணிகளை தொடா்ந்த அவா் மாகாண அரசின் கீழ் அரசியல் இணைப்பாளராக யாழ் அரசாங்க செயலகத்தில் பணிபுரிந்தாா். புலிகளின் அழுத்தங்கள மத்தியில் மாகாண அரசின் பணிப்புரைகளுக்கு அமைய கடமையாற்ற முடியாது திண்டாடி போது கண்டிப்போடும் அதேவேளை கண்ணியமாகவும் செயலாற்றி அரச அதிகாரிகளின் நன்மதிப்பையும் பெற்றிருந்தாா்.

இந்திய அமைதிகாப்பு படை பின்வாங்க தொடங்கியவேளை தோன்றிய நெருக்கடிகளுக்கு தீா்வுகாண சக தோழா்கள் தடுத்தபோதும் படகு மூலம தமிழ்நாடு சென்றபோது புலிகளால் கைது செய்யபபட்டாா். இன்றுவரை உயிருடன் திரும்பவில்லை.

## தோழர் அப்துல்லா



யாழ்ப்பாணம் கோப்பாயைச் சோ்ந்த இவா் 1983க்கு பின்னரான காலப்பகுதியில் பெருமளவான இளைஞா்கள் இயங்கங்களில் இணைந்துகொண்ட போது இணைநது மக்கள் விடுதலைப் படையில் ஆயுதப் பயிற்சி பெற்றவா். காரைநகா் கடற்படை தளம் மீதான தாக்குதலில் பங்கெடுத்துக்கொண்டதுடன் யாழ்குடாநாட்டிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து இராணுவம் வெளியேறிய வேளைகளில் அவ்விடங்களுக்குச் சென்று எதிா் தாக்குதல் நடாத்துவதில் முன்னின்று செயற்பட்டவா். துணிச்சல் மிக்கவா்.

எமது கட்சியை இல்லாதொழிக்க புலிகள் நடாத்திய தாக்குதலையும் அச்சமயம் பல நூற்றுக்கணக்கான தோழா்கள் புலிகளால் சிறைப்படுத்தபட்டு சித்திரவதை செய்யப்பட்டதுடன், பலா் படுகொலை செய்யப்பட்டதையும் பொறுக்க முடியாதவராக புலிகள் மீது தீவிர வெறுப்பை கொண்டிருந்தாா். இதனால் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பின்னா் மீண்டும் கட்சி நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொண்ட தோழா் அப்துல்லா புலிகளுடன் நேரடி மோதல்களில் முன்னின்றாா். அத்தகைய ஒரு மோதலின் போதே யாழ்ப்பாணம் குருநகரில் தேவாலயம் ஒன்றிற்குள் மறைந்திருந்த புலி ஒருவனால் சுடப்பட்டுப் பலியானாா்.

தோழா் அப்துல்லாவின் முத்த சகோதரரான தோழா் நகுலன் (இ.சா்வலோகநாதன்) 1984 காலப்பகுதியில் கட்சியுடன் இணைந்துகொண்டவா். அவரும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலிலிருந்த வேளை 2005 ஆம் வருடம் வவுனியாவில் வைத்து புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டாா்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சிறப்பு மிக்க முதலாவது காங்கிரஸ்

**செயலாளர் நாயகம்**
**தோழர் க.பத்மநாபாவின்**
**தலைமை உரை**

## அன்பார்ந்த தோழர்களே!

எமது போராட்டத்திற்குச் சர்வதேச ரீதியாகக் கிடைத்துள்ள ஆதரவை நாம் சரியான நேரத்தில், சரியான முறையில் எமது எதிரிகளைத் தோற்கடிப்பதற்காகப் பிரயோகிக்க வேண்டும். எம் மக்களோடு வரலாற்றாலும் இனத்தாலும் மொழியாலும் சமூக கலாச்சார உறவாலும் ஒன்றுபட்ட தமிழக மக்கள் எமது போராட்டத்திற்குத் தோளோடு தோள் தந்து கொண்டிருக்கின்றார்கள்.

சர்வதேச இயக்கங்கள் பல எமது போராட்டத்தை ஆதரித்து நிற்பதோடு மட்டுமல்லாது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையும் தமக்கு நட்புச் சக்தியாக ஏற்றுக்கொண்டிப்பதையும் இங்கு நான் குறிப்பிட்டாக வேண்டும் எம்மை ஆதரிக்கும் உலக நாடுகள் வெறும் பேச்சளவிலதானே ஆதரிக்கின்றன அதனால் எங்களுக்கு என்ன பலன் என்று நீங்கள் ஆதங்கம் கொண்டிருக்கலாம். ஆனால் சர்வதேச மக்களின் உளப்பூர்வமான ஆதரவும் எமது எதிரிக்கு எதிராக நிற்கும் மாபெரும் சக்தி என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

இதே போல எமது போராட்டத்தில் உலக நாடுகள் ஆதரவு தரவேண்டும் என்று எதிர்பார்கின்ற நாம் மறுபுறம் உலகமெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பல்வேறு நாடுகளினதும், தேசிய இனங்களினதும் விடுதலைப் போராட்டங்களுக்குப் பொருள் ரீதியாக முடியாவிட்டாலும் உளரீதியாக எப்போதும் கைகோர்த்து நிற்கவேண்டும் என்பது எமது பிரதான கடமையாகும்.

1981 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ஆம் திகதி ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோற்றம் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால் அன்று தான் நாம் திடீரென்று இந்தப் போராட்டக்களத்தில் குதித்தோம் என்று யாரும் நினைத்துவிடக்கூடாது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரலாற்றிற்கும் ஒரு முன் தொடர்ச்சி உண்டு. தமிழ் மாணவர் பேரவை, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சியாளர்கள், என்ற வரலாற்று ஓட்டத்தின் ஒரு கட்டம்தான் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி.

(இங்கே குறிப்பிடப்படுவது தற்போதுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தையன்று.)

எமது முன்னணியை நாம் தோற்றுவித்து அதனை நாம் பிரகடனம் செய்தபோது எம்மைக் கிண்டல் செய்தவர்கள் பலபேர், எம்மை ஒதுக்கி விட்டவர்கள் ஏராளம்பேர், சில சின்னப் பையன்கள் சேர்ந்திருக்கின்றார்கள், இவர்கள் என்ன வரலாற்றைச் சாதித்து விடுவார்கள் என்று ஏளனம் செய்தவர்கள் நூற்றுக்கணக்கானோர். எமக்கு உதவி செய்வதாக கூறி மறுத்து விட்டவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களை எல்லாம் இன்று திரும்பிப் பார்கின்றேன். ஆனால் ஆத்திரம் கொண்டல்ல; ஏளனக் கண்ணூடாக அல்ல; கிண்டல் செய்வதற்காகவும் அல்ல, அவர்கள் வரலாற்றைப் புரிந்துகொண்டது அவ்வளவுதான் என்று.

பணம் சிறிதும் இல்லாமல் பக்க உதவிப் பலம் எதுவும் இல்லாமல் தோளோடு தோள் சேர்ந்து நின்ற தோழர்களோடு நானும் சேர்ந்து எமது முன்னணியைத் தோற்றுவித்தோம். பல நாட்கள் பட்டினிகிடந்திருக்கின்றோம்; பல காத தூரங்களை நடந்தே கடந்திருக்கின்றோம். நாம் இன்னும் கற்கவேண்டும்தான். அதனை நான் மறுக்கவில்லை பணமே இல்லாதவர்கள்தான் அதனை நான் மறுக்கவில்லை, பக்க பலம் எதுவும் இல்லாதவர்கள் என்பதும் உண்மைதான், ஆனால் எமது நெஞ்சில் உரமுண்டு; நேர்மையான நடையும் தோழர்களோடு தோள் சேர்க்கும் துணையும் உண்டு, வரலாறு பற்றியதோர் தெளிவான பார்வை எம்மிடம் உண்டு. மார்க்சிச, லெனினிச சித்தாந்தத்தின் மீது சந்தேகமற்ற நம்பிக்கை உடையவர்கள் நாங்கள். இவைதான் எமது ஏணியின் படிக்கட்டுகளாக இருந்து வந்தன.

துன்பங்களையும் துயரங்களையும் ஏக்கங்களையும் ஏமாற்றங்களையும் அஞ்சாது மனம் துஞ்சாது ஏற்று வீறுநடை போட்டு வந்த எமது தோழர்களின் பங்களிப்பு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வரலாற்று வளர்ச்சியில மகத்தானதாகும். குட்டி முதலாளித்துவச் சிந்தனைகள் பலமாக ஊன்றி இருக்கும் எமது சமுதாயத்தில் ஆயுதம் தாங்கி நாடகம் ஆடும் சாகச வீரர்களை ரசித்து நிற்கும் மக்கள் கூட்டத்தின் மத்தியில் சிறியவர்களாகவும் எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் ஆயுதம், பணம், பக்க உதவிகள் சிறிதும் அற்றவர்களாகவும், நடைபோட ஆரம்பித்த நாம் இன்று மக்கள் மத்தியில் மாபெரும் சக்தி என்பதைச் சர்வதேச அரங்கில் நிலைநாட்டியிருக்கிறோம்.

எம்மோடு ஐக்கிய முன்னணியை உருவாக்கவேண்டும் என்ற ஆர்வத்தை ஏனைய இயக்கத்தவர்களுக்கு ஏற்படுத்தி இருக்கின்றோம். ஈழ மக்களுக்கு ஏற்ற தலைமை ஒன்று உருவாகி வருகிறது என்ற உண்மையை நிரூபித்துக் காட்டி இருக்கின்றோம். எமது மூல உபாயங்களும், எமது தந்திரோபாயங்களும் எவ்வளவு தூரம் அரசியல் தீர்க்கதரிசனமானவை என்பதனை எமது போராட்ட வரலாற்றின் நடைபாதையில் நிஜமாக்கிக் காட்டியிருக்கிறோம். இவையாவற்றுக்கும் எமக்கு மூலபலமாக விளங்கியது யார்? என்ன? எவை? அது எமது மக்கள்தான். மக்களிடம் இருந்துதான் கற்றுக்கொண்டோம். மக்கள் போதிப்பதற்கு ஆசிரியராக இருந்த போதெல்லாம் நாம் மாணவர்களாகவும் இருந்துகொண்டோம். மக்களிலேயே நாம் தங்கியிருக்க வேண்டும் என்பதை நமக்கு நாமே கட்டாயமாக கட்டளை ஆக்கிக் கொண்டோம்.

அனைத்து உழைக்கும் மக்களினதும் நலன்களுக்கு வழிகாட்டும் மார்ச்சிச லெனினிசக் சிததாந்தத்தை அதன் அடிப்படைத் தத்துவமான வரலாற்று இயங்கியல் பொருள் முதல்வாதத்தை எமக்குப் பார்வையைத்தரும் தந்துவமாகவும் எமக்கு வழிகாட்டும் சித்தாந்தமாகவும் ஏற்றுக் கொண்டோம். நாம் மார்க்சிச லெனினிசக் சொற்றொடர்களை மக்களை வஞ்சிப்பதற்காகவோ, மக்களைத் திசை திருப்புதவதற்காகவோ எந்த வேளையிலும் பிரயோகித்தது இல்லை. மாக்சிச லெனினிசச் சித்தாந்தத்தின் உண்மையான விசுவாசிகளாக இருந்திருக்கிறோம். இப்போதும் இருக்கின்றோம் இனி எப்போதும் அப்படியே இருப்போம் என்று உறுதியாக நம்புகிறோம்.

ஆனால் மார்க்சிச, லெனினிச விசுவாசிகள் என்பதற்காக அதன் படைப்பாளிகளையோ அச் சித்தாந்தத்தையோ நாம் குருட்டுத்தனமாகவோ, வரட்டுத்தனமாகவோ, எற்றுக்கொண்டதுமில்லை ஏற்றுக் கொள்ளப்போவதுமில்லை. எமது மக்களினதும் எமது மண்ணினதும் கடந்த கால வரலாற்றை முறையாகவும் சரியாகவும் பார்ப்பதற்கு விளங்கிக்கொள்ளுவதற்கு அதுவே எமக்கு உதவியாக இருந்திருக்கின்றது. மார்க்சிசக் லெனினிச சித்தாந்தத்தை நாம் கற்றுக்கொள்வதற்குக் காரணமாக இருந்தவர்களே எமது மக்கள்தான்.

1970 இன் ஆரம்ப காலங்களில் நாம் வெறும் தமிழின உணர்ச்சி உடையவர்களாகத்தான் இருந்தோம். எம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகள் இன ஒடுக்குமுறை வடிவில் இருந்தமையினால் அவ்வாறு அக் காலத்தில் வெறும் இனவுணர்ச்சியாளர்களாக இருந்ததில் தவறேதும் இல்லை காலப் போக்கில் மக்கள் மத்தியில் நாம் அரசியல் வேலைகளில் தீவிரமாக ஈடுபாடு கொண்டபோதுதான் மார்க்சிச லெனினிசத்தை அறிந்துகொண்டோம் தெரிந்து அதைக் கற்றுக்கொண்டோம். அதன் அவசியத்தையும் உணர்ந்து கொண்டோம். அதைச் சரியாக புரிந்தும் கொண்டோம்.

தொடக்கக் காலங்களில் எமது சிந்தனைகள் நடைமுறைகள் மார்க்சிச லெனினிச ரீதியில் பலதவறுகளைக் கொண்டதாக இருந்தன என்பது உண்மைதான் ஆனால் விமர்சன, சுய விமர்சனம் என்பவற்றின் ஊடாக எம்மை நாமே திருத்திக் கொண்டோம், அதன் மூலமே நாம் எமது முன்னணியை இன்று இந்த அளவிற்கு வளர்த்தெடுக்க முடிந்துள்ளது. ஈழ விடுதலைப் போராட்ட ஓட்டத்தில் எத்தனையோ தனி நபர்கள் தனியாகவும் பொதுவாகவும் இயக்கமாகவும் ஈடுபட்டார்கள் பங்களித்தார்கள். சிலர் இப் போராட்டத்தையே விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். ஒதுங்கிக்கொண்ட சிலர் மீண்டும் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டார். ஒரு போராட்ட வரலாற்றில் தனி நபர்கள் வருவார்கள், போவார்கள், ஆனால் அந்தக் கால வரலாறு நின்று விடுவதில்லை. சில குழுக்கள் சில இயக்கங்கள் தோன்றும், மறையும், ஆனால் வரலாற்று ஓட்டம் தடைப்பட்டு விடுவதில்லை.

வரலாறு எப்போதும் முன்னோக்கியே சென்றுகொண்டிருக்கும். வரலாற்றுச் சக்கரங்கள் உலக இயக்கத்தை முன்னோக்கியே நகர்த்திச் செல்லும், எவ்வாறாயினும் முன்னோக்கியே நகர்த்திச் செல்லும் எவ்வாறாயினும் நமது போராட்ட வரலாற்றில் பங்களிப்புச் செய்த எந்தவொருதனி நபரையும் எந்தவொரு குழுவையும், எந்தவோரு இயக்கத்தையும் மதிப்பது எமது பிரதான கடமையாகும். அது யாராகவும் இருக்கலாம். எந்தக்குழுவாகவும் இருக்கலாம், எந்த இயக்கமாகவும் இருக்கலாம். தவறு விடுவதும் தவறு செய்வதும் துன்பங்கள் துயரங்களைத் தாங்கிக்கொள்ள முடியாமல் ஒதுங்கி ஓடிவிடுவதும் பொதுவாக மனிதனுக்கு இயல்பே. துன்பங்களையும் துயரங்களையும் சிக்கல்களையும் திறமையாக எதிர்நோக்கி தீரமாகப் போராடி, விடாது தொடர்பவர்கள் வரலாற்றில் - இந்த மனித சமுதாயத்தில் சில நபர்களே. அவர்களே வரலாற்றின் கதாநாயகர்களாகிறார்கள்.

## பேரன்புமிக்க தோழர்களே!

நாம் இந்த வேளையில் எமது முன்னணியின கடந்த கால வரலாற்றை மதிப்பிட்டும் எம்மைச் சூழ்ந்துள்ள புற நிலைமைகளைச் சரியாகக் கணிப்பிட்டும் எதிர்காலததிற்கான எமது மக்களின விடுதலைக்கான கொள்கைகளை வகுப்பதற்கும் திட்டங்களைத் தீட்டுவதற்கும் இங்கு கூடியிருக்கிறோம். இந்த வேளையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாகக் கடமையாற்றும் நான் எதிர்காலக் கொள்கைகளை வகுக்கும்போதும் திட்டங்களைத் தீட்டும் போதும் கவனித்துக்கொள்ள வேண்டிய சில அடிப்படையான விடயங்களை உங்கள் முன்பு சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக எமது முனணணியினுள் அமைப்பு ரீதியான கொள்கைகள் பற்றிய, திட்டங்கள் பற்றிய, தனி நபர்களின் நடத்தைகள் பற்றிய சந்தேகங்களும் வெவ்வேறுபட்ட அனுபவங்களும் இதனால் கருத்து முரண்பாடுகளும் உங்கள மத்தியில் நிலவும். அவற்றை நாம் விமர்சனம், சுயவிமர்சனம், கருத்துப் பரிமாற்றம், விட்டுக் கொடுத்தல், பெரும்பான்மையினரின் முடிவை எல்லோருமாக ஏற்றல் என்பதன் அடிப்படையில் ஒருமுகப்படுத்த வேண்டியதும், எதிர் காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டியதும் எல்லோரின் முன்னாலும் உள்ள கடமையாகும்.

**முதலாவதாக எமது முன்னணியினுள் அமைப்பு ரீதியான கொள்கைகள் பற்றிய, திட்டங்கள் பற்றிய, தனிநபர்களின் நடத்தைகள் பற்றிய சந்தேகங்களும் வெவ்வேறுபட்ட அனுபவங்களும் இதனால் கருத்து முரண்பாடுகளும் உங்கள் மத்தியில் நிலவும். அவற்றை நாம் விமர்சனம், சுயவிமர்சனம், கருத்துப் பரிமாற்றம், விட்டுக் கொடுத்தல், பெரும்பான்மை யினரின் முடிவை எல்லோருமாக ஏற்றல் என்பதன் அடிப்படையில் ஒருமுகப்படுத்த வேண்டியதும், எதிர் காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டியதும் எல்லோரின் முன்னாலும் உள்ள கடமையாகும்.**

முன்னணியின் ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு தோழரும் பல்வேறு கடமைகளைப் பகிர்ந்து ஏற்றுக் கொண்டு செயற்பட்டு வந்திருக்கின்றோம் நமது முன்னணி அடிப்படையிலிருந்தே ஒரு தலைமறைவு இயக்கமாகச் செயற்பட்டு வந்திருக்கிறது. இதனால் ஒரு தோழரின் வேலை-நடைமுறைக்கும், இன்னொரு தோழரின் வேலை-நடைமுறைக்கும் இடையில் அறியப்படாத நிலைமைகளும், இடைவெளிகளும், வேறுபடுத்தப்பட்ட ஒருங்கிணைப்புகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது எமது இயக்கத்திற்கு அவசியமானதாகவும் இருந்து வந்திருக்கின்றது.

மேற்கண்டவாறான நடைமுறைகளினால் ஒரு குறிப்பிட்ட வேலையில் ஈடுபட்ட தோழரை இனனுமொரு குறிப்பிட்ட வேலையில் ஈடுபட்ட தோழரோ, ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வேலை செய்த தோழர்களை இன்னுமொரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வேலை செய்த தோழர்களோ முழுமையாக அறிந்துகொள்ளுவதும் புரிந்து கொள்ளுவதும் முடியாததாக இருந்திருக்கலாம். இவ்வாறான நடைமுறை எமது இயக்கத்திற்கு அவசியமானதாக இருக்கின்ற அதேவேளையில் பாதகமான ஒரு அம்சமுமாக அது இருந்து வந்ததை நான் அவதானிக்கிறேன்.

அது என்னவெனில் ஒரு குறிப்பிட்ட வேலையில் அல்லது ஒரு குறிப்பிட்ட பிரதேச வேலைகளில் வேலை செய்த தோழர் அல்லது தோழர்கள் தாம் மட்டுமே கடுமையாக உழைப்பதாகவும் மற்ற வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அவ்வாறு உழைக்காதது போலவும் கருதும் நிலை பொதுவாக ஏற்பட்டுள்ளது. ஆனால் சிற்சில தவறுகள் இருப்பினுமகூட முன்னணியின் தொடக்க நாளிலிருந்து எல்லாத் தோழர்களும் தத்தம் கடமையை நிறைவேற்ற உழைத்து வந்திருக்கின்றனர் என்பதை எல்லோரையும் மையப படுத்தியிருக்கும் நான் இங்கு கூறவேண்டியவனாக இருக்கின்றேன்.



காங்கிரஸில் செயலாளர் நாயகம்

எமது முன்னணியின் வேலைப் பகுப்பு முறைகளை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொண்டால் ஒவ்வொரு தோழரும் மற்ற தோழர்கள் மீது நம்பிக்கை உடையவர்களாக இந்தால் இவ்வாறான சந்தேகங்கள் எழுவதையோ காலவோட்டத்தில் வளர்ச்சி அடைவதையோ நாம் தவிர்த்துக்கொள்ளலாம். அதையும் மீறித் தவறுகள் இருப்பின் சுட்டிக்காட்டுவோம்; விமர்சிப்போம்; திருத்துவோம்; திருந்திக்கொள்வோம்.

இதைவிட மற்றுமொரு முக்கிய பிரச்சினை என்னவெனில் ஸ்தாபனத்தில் உள்ள ஒவ்வொருவரும் அனைத்து விடயத்தையும் எந்தவொரு சிறு வேறு பாடும் இன்றி ஒரேமாதிரியாக அணுக வேண்டும் என்று நினைப்பது. அது எமது இலட்சியமாக இருக்கலாம்; ஆனால் நடைமுறையில் அடிப்படைத் தன்மையைத் தவிர மேலதிகமாக சொற்கள், வாக்கியங்கள், வெளிப்படுத்தப்படும் ஓசைகள், நடைகள் என்பன ஒரே மாதியாக இருக்கவேண்டும் என்று நாம் நினைப்பது சாத்தியமாகாத விடயமாகும்.

மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் இடையிலும சிந்தனை, நடைமுறை என்பவற்றில் வேறுபாடு இருப்பது இயல்புதான். அவற்றினுள் முரண்படாதவற்றை இனங்கண்டு ஒருங்கிணைத்து கொள்வதுதான் நமக்கு சாத்தியமானதாகவும். தோழர்களுக்கு இடையில் தவறான புரிதல் ஏற்படுகின்ற பொழுது அவை தீர்க்கமுடியாத முரண்பாடுகளா என்பதை நாம் இனங்கண்டு கொள்வது அவசியமாகும். வேறுபாடுகள் நமக்குள் இருப்பது இயல்பானது முரண்பாடுகள் இல்லையாயின் வேறுபாடுகளை நாம் சுலபமாக முரண்படுத்தாமல் களைந்துகொள்ள முற்படவேண்டும்.

வர்க்கக் கண்ணோட்டம் இன்றித் தனிப்பட்ட நபர் ரீதியான அணுகுமுறையை நாம் கொள்வோமாயின் நாம் குட்டி முதலாளித்துவ சிந்தனை உடையவர்களாக இருக்கமுடியுமே தவிர மார்க்சிஸ்ட் லெனினிஸ்டுகளாக இருக்கமுடியாது. நாம் உண்மையான மார்க்சிஸ்ட், லெனினிஸ்டுகளானால் அதனை நமது சிந்தனை, நடைமுறைகள் ஒவ்வொன்றிலும் நிரூபித்து ஆகவேண்டும். இதற்காக தனி நபர் பிரச்சினைகள் ஓர் இயக்கத்துக்குள் எழ முடியாததென்றோ, எழக்கூடாதென்றோ நான் வரட்டுத்தனமாக குறிப்பிடவில்லை. ஆனால் தனிநபர் விடயங்களை எவ்வாறு அணுகவேண்டும் என்பதனையே இங்கு பிரதானமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மேலும் நமது முன்னணியின் அமைப்புக் கொள்கைகளில், அரசியல் திட்டங்களில், வேலை நடைமுறைகளில் பல குறைபாடுகள் இருக்கலாம்; இருக்கின்றன. அவை ஒவ்வொன்றினையும் நாம் எல்லோரும் இணைந்து கலந்துரையாடி தீமானங்களை எடுப்பது அவசியமாகும்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேர்மனி : கட்சியும் தோழர்களும

தமிழ் பேசும் மக்கள் மீதான இன ஒடுக்கு முறைகளும், பாரபட்சங்களும் அதன் விளைவாய் உருவாகிய ஆயுதப்போராட்டமும் பல ஆயிரக்கணக்கான விலைமதிக்கமுடியாத மனித உயிர்களைக் காவுகொண்டும், பல கோடி சொத்துக்களை இழந்தும், பல இலட்சக்கணக்கில் மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தும் வாழும் அவல வாழ்க்கை தொடர்கதையாகவே தொடர்கின்றது.

மூன்று தசாப்த காலத்துக்கு மேலான தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது கால்நூற்றாண்டுகாலத்துக்கு மேலாக தன்னை அர்ப்பணித்து அரசியல் உரிமைக்காக போராடி வருகின்றது. ஓர் புரட்சிகர ஆயுத விடுதலைப்போராட்டத்தினூடாக ஈழவிடுதலையை வென்றெடுக்கும் கனவுகளுடன் போராடப்புறப்பட்ட ஆயிரக்கணக்கான தோழர்களை பேரினவாத, பாசிச ஒடுக்கு முறைகளினால் இழந்து விட்டோம்.

எமது கட்சிக்கு பலவேறு கால கட்டங்களில் ஏற்பட்ட சோதனைகள், வேதனைகளையெல்லாம் எதிர்கொண்டு ஓர் ஜனநாயக பண்பு கொண்ட கட்சியாக சுயவிமர்சனம், விமர்சனம் என்னும் ஆயுதத்துடன் தனது தவறு




களை கண்டறிந்து, திருத்தி பயணித்துக்கொண்டிருக்கின்றது. அது வெவ்வேறு காலகட்டங்களில் அசாத்தியமான துணிச்சலுடனும், குறைவான வளங்களுடனும், தோழர்களின் உறுதியான அர்ப்பணிப்பாலும் பல்வேறு வகையான அரசியல், இராணுவ வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றது.

எமது மறைந்த செயலாளர் நாயகம தோழர் பத்மநாபாவின் தலைமைத்துவப் பண்பும் அவரின் வழிநடத்தலும் கட்சியின் மிகப்பெரிய பலமாக அமைந்தது. அமைந்திருந்த எமது கட்சியின 25 வருட போராட்ட வரலாற்றில் பல நூறு ஆற்றல் மிக்க தலை வர்களை, தோழர்களை இழந்துவிட்டோம். கட்சியில் பல்வேறு காலகட்டங்களில் அர்ப்பணிப்புடன் உழைத்த பலர் பல்வேறு காரணங்களால் எம்முடன் தற்போது இல்லையாயினும் அவர்களுடைய கடந்த கால உழைப்புக்களை நினைவுகூருவதும் ஒரு கட்சிக்குரிய ஜனநாயக கடமையாகும். ஆந்த வகையில் ஜேர்மனியிலும் 80 களின் ஆரம்பத்தில் இருந்து கட்சியின் பல்வேறு வகையான அரசியல் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் சர்வதேச முற்போக்கு புரட்சிகர சக்திகள் மத்தியிலும் மற்றும் ஜேர்மனியின் இடதுசாரிகள், அரசியல் ஆர்வலர்கள் மத்தியிலும் அரசியல் வேலைகள் முன்னெடுக்கபபட்டது.

ஜேர்மனியில் 80களின் ஆரம்பத்தில் பேளினை மையப்படுத்தியே எமது அரசியல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அக்கால கட்டத்தில் கட்சிகள் சிரேஸ்ட தலைவர்கள் சிலர் ஜேர்மனியிலும் ஏனைய முக்கிய நகரங்களிலும் அரசியல் கூட்டங்களை நடாத்தியபோதும் பெரும்பாலான அரசியல் வேலைகள் பேர்ளின் நகரத்திலிருந்தே முன்னெடுக்கப்பட்டது. அக்கால கட்டத்தில் ஜெர்மனியில் தலைமைப் பொறுப்பை தோழர் வில்சன் ஏற்று செயற்பட்டு வந்தார்.

சர்வதேச புரட்சிகர முற்போக்கு சக்திகளுடனான அரசியல் வேலைகளை ஜேர்மனியில் மேற்கொண்டதில் வில்சனுக்கு முக்கய பங்கு இருந்தது குறிப்பாக மத்திய தென் அமெரிக்க, ஆபிரிக்க மற்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கங்களினுடைய உறவுகள், அரசியல் வேலைகளைக் குறிப்பிடலாம். இவருடைய தலைமையின் கீழ் ஜோர்ச், கண்ணன், ஜெயசிங்கம், ஜேசு போன்ற தோழர்கள் செயற்பட்டுக் கொண்டிருந்த காலமிது.

இக்காலகட்டத்தில் தான் அதிகளவான ஈழத் தமிழர்கள் ஐரோப்பாவுக்கு இடம்பெயர ஆரம்பித்தனர். ஐரோப்பாவுக்குரிய வாசற்கதவாக பேர்ளினே இருந்தது. இதன் காரணமாக அகதிகளாக இடம்பெயர்ந்து வந்துகொண்டிருந்த எமது மக்களுக்கு தேவையான பல உதவிகளை தோழர்களின் மேற்கொண்டிருந்தனர். அகதிகளாக வரும் மக்களுக்கு தேவையான உதவிகளை செய்வது வேறு நாடுகளுக்கோ அல்லது மேற்கு ஜேர்மனியின் ஏனைய பகுதிகளுக்கோ செல்ல விரும்புபவர்களை தங்கவைத்து அவர்களுக்குத் தேவையான பயண வசதிகளை செயதுகொடுத்து அனுபிவைப்பது போன்ற வேலைகளையும் தொடர்ச்சியாக மேற கொண்டுவந்தனர். இதில் தோழர் ஜெயசிங்கத்தின் பங்கு முக்கியமானது. இக்காலகட்டத்தில் அகதிகளாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் சிறார்களின் தமிழ் மொழிக் கல்வியை நோக்கமாகக் கொண்டு ஈழம் பெற்றோர் சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கி தமிழ்க் கல்வியை போதித்தனர். இதுவே அகதிகளால ஐரோப்பாவுக்கு புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் உருவாக்கப்பட்ட முதல் தமிழ் பாடசாலையாகும். அகதிகளாக வந்தடைந்த ஈழத்தமிழர்கள் மத்தியில் மொழிப்பிரச்சினைகள் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பவர்களுக்கான சட்டத்தரணிகளின் உதவிகள், நீதி மன்றத்தில் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பிப்பதற்கான தகவல்கள், ஆலோசனைகளை போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அகதிகள் சபை, ஈழத்தமிழர் நலன்புரி சங்கம், போன்ற அமைப்புக்களை ஸ்தாபித்து செயற்படுத்தினார்கள் இவ்வகையான வேலைத்திட்டங்களில் அக்காலத்தில பேர்ளினில் இயங்கிக் கொண்டிருந்த ஈரோஸ் தோழர்கள் சிலரும் இணைந்து வேலை செய்தார்கள் ஈழம் சொலிடாரிற்றி கமிட்டி என்ற அமைப்பை உருவாக்கி அதனூடாக ஐக்கியத்துடன் வேலைத்திட்டங்களை மேற்கொண்டனர். இவ்வகையான வேலைகள் எல்லாம் தோழர்கள் வில்சன், ஜோர்ச், கண்ணன்(சுகிர்தன்) போன்ற தோழர்களினால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வேளையில் நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளோம்.




தோழர் ஜோர்ச் திருகோணமலையை பிறப்பிடமாகக்கொண்டவர் 80 களின் ஆரம்பதிலிருந்து கட்சியின் அரசியல் வேலைத்திட்டங்களில் தன்னை இணைத்துக்கொண்டு தன்னை ஒரு புரட்சிகரப் போராளியாகத் தயார்ப்படுத்தியது மட்டுமல்ல படிப்படியாக ஒரு சர்வதேசியவாதியாகவும் உருவாகினார். அவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம், டொச், இலத்தீன், போன்ற மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர்.

84ம் ஆண்டு ஆரம்பத்தில் பேர்ளினிலிருந்து நிக்கரகுவாவிற்கு சென்று புரட்சிகர சன்டினிஸ்டாக்களுடன் இணைந்து ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் அரசியல், இராணுவ புனர்நிர்மாணப் பணிகளில் செயற்பட்டவர். அந்நாட்டின் தலைவரான டானியல் ஒட்டேக்காவுடன் நெருங்கிப் பழகியவர். அப்போராட்டக்காலத்தில்

தொடர்ச்சி 19ம் பக்கம்

# முதலாவது காங்கிரஸ்.........

17ம் பக்கத் தொடர்ச்சி

நமது குறைந்த அறிவு, குறைந்த கால அனுபவம் பல தவறுகளை நம்மில் ஏற்படுத்தி இருக்கும். அவற்றைக் கருத்துப் பரிமாறல்கள் மூலம் தீர்த்துக்கொள்வோம். ஒருவர் சொல்வதை மற்றயவர்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் ஏதுமில்லை. மற்றவர்கள் அதாவது ஒவ்வொருவரும் விவாதிக்க உள்ளதான விடயங்களிலும் தமது கருத்துக்களையும், விளக்கங்களையும் கூறி இயன்ற அளவிற்கு சரியான தீமானங்கள் எடுக்கப்படுவதற்கு வழி வகுக்கப்பட வேண்டும் என்று எனது அன்பார்ந்த தோழர்கள் ஒவ்வொருவரையும் நான் வேண்டுகின்றேன்.

நமது முன்னணி நிதிப்பற்றாக்குறையின் காரணமாக பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. இதனால் நமது ஆயுதக் கொள்வனவுகள் தடைப்பட்டுப்போய் நிற்கின்றன இதனால் நமது முன்னணி மேலும் வலுவுடன் வளர்ச்சி அடைவதில் சில சிக்கல்களை எதிர்நோக்கவேண்டி நேரிடுகின்றது.

அது மட்டுமல்லாது முதலாளித்துவ வர்க்கத் தலைமையான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ் மக்களின் அரசியல் தலைமையை இழந்து நிற்கும் இந்தவேளையில் ஈழத்தில் தொழிலாளி, விவசாயிகளின் முற்போக்கு புத்திஜீவிகளின் தலைமைஸ்தாபனமாக விளங்கும் ஈழ மக்கள் புரட்சிகர வடுதலை முன்னணி ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி ஈழ மக்களை வழிநடத்தவேண்டிய வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வேண்டியது எம் அனைவரினது பொறுப்புமாகும்.

எமது போராட்டத்தில் பிரபலம் பெற்று விளங்குகின்ற குட்டி முதலாளித்துவ இயக்கங்கள்-குழுக்கள் எக்காரணமாயினும் ஈழப் போராட்டதிற்கு தலைமை தாங்கவோ ஈழ மக்களை வழிநடத்தவோ முடியாதனவாகும். இது அந்த வர்க்கங்களின குணாதிசயமாகும். எம் முன்னால் உள்ள இந்த வரலாற்றுக் கடமையை நாம் நிறைவேற்ற வேண்டுமாயின் எம் முன்னணியை அமைப்பு ரீதியிலும், உறுப்பினர் ரீதியிலும், நிதி ரீதியிலும், ஆயுத ரீதியிலும் பலப்படுத்தியாகவேண்டும். கொள்கைகள் வகுத்தல் திட்டங்கள் தீட்டுதலில் ஈடுபடும் ஒவ்வொரு தோழரும் இதை மனதில் கொள்ள வேண்டும் என நான் வேண்டுகிறேன்.

மேலும் எமது அமைப்பில் அதன் நடைமுறையில் முகாமைத்துவம் நிாவாகம், ஒருங்கிணைப்பு என்பனவற்றில் பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதனை நாம் கூறியாகவேண்டும் இதற்குரிய வகையில் எமது முன்னணியில் ஒருங்கிணைப்பு, ஒழுங்கமைப்பு, கடமைகள், அதிகாரங்கள், நிர்வாகம், என்பனபற்றி நாம் திட்டமிட்டாக வேண்டும் அதனை இந்தக் காங்கிரஸ் நிறைவேற்றும் என்று நான் கருதுகின்றேன். முன்னணியில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீபதற்கும் முன்னணியின் வளர்ச்சியில் உள்ள தடைகளை உடைத்தெளிவதற்கும் இது மிகவும் அவசியமானதாகவும்.

1983 ஆம் ஆண்டு யூலைக் கலவரத் தாக்கத்தின் விளைவாக மக்கள் விடுதலைப் படையை உடனடியாக விரிவடையச் செய்ய நேரிட்டது. இத் திடீர் மாற்றத்தின் விளைவாக பல தவிர்க்க முடியாத குறைபாடுகள் எழுந்தன என்பதும் உண்மைதான். இக்குறைபாடுகளை எவ்வாறு நாம் களைந்தெறியவேண்டும் மக்கள் விடுதலைப் படையை மேலும் எவ்வாறு நாம் பலப்படுத்தவேண்டும் என்பதற்கான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் காங்கிரஸ் திட்டமிடும் என நான் கருதுகிறேன்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வளர்ச்சியில் சில தடைகள் ஏற்பட்டமைக்கு 1981 ஏப்பிரலிலும், 1983 ஏப்பிரலிலும் நமது முன்னணித் தோழர்களில் முக்கியமான தோழர்கள் சிலர் தற்செயலாகச் சிறீலங்கா அரசபடையினரால் கைது செய்யப்பட நேர்ந்ததுவும் ஒரு காரணமாகும். இதனால் குறிப்பிட்ட காலங்களுக்கு சில வேலை நடைமுறைகளைப் பெருமளவில் தடைசெய்ய நேர்ந்தது. என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜூலைக் கலவரம் ஈழத் தமிழர்களை பெரும் கொடூரமான நிலைமைக்கு உள்ளாக்கியது. எனினும் சர்வதேச ரீதியாக ஈழம் என்பது ஒரு கனவு என்ற நிலையிலிருந்து நனவு என்ற நிலையை நோக்கிய மாற்றத்திற்கும் உள்ளாகியது. எமக்கு உறுதுணையாக நிற்கும் தமிழக மக்களையும், இந்திய மக்களையும் நாம் என்றென்றைக்கும் மறக்க முடியாது. நாம் அவர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டியது நமது வரலாற்றுக கடமையாகவும் உள்ளது.

## என்னருமைத் தோழர்களே!

ஈழத்தில் சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக இந்த காலகட்டத்தில் போராடிக் கொண்டிருக்கின்ற நாம் யார் யாரோடு ஐக்கிய முன்னணியைக் கட்டிக்கொள்வது என்பதனையும் அதனை எவ்வாறு சரியாக நடைமுறைப்படுத்துவது என்பதனையும் வரையறை செய்து தீர்மானித்து திட்டமிட்டுச் செயற்படுவது நம் முன்னால் உள்ள கடமையாக உள்ளது.

ஈழ விடுதலை போராட்டத்தில் இன்று பிரதானமாக ஐந்து இயக்கங்கள் உள்ளன. இவற்றினுள் எமது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆகிய மூன்றிற்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஐக்கிய முன்னணியை எவ்வாறு பலப்படுத்துவது என்பதையும் மேலும் ஏனைய இரு பிரதான இயக்கங்கள் உள்ளிட்ட விரிவான ஐக்கிய முன்னணியை எவ்வாறு கட்டி எழுப்புவது என்பதனையும் நாம் தீர்க்கமாக ஆலோசனை செய்யவேண்டி உள்ளது.

இயக்கங்களுக்கு இடையிலான தனிநபர் பிரச்சினை எங்களுக்கு முக்கியமானது அல்ல. ஐக்கிய முன்னணி என்பது இந்தக் கால கடத்தின் மதிப்பீட்டிலிருந்தும் ஈழ மக்கள் சமூகத்தின் வர்க்கங்களை பற்றிய பகுப்பாய்விலிருந்தும் நாம் தீர்மானிக்க வேண்டிய விடயமாகும். நபர்களின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுவது முதலாளி வர்க்கத்தின் சிந்தனை கூட அல்ல ; அது குட்டி முதலாளித்துவச் சிந்தனை என ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளேன். ஆகவே இக்கால கட்டத்தில் ஏற்படவேண்டிய வர்கங்களின் ஐக்கியம் பற்றியும் அவற்றின் நடைமுறைகள் பறறியும் நாம் தீர்க்கமாக ஆலோசித்து ஆகவேண்டும்.

## பெருமைக்குரிய தோழர்களே!

எங்கள் தோழ்களில் பல நூற்றுக்கணக்கான கடமைகள் சுமைகளாக ஏறியுள்ளன. அவற்றைத தாங்கிச் சென்று நிறைவேற்ற வேண்டியது நாம் நமது தேச மக்களுக்குச் செய்யும் கடமை மட்டுமல்ல ; சர்வதேசக் கடமையும் ஆகும்.

ஒரு தோழருக்கு துன்பம் நேரும்போது இன்னொருவர் தோள் கொடுத்து நிற்போம். ஒரு தோழருக்கு மனச்சோர்வு ஏற்படும்போது இன்னொருவர் அவரை உற்சாகப்படுத்தியாகவேண்டும். நமது புரட்சிகரப் பாதை என்பது மாலை நேர விருந்து அல்ல ; வேடிக்கை விளையாட்டும் அல்ல. இந்தப்பாதையில் துன்பங்கள்தான் எமது இன்பங்கள். இயக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் "தோழர்"என்கின்ற பதத்தினை வெறும் சம்பிரதாயச் சடங்காக அல்லாமல் உண்மையான அர்த்த புஷ்டியுடையது என்று அடையாளம் கண்டு அதற்குரிய வகையில் உண்மையாக நடந்துகொள்வோம்.

நாம் கடந்து செல்லவேண்டிய காட்டாறுகள் பல நூற்றுக் கணக்கானவை நிறைவேற்றி முடிக்கவேண்டிய கடமைகள் பல்லாயிரக் கணக்கானவை இதைத் தனி நபர்களோ சில நபர்கள் சேர்ந்த குழுக்களோ ஒரு சிறிய இயக்கமோ நிறைவேற்றிவிட முடியாது மக்கள் அரசியல் ரீதியில் அணி திரண்டு ஆயுதம் தாங்கும் போது தான் இந்த வெற்றி கிட்டும் என்பதை நாம் நடைமுறையில் காண முடியும்.

மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆயுதப்போராட்டம் என்பதை நாம் நடைமுறையில் செயற்படுத்திக் காட்டவேண்டும் நாம் கடைப்பிடிக்கும் மார்க்சிச லெனினிசம் என்பது நமது நடைமுறைக்கு வளிகாட்டுகின்ற சித்தாந்தமே ஆகும். அதனை நமது மண்ணுக்குரிய வகையில் நடைமுறைப்படுத்துவோம்.

மார்க்சிச லெனினிசச் சித்தாந்தத்தின் பாதையில் செயற்படுகின்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையில் தொழிலாளர்கள், விவசாயிகள், முற்போக்குப் புத்திஜீவிகள், ஊழியர்கள் ஆகியோரை அணிதிரட்டியும் ஈழ விடுதலையை நோக்கமாகக் கொண்டு போராடும் ஏனைய இயங்கங்களோடு ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்பியும், சாவதேசிய மக்களின் ஆதரவோடு எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்போம் என்று இக் காங்கிரசில் நாம அனைவரும் மீண்டும் உறுதி செய்துகொள்வோம்

**தோழர்கள் அனைவருக்கும் என் அன்பும், மதிப்பும், கலந்த புரட்சிகர தோழமை வணக்கங்களைக் கூறி அமர்கின்றேன்.**

வெற்றிவரை புரட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை.........

15ம் பக்கத் தொடர்ச்சி

கியத்துவம் வாய்ந்த தலைவராவர். இவர் தலைசிறந்த மனிதாபிமானி, தென் ஆசியாவில் மிக முக்கியமான இடதுசாரித் தலைவர்களில் ஒருவர், மிகச் சிறந்த சர்வதேசியவாதி, அவர் ஈழத் தமிழர்களின் போராட்டம் பற்றிய ஓர் புரிதலை ஏற்படுத்துவதிலும், அங்கு சமூகமாற்றம்பற்றி அக்கறை கொண்ட சக்திகளைப் பயன்படுத்துவதிலும், சர்வதேச அளவில் இந்தியா, பாலஸ்தீன விடுதலை இயக்கம், நிக்கரகுவாவின் சண்டினிஸ்ரா விடுதலை முன்னணி, மற்றும் தேசிய விடுதலை இயக்கங்கள் ஜனநாயக மனித உரிமை இயக்கங்கள் ஆகிவற்றுடன எமது நட்புறவைப் பேணுவதிலும் அவர் அளப்பரிய பங்கை ஆற்றினார். அத்தகைய ஒரு மகா புருஷரை படுகொலை செய்ததன் மூலம் புலிகள் ஓர் வரலாற்றுத் துரோகத்தை புரிந்துள்ளனர். புலிகளின் இப்பாதகச் செயலை இக்காங்கிரஸ் மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

**12. புலிகளின் சிறையிலுள்ள அப்பாவிப் பொதுமக்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.**

புலிகளின் சித்திரவதை முகாம்களிலும், சிறைகளிலும் உள்ள 50,000 க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களையும், மற்றைய அரசியற் கட்சி உறுப்பினர்களையும் எமது ஸ்தாபன உறுப்பினர்களையும் உடன் விடுவிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் சர்வதேச சமூகமும், மனித உரிமை இயக்கங்களும், ஜனநாயக சக்திகளும் எடுக்க வேண்டுமென இக்காங்கிரஸ் வேண்டுகோள விடுகின்றது.

**13. புலிகளால் கொலை செய்யப்பட்ட தமிழ் தலைவர்களுக்கு இரங்கல்**

ஈழத் தமிழ் மக்களின் ஏகோபித்த அன்பைப் பெற்றவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும், சிறந்த பாராளுமன்றவாதியுமான திரு. அமிர்தலிங்கம் அவர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் யாழ் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வே. யோகேஸ்வரன் அவர்களும், 1989 ஆம் ஆண்டு கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன் தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் சிறிசபாரத்தினம் உட்பட ஏனை தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர். மாற்று அரசியல் கட்சித் தலைவர்களை கொலை செய்யும் புலிகளின் இக்காட்டுமிராண்டித்தனத்தை இக்காங்கிரஸ் வன்மையாகக் கண்டிப்பதுடன், இறந்த தமிழ்த் தலைவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**14. திரு. ராஜீவ் காந்தி அவர்களின் மறைவுக்கு இரங்கல்.**

இந்தியாவின் முன்னாள் பிரதமரும், பாராளுமன்றத்தின் இளம் தலைவரும், இலங்கைத் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டவரும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உற்ற நண்பருமான திரு. ராஜீவ் காந்தி அவர்களை சென்னை சிறிப்பெரும்புத்தூரில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் கோரமாக படுகொலை செய்தமையை இக்காங்கிரஸ் மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும், அவரின் பிள்ளைகளுக்கும், இந்திரா காங்கிஸ் கட்சியினருக்கும், இந்திய மக்களுக்கும் தனது ஆழந்த இரங்கலை தெரிவித்து கொள்கின்றது.

**15. மறைந்த இலங்கைத் தமிழ் இடதுசாரித் தலைவர்களுக்கு இரங்கல்.**

பிரபல இடதுசாரித் தலைவரும், தொழிற்சங்கவாதியும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் இணைந்து ஈழத் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் ஊடாக பெரும் பங்காற்றியவரும், எமது இரண்டாவது காங்கிரஸ் நடைபெறுவதற்கான தயாரிப்பு வேலைகளில் முக்கிய பங்கு வகித்தவருமான தோழர், வீ.ஏ.கந்தசாமி அவர்களின் மறைவுக்கு இக்காங்கிரஸ் தனது அஞ்சலியைத் தெரிவித்து கொள்கின்றது. இடதுசாரித் தொழிற்சங்க வாதிகளாக தோழர் விஜயானந்தன், தோழர் அண்ணாமலை ஆகியோர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டமையை இககாங்கிரஸ் கண்டிப்புதுடன் அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

**16. இடம் பெயர்ந்த முஸ்லீம் மக்களின் குடியேற்றம்.**

1991ம் ஆண்டு வடக்கு மாகாண முஸ்லீம் மக்கள் உடுத்த உடையுடன் தமது சொந்தப் பிரதேசங்களை விட்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் விரட்டி அடிக்கப்பட்டனர் இன்று அவர்கள் இருக்க இடமின்றி எந்தவித வேலையுமற்று, தமது உணவுக்கே கஸ்டப்படும் நிலையில் இலங்கையின் தென்பகுதிகளில் இருக்கும் பல அகதி முகாம்களில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக் குடியேறவும், தமது தொழில்களை மீண்டும் ஆரம்பித்து நிம்மதியான வாழ்வை நடத்தவும், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது சகல ஒத்துழைப்பையும் வழங்கும் என இக்காங்கிரஸ் தீர்மானிக்கின்றது.

**17. புலிகளின் தமிழினத் துரோகச் செயல்கள்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ்க்கண்ட நடவடிக்கைகளான

1. ஏனைய விடுதலை இயக்கங்களையும், அதில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான போராளிகளையும், அதன் தலைவர்களையும், அழித்தமை

2. முஸ்லீம் மக்களை வடமாகாணத்திலிருந்து விரட்டியமையும், கிழக்கு மாகாணத்தில் படுகொலை செய்து வருகின்றமையும்.

3. இந்தியத் தலைவர் திரு. ராஜீவ்காந்தி அவர்களைப் படுகொலை செய்தமையும்.

4. இந்திய இலங்கை உடன்பாட்டை நிறைவேற்றும் பொருட்டு, நண்பனாக வந்த இந்திய அமைதிப்படை மீது அனாவசிய யுத்தம் ஒன்றை ஏற்படுத்தியதன் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டிய அதிகாரப்பரவலாக்கலை தடுத்தமையும்.

5. பொது எதிரியாகிய சிங்கள அரசுடன் கூட்டுச் சேர்ந்து வட — கிழக்கு மாகாண அரசை கலைத்தமையும் ஈழ விடுதலைப் போராட்டத்தை நாசமாக்கியதுடன், தமிழ் மக்களின் உரிமைக்கும், அபிலாசைக்கும் விரோதமானவை எனக் காங்கிரஸ் பிரகடனப்படுத்துகின்றது.

**18. புலிகளின் அடாவடித்தனம்.**

வடக்கு கிழக்கிலுள்ள ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக புலிகள் நடத்திவரும் காட்டுமிராண்டித்தனமான விடயங்கள் பின்வருமாறு.

1. ஈழ மக்களினது சுயாதீனமான போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல், அதற்கான அனுமதி எடுக்க ரூபாய் பத்தாயிரம் முதல் ஐம்பதாயிரம் வரை அறிவிடுதல்.

2. வடக்கு கிழக்கில் உள்ள சிறுவர்களையும், சிறுமிகளையும் வலுகட்டாயமாக தம்முடன் இணைத்துக்கொண்டு அச்சிறார்களை தாக்குதல்களின் போது முன்வரிசையில் அனுப்பியமையால் யாழ் கோட்டை, ஆனையிறவு, முல்லைத்தீவு, போன்ற இடங்களில் நடைபெற்ற யுத்தங்களில் ஆயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர் புலிகளால் காவுகொடுக்கப்பட்டனர். இச்செயற்பாட்டினால் ஈழ மக்களினது இளைய தலைமுறையினர் பலியிடப்பட்டு வருகின்றனர்

3. கடைகளிலும் வியாபாரிகளிடமும் கப்பம் அறவிடுதல், கப்பம் கொடுக்காதோரை, சிறைகளில் அடைத்து சித்திரவதை செய்தல்,

4. புலிகளின் தவறுகளை விமர்சனம் செய்வோரையும், புலிகளின் பார்வையில் சந்தேககத்திற்கு இடமானவர்கள் என அவர்கள் கருதும் எவரையும் கைது செய்து சித்திரவதை செய்தல் இவர்களின் வதை முகாங்களில் 5000 க்கும் மேற்பட்ட அப்பாவிகள் இவர்களின் சித்திரவதைக் கொடூரங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

5. தனியார் முஸ்லீம் கூட்டுறவுக்கடைகள் மூலம் கொண்டு செல்லப்படும் உணவுப் பொருட்களை வழிமறித்து தமக்குகெனவும், "மாவீரர்" களின் குடும்பங்களுக்கு எனவும் கொள்ளையிடுதல். இதனால் கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதியை மிகுதிப் பொருட்களில் சேர்த்து வைத்து வியாபாரிகள் விற்பனை செய்வதால் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளது.

6. தங்களின் இச்சைக்கு இணங்காத பெண் ஆசிரியர்களை இலங்கை இராணுவத்தினருக்கு தகவல் கொடுத்தார்கள் எனக் கூறி கொலை செய்தமை.

7. தமது ஆதரவாளர்கள் பலரையும் மேற்கூறிய காரணத்தைக் கூறி ஆண், பெண் என்ற வித்தியாசம் இல்லாமல் படுகொலை செய்தமை இப்படியான அடாவடித்தனங்கள், அடக்கு முறைகள், காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள், சகலவற்றையும் நிறுத்துமாறு புலிகளை வற்புறுத்தும்படி சகல ஜனநாயக முற்போக்கு அமைப்புக்களையும், சர்வதேச மனித உரிமைச் சங்கத்தினரையும் இக்காங்கிரஸ் கோருகின்றது.

**19. சிறிலங்கா சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை உடன் விடுதலை செய்யவேண்டும்.**

புலிகளுடனான மோதல் ஆரம்பித்த 1990ம் ஆண்டு ஜூன மாதத்தின் பல நூறுக்கணக்கான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும், கைது செய்யப்பட்டு அச்சிறைச்சாலைகளிலும் இராணுவ முகாங்களிலும் வருடக்கணக்காக எந்தவித விசாரணைகளும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் பலபேர் எங்கிருக்கின்றார்கள் என்றே அவர்களது பெற்றோர்களுக்குத் தெரியாது. எனவே கைது செய்யப்பட்டு பல்வேறு பட்ட இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாக அவர்களது பெற்றோர்களுக்கு உடன் அறிவிப்பதுடன் அப்பாவிகள் அனைவரும் விசாரிக்கப்பட்டு உடன் விடுவிக்கப்படவேண்டுமென இலங்கை அரசை இக்காங்கிரஸ் கோருகின்றது.

**20. புரட்சிகர கியூபா நாட்டு அரசுக்கான எமது ஆதரவு.**

சோபியத் ஒன்றியத்தின் கிளற்சிக்குப்பின் தொடர்ச்சியான அமெிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தடைகளுக்கு முகம்கொடுத்து பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் தனி ஒரு சோசலிஷ நாடாக கியூபா தொடர்ந்தும் இருந்து வருவதையிட்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மகிழ்சியடைகின்றது. கியூபா கம்யூனிஸ்ட் கட்சி தனது சோசலிஷ கொள்கையில் விடாப்பிடியாக இருந்துவருவதையிட்டு பெருமிதம் அடைவதுடன் கியூபா கம்யூனிஸ்ட் கட்சிக்கு தனது புரட்சிகர வாழ்த்துக்களை இக்காங்கிரஸ் தெரிவிக்கின்றது, மூன்றாம் உலக நாடுகளில் உள்ள விடுதலை இயக்கங்களுக்கும், தேசிய விடுதலைப் போராட்டக்காரர்களுக்கும் கியூபா புரட்சியானது ஓர் முன்மாதிரியாகவும், உந்துசக்தியாகவும், இருந்து வருகின்றது. அமெரிக்க, பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் மிகவும் கடினமாக வாழ்க்கை நடத்திவரும் கியூபா மக்களின் போராட்டத்திற்கும், அதை வழி நடத்திவரும் அதன் புரட்சிகர தலைவர் பிடல்கஸ்ரோ அவர்களுக்கும் தனது நட்பையும் ஒருமைப்பாட்டையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் தெரிவித்துக் கொள்கின்றது.

**21. தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அறைகூவல்**

தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் அவர்களை முற்று முழுதாக அழித்தொழிப்பதற்கான ஓர் யுத்தத்தையே சிறிலங்கா அரசு நடத்திவருகின்றது. தமிழ் இயக்கங்கள், கட்சிகள், வைத்த நாலு அம்சக்கோரிக்கையை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்ளாமல் தானும் ஓர் நியாயமான தீர்வை முன்வைக்காமல் தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கையை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தனியான தீர்வுகளை முன்வைப்பதும், பிரச்சினைகளின் முழுவடிவத்தையும் உணர்ந்து கொள்ளாமல் செயற்படுவதும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை பலவீனப்படுத்தும் ஓர் முயற்சியாகவே இருக்கும் எனவே தமிழ் மக்களின் தேசிய இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்பதும் ஒரு விடயத்திலாவது தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒரே குரலில் இயங்கவேண்டும் என, அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் இக்காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

**22. யு.என்.பி அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள்.**

1988 — 1989 காலப்பகுதிகளில் தென்னிலங்கையிலும், மத்திய மலையகப் பகுதிகளிலும் ஜனதா விமுக்த! பெரமுன என்ற தீவிரவாத இயக்கத்தை ஒழித்துக் கட்டுதல் என்ற போர்வையில் யு.என்.பி. அரசு அப்பாவிச் சிங்கள மக்கள் மீது மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் படுகொலை நடவடிக்கைகளை இக்காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கின்றது.

**23. சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கான அறைகூவல்.**

கடந்த பத்துவருடங்களுக்கு மேலாக இலங்கை மக்களை மிகவும் மோசமாக வாட்டுகின்ற தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வொன்றை காண்பதற்கும், தென்னிலங்கையில் ஓர் ஜன நாயகச் சூழ்நிலையை மீண்டும் நிலைநாட்டுவதிலும் சிங்கள முற்போக்கு ஜனநாயக மிகவும் முக்கிய பங்குண்டு. அந்தகைய ஒரு போராட்டத்திற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யானது தனது முழுமையான ஆதரவை நல்குமென்று உறுதியளிக்கின்ற அதேவே ளை ஜனநாயக்கத்தை மீட்பதற்கும், தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை திருப்திப்படுத்தும் ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கும், தமது காத்திரமான பங்களிப்பை நல்கவேண்டும் என அனைத்து முற்போக்கு ஜனநாயகக் கட்சிகளுக்கும் இக்காங்கிரஸ் வேண்டுகோள் விடுக்கின்றது.

# கட்சியும் தோழர்.........

18ம் பக்கத் தொடர்ச்சி

நிக்கரகுவா மக்களிடத்திலும் புரட்சிகர சன்டினிஸ்டாக்களிடத்திலும் பல்வேறு அனுபவங்களை கற்றுக்கொண்டவர்.

87ம் ஆண்டு இறுதிப்பகுதியில் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தினை தொடர்ந்து கட்சியின் பணிப்புரைக்கமைய தாயகம் திரும்பி திருகோணமலை மாவட்டத்தில் அரசியல் பணிகளை தலைமையேற்று வழிநடத்தினர். வட-கிழக்கு மாகாண அரசின் நிர்மாணத்திலும், அரசிடமிருந்து அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதிலும் தோழர் ஜோர்ச்சிற்கு முக்கிய பங்கு இருந்தது. 1990 ஜனவரி 10ம் திகதி புலிகள் இலங்கை இராணுவத்தின் ஒத்தாசையுடன் கணணிவெடி தாக்குதல் நடாத்தி அவரை படுகொலை செய்தனர்.

தோழர் கணணன் (சுகிர்தன்) இவா யாழ்பாணத்தில் உள்ள கல்வியங்காட்டை பிறப்பிடமாகக் கொண்டவர். ஜெர்மனியில் அரசியல் அந்தஸ்த்து கோரி அது அங்கீகரிக்கப்படடு. நிரந்தர வதிவிட விசாவை பெற்றுக்கொண்ட பின்னர் கடசியின் அரசியல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டவர். 84ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பாலஸ்தீன பயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்துக் கொண்டு தாயகத்தில் தனது அரசியல இராணுவப் பணிகளை மேற்கொண்டவர். 07.07.1986 இல் கடற்பயணத்தின் போது ஏற்பட்ட விபத்தில் மரணித்த ஏனைய தோழர்களுடன் இவரும் ஒருவராக எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார்.

1984 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து ஜெர்மனியில் அகதியாக புலம்பெயர்ந்து தமிழர்கள் மத்தியில் கட்சியின் அரசியல் வேலைகள் பரவலாக்கப்பட்டது. கிடைத்த தொடர்புகளை வைத்துக் கொண்டு கட்சியின் பிரச்சாரக் கூட்டங்களை மேற்கொண்டதுடன் ஈழத்தில் கட்சி வேலைகளில் ஈடுபட்டு பின் ஜெர்மனிக்கு வந்திருந்த தோழர்களின் புதிய தொடர்புகளும் ஏற்படுத்தப்பட்டது. 85 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மேற்கு ஜேர்மனியில் உள்ள Schwerte நகரில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் வில்சன் தலைமையில் நடாத்தப்பட்டது. அதில் ஜெர்மனியின் பல பாகங்களிலிருந்தும் 50க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டார்கள். அதில் மேற்கு ஜேர்மனியில் அரசியல் வேலைகளை பரவலாக்கும் முகமாக அருந்தவராஜா தெரிவு செய்யப்பட்டார். அவருடன் இணைந்து வேலை செய்வதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அக்கமிட்டி தோழர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் அரசியல் வேலைகள துரித கதியில் வளர்ச்சியடைந்தன.

இக்காலகட்டத்தில் வேலை செய்த அனைத்து தோழர்களின் அர்ப்பணிப்புக்களையும், உழைப்புக்களையும் மறக்க முடியாது. குறிப்பாக தோழர்கள் அருந்தவராஜா, ஜெயசிங்கம், வேலாயுதம், அலெக்ஸ், ரவி, போல், சிவா, சிவவேல், பாலகிருஸ்ணன், பரா, சந்தோஸ், சுந்தரலிங்கம், போன்றவர்களும் பின்நாளில் சிறி, குமரன் போன்றவர்களும் செய்த வேலைகளை நினைவு கூருவது முக்கியமானது.

1986ம் ஆண்டு நடுப்பகுதியில் தோழர் வில்சன் கட்சி வேலைகளுக்காக இந்தியாவுக்கு சென்ற பின் மேற்கு ஜேர்மனியில் பொறுப்புக்கள் தோழர் அருந்தவராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் கட்சியானது ஜெர்மனியில் ஆர்ப்பாட்டம் இல்லாமல் மிகவும் தீவிரமாக வேலைகளை மேற்கொண்டிருந்தது. ஜெர்மனியில் ஈழத்தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக ஜெர்மன் மொழியில் தகவல்கள் வெளியிட்டதுடன் மாதமொரு முறை நாளாந்த செய்திகளையும், ஈழமக்களின் அவலங்களையும் தொகுத்து வினியோகிக்கப்பட்டது. எமது மக்களுக்கு ஈழத்தின் செய்திகள் சென்றடைவதற்காக வாரம்தோறும் "ஈழச் செய்திகள" என்ற பெயரில் செய்தி தொகுப்பு ஒன்றையும் வெளியிட்டு வந்தோம்.

ஜேர்மனிய மக்களுக்கு எமது மக்களின் அவலங்களையும், பேரினவாத ஒடுக்குமுறையையும் விளக்கும் முகமாக நகரங்களில "ஈழம் கண்காட்சி" ஒன்றினை ஏற்பாடு செய்து நடாத்தியதுடன் பல்வேறு நகரங்களில் தென் ஆசிய நிறுவனத்தின் உறுப்பினர் வோல்ட்ட கெல்லர் பொன்றவர்களை அழைத்து ஜேர்மனிய மக்களுக்கு எமது அரசியல் பிரச்சினைகள் தெளிவுபடுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டுகளின் பிற்பாடு ஐரோப்பிய புலம்பெயர் மக்கள் மத்தியில் இலக்கிய ஈடுபாடு பரவலாக சுயாதீனமாக வர ஆரம்பித்தது. பல்வேறு வகையான சஞ்சிகைகள் வெளிவந்தன. அதில் எமது தோழர்களினதும சுயாதீனமாக 1988 ஆம் ஆண்டிலிருந்து "வெகுஜனம்" என்னும் பெயரில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது. அது இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை தொடர்ந்து 1990ம் ஆண்டுவரை வெளியிடப்பட்டது. 1988க்கும் 1992 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்து வெளிவந்த தினசரிப் பத்திரிகைகளில் வெளியான ஈழமக்கள் தெடர்பான செய்திகள், கட்டுரைகள் எமது கட்சியின் அறிக்கைகள் செய்திகள் போன்றவற்றை தொகுத்து மாதமொருமுறை வெளியிட்டோம். கட்சியின் ஈழமக்களின் நிலைமைகளை தினமும் அறிந்து கொள்ளும் தொலைபேசி சேவையையும் நடாத்தினோம் இந்த வேலைகளில் தோழர் சிறியின் பங்கு அளப்பரியது.

1992 ஆம் ஆண்டிலிருந்து "புதிய பார்வை" எனும் பெயரில் பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டது. எமது பாசமிகு தோழர் பத்மநாபாவுடன் மரணித்த 12 தோழர்களையும் நினைவுகூரும் முகமாகவும் ஈழப்போராட்டத்தில் இதுவரை மரணித்த மக்களையும் போராளிகளையும் நினைவு கூருவதற்காகவும் ஒவ்வொரு வருடமும் ஜூன் 19ம் திகதியை தியாகிகள் தினமாக எமது கட்சியின் இரண்டாவது காங்கிரஸில் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஜேர்மனியில் 97 ஆம் ஆண்டுவரை தோழர்களை ஒன்று கூடி தியாகிகள் தினத்தை ஒவ்வொருவருடமும் அனுஸ்டித்து வந்தோம். 2000 ஆம் ஆண்டில் கட்சிக்குள் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் பல தோழர்களை குழப்பமடையச் செய்தன. ஆனால், காலம் சரியான திசைவழியையும், உண்மை நிலைமையையும் தோழர்களுக்கு தெளிவுபடுத்தியது. தோழர்களாகிய நாம் அனைவரும் எமது மக்களின் உண்மையான விடுதலை கிடைக்கும வரை உறுதியுடன் போராடுவோம்.

**தோழர்கள்**
**ஜேர்மனி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் உள்ளூராட்சி தேர்தல் ஓர் கண்ணோட்டம்

## 1983 மே 18ம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான பன்முகப் பார்வை

### ஈழமுழககம் ஜூன் 83 இதழில் பிரசுரிக்கப்பட்டது

இலங்கையில் கடந்த மே மாதம் 18ம் திகதி நடந்த உள்ளூராட்சி சபை தேர்தல்களில், தமிழ் பேசும் பகுதிகளான வடக்கு கிழக்கு மாகாணங்களில் அனைத்து இடங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏனைய சிங்களப் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சி 32 நகர சபைகளில் 25 ஐயும், 12 மாநகர சபைகளில் 9 ஐயும் கைப்பற்றியுள்ளது.

தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னர் தீவிரவாதிகள் குழுவைச் சார்ந்த இளைஞர்கள் சிலர் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் இருவரையும், (தமிழர்) ஐ.தே.க யாழ் மாவட்ட அமைப்பாளரின் மெய்ப்பாதுகாவலரையும் சுட்டுக் கொன்றுள்ளார்கள். அத்துடன் மட்டக்களப்பு ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்களான இராசதுரை, தேவநாயகம் போன்றோருக்கு கொலை மிரட்டல் கடிதங்களையும் அனுப்பியுள்ளனர்.

இவை நடைபெற்று ஒரு சில நாட்களில் சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமுமாகிய அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் பேசிய கூட்டம் குழப்பப்பட்டதுடன், அவரது மோட்டார் வண்டியும் இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டு நொருக்கப்பட்டது.

அத்துடன் தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கி தேர்தலை பகிஸ்கரிக்கும்படியும் இவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை மீண்டும் மீண்டும் வற்புறுத்தி வந்தனர். இவர்களது துப்பாக்கிச் சூட்டுக்கு அஞ்சிய ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் பலர் தேர்தலில் இருந்து வாபஸ் வாங்கிக் கொண்டனர். இதைத் தொடர்ந்து குமார் பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரசும் வடக்கு கிழக்கில் இருந்து முற்றாக வாபஸ் வாங்கியது.

இவற்றுக்கு மேலாக தீவிரவாதிகள் மக்களையும் எச்சரிக்கை செய்துள்ளார்கள், அதாவது யாரும் தேர்தலில் நிற்கக் கூடாதென்றும் வாக்களிக்கச் செல்லக் கூடாதென்றும் எச்சரித்துள்ளார்கள். ஓர் விடுதலை இயக்கமானது தமது கொள்கை விளக்கங்கள், சித்தாந்தங்களின் மூலம் மக்களை தமது பக்கம் வென்றெடுக்க வேண்டுமேயொழிய மிரட்டலின் மூலமோ, அச்சுறுத்தல் மூலமோ வென்றெடுக்க முடியாது என்பதை நன்குணர வேணடும். திடமான கொள்கையும் சித்தாந்தமும் மக்களைப் பற்றிக் கொண்டால் அதை எந்த ஒரு சக்தியாலும் உடைத்தெறிய முடியாது.

இங்கே இன்னுமொன்றை நாம் அவதானிக்க வேண்டும் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் யாவும் யாழ் மாவட்டத்தை மையமாகக் கொண்டதாகவே உள்ளது. ஆனால் ஈழப் பிரதேசமென்பது மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, பொத்துவில், மலையக மக்களையும் உள்ளடக்கியதென்பதை இவர்கள் மறந்துவிட்டார்கள் போல் உள்ளது. ஏனெனில் உள்ளூராட்சித் யில் விழிப்புணர்ச்சியும் அடைந்தவர்கள், ஆனால் ஏனைய மக்கள் இரு வகையிலுமே பின் நிற்பவர்கள். எனவே, ஈழ விடுதலையை நோக்கமாகக் கொண்ட விடுதலை இயக்கங்கள் முதலில சகல தரப்பு மக்களையும் அரசியல் வழிப்புணர்ச்சி அடையச் செய்வது முக்கியம். இதை விடுத்து ஒரே இடத்தில் இருந்து சில வன்முறைகளில் ஈடுபடுவது எந்த ஒரு முடிவையும் ஏற்படுத்தாது. மாறாக ஒரு சில வன்முறைச் சம்பவத்தினால் மக்கள் தான் ஆயுதப் படையினரால் அழிக்கப்படுவார்கள் அதாவது அரச வன்முறைகளை எதிர்த்து மக்கள் போராட ஆயத்தமாகாதவரை தீவிரவாதிகளின் வன்முறைகள் அழிவையே ஏற்படுத்தும்.

**ஓர் விடுதலை இயக்கமானது தமது கொள்கை விளக்கங்கள், சித்தாந்தங்களின் மூலம் மக்களை தமது பக்கம் வென்றெடுக்க வேண்டுமேயொழிய மிரட்டலின் மூலமோ, அச்சுறுத்தல் மூலமோ வென்றெடுக்க முடியாது.**

தேர்தல்களை பகிஸ்கரிக்குமாறு கோரிய இத்தீவிரவாதிகள் தமது பிரச்சாரத்தை யாழ் குடாநாட்டில் தான் மேற்கொண்டார்களே ஒழிய அதற்கு அப்பால் அவர்களின் செயற்பாடுகள் ஏதும் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

இதனால் பகிஸ்கரிப்பும் வெற்றியடையவில்லை. இதனை வைத்துப் பார்க்கும் பொழுது இவர்கள யாழ் குடாநாட்டிற்கான விடுதலைக்காக மாத்திரமே போராடுகின்றார்களா என்ற ஐயப்பாடும் தோன்றுகின்றது. அப்படியாயின் ஈழப்பிரதேசத்தின் ஏனைய மக்களைப் பற்றி இவர்களின் நிலைப்பாடென்ன? இவற்றையெல்லாம் இங்கு நாம் ஆராய்வதற்கும் காரணங்கள் உண்டு. ஏனெனில் தீவிரவாதிகளின் கடந்த கால நடவக்கைகளையும், தற்பொதைய அவர்களின் நடவடிக்கைகளையும் கவனிக்கும் பொழுது இவர்களது செயற்பாடுகள் யாவும் யாழ் மாவட்டத்திற்குள்ளேயே நடைமுறைப்படுத்தப்படுவதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

யாழ் மாவட்டத்து மக்கள் ஈழத்தின் ஏனைய மக்களை விட கல்வி அறிவில் உயர்ந்தவர்கள் அத்துடன் ஓரளவுக்கு அரசி

1981ம் ஆண்டு தீவிரவாதிகள் மூன்று பொலிஸாரை சுட்டார்கள் என்ற பெயரில் முழு இலங்கையிலுமே தமிழர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். அதே போல் நடந்து முடிந்த தேர்தலில் ஓர் இராணுவக் கோப்ரல் சுட்டுக்கொல்லப்பட்டான் என்பதற்காகவும் இரண்ட விமானப் படையினர் சுடப்பட்டனர் என்பதற்காகவும், யாழ், வன்னி, திருமலை என்ற பேதமின்றி சகல தமிழ்‧பகுதிகளும் ஆயுதப்படையினரால் எரியூட்டப்படுகின்றன. இவ்வளவு நடந்தும் கூட மக்கள் இவற்றுக்கெதிராக கிளர்ந்தெழுந்தார்களா? என்றால் இல்லை என்பதே உண்மையாகும்.

அதாவது மக்கள் போராட்டத்திற்கு முற்று முழுதாய் தயாராய் இல்லாதபோது தீவிரவாதிகள் எனப்படும் சிலர் செய்யும் வன்முறை நடவடிக்கைகள் மக்களின் அழிவுக்கே வழி வகுக்கும் இது நேரடியாகவே இன்று நாம் அனுபவிக்கும் நிதர்சனமான உண்மையாகும். எனவே தான் கூறுகின்றோம் மக்கள் அரசியல் மயப்படுத்தப்பட்டு அடக்கு முறைகளுக்கெதிராக கிளர்ந்தெழச் செய்ய வேண்டும். இதன் மூலம் தான் அடக்கு முறை அரசை நாம் வெற்றி கெள்ள முடியும்.

இதனை விட்டு கண்மூடித்தனமான ரீதியில் இவர்கள் செயற்படுவார்களாயின் அப்பாவி மக்களைத்தான் பலிக்கடாவாக்குவார்கள். அண்மைய சம்பவங்கள் இதற்கு நல்ல உதாரணங்களாகும். விடுதலைப் போராட்டத்தில் இவையெல்லாம் சர்வசாதாரணம் என்று இவ்றறை நாம் ஒதுக்கிவிட முடியாது. விடுதலைப்போராட்டத்தில் பலர் தமது இன்னுயிாகளை அர்ப்பணிக்க வேண்டியதும், ஆழும் வர்க்கத்தின் காட்டுமிராண்டிச் செயலும் தவிர்க்க முடியாததே ஆனால், இயன்றவரை மனித உயிர்களின் சேதத்தைக் குறைப்பதே உண்மையான ஓர் விடுதலை இயக்கத்தின் கடமையாகும்.

மக்களை அணிதிரட்டாமலும், ஓர் திட்டவட்டமான போராட்ட அணுகுமுறை இல்லாமலும், செயற்படுத்தப்படும் வன்முறையானது நிச்சயமாக விடுதலையைப் பெற்றுத்தராது மாறாக மக்கள் விடுதலை இயக்கங்களை வெறுத்தொதுக்கவே இது வழி சமைக்கும். பிற்போக்கு கும்பல்களை அடையாளம் கண்டு அம்பலப்படுத்துவதன் மூலமும் மக்கள் மத்தியில் சரியான ரீதியில் அரசியல் பிரச்சாரத்தை மேற்கொள்வதன் மூலமுமே மக்களை அணிதிரட்ட முடியும்.

மக்களை அணிதிரட்டாமல் மக்களிலிருந்து அந்நியப்பட்டு, தனித்து நின்று விடுதலைக்கு போராடுவதானது முழு முட்டாள் தனமானது. மாத்திரமல்லாமல் தம்மைத் தாமே அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்வதுமாகும் தெர்தல் தாலத்திலும் அதன் பின்னர் நடந்த சம்பவங்களும். எமக்கு இதைத்தான் போதிக்கின்றன.

இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுவதால் நாம் ஆயுதப்புரட்சிக்கு எதிரானவரென்றாகிவிடாது தோழர் லெனின் கூறியவாறு பயங்கரவாதம் என்பது போராட்டத்தின் ஓர் அம்சமே. ஆனால், வெறும் பயங்கரவாதமே போராட்டமாகிவிடாது. அத்துடன் செஞ்சீனச் சிற்பி தோழர் மா-ஓ கூறுகின்றார் அரசியல் தான் துப்பாக்கியை வழிநடத்த வேண்டுமே தவிர, துப்பாக்கி அரசியலை வழிநடத்தக் கூடாது. வழிநடத்தவும் முடியாது. இதுவே தான் எமது கொள்கையும்.

உலக வரலாறுகளைத் தான் நாம் உதறித்தள்ளினாலும், உள்ளூர் அனுபவங்களாவது எமக்கு பாடமாக அமைய வேண்டும். இல்லையேல் உலக வரலாற்றிலேயே மிகவும் கசப்பான வரலாற்றைப் படைத்தவர்களாவோம்.

ஈழமுழக்கம்.

# முட்பதையில் நடந்த பயணம்

தோழர் கபூர் (பாலசுப்பிரமணியம்) இலங்கையில ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணியின முன்னோடிகளில ஒருவர். ஈழமாணவர் பொதுமன்றம் கொழும்பில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்தபோது அதன் முதன்மைச் செயற்பாட்டாளர்.

1977 இனவன் முறையின்போது சொந்த வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து சரஸ்வதி மண்டபம் உள்ளிட்ட இடங்களில் அடைக்கலம் புகுந்திருந்தவர்களுக்கு உதவும் பணிகளில் ஆரம்பித்து 1986 டிசம்பரில் புலிகளால் கடத்தப்பட்டு படுகொலைசெய்யப்படும வரை தமிழ் சமூகத்தின் விடிவிற்காக தம்மை அர்ப்பணித்திருந்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியல் கல்வி கற்ற தோழர் கபூரின் வீடு காலி வீதியில் பிரித்தானிய தூதரகத்திற்கு முன்னால் இருந்த முகாந்திரம் வீதியில் அமைநதிருந்தது. இவர் 1970 களில் கொழும்பு வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மட்டக்குளி எனப் பல்வேறு பகுதிகளிலும் மாணவர்கள் சமூகப்பிரக்ஞை உள்ள வெவ்வேறு மனிதர்களிடம் தொடர்புகளை மேற்கொண்டு ஒரு வெகுஜன அடித்தளத்தை கொழும்பில் நிறுவ முனைந்திருந்தார். கொழும்பு வெலிக்கடைச் சிறையிலிருந்த தோழர்களை விடுவிப்பதற்கான சட்ட உதவிகள் அவர்களைச்சென்று பார்வையிடுவது உள்ளிட்ட பணிகளை அவர் மேற்கொண்டிருந்தார்.

அவரது மூத்த சகோதரர் பரமநாதன் முதலில் ஈழமாணவர் பொது மன்றத்தில் வேலைசெய்து பின்னர் ஈழமாணவர் இளைஞர் பொதுமன்றத்தில் இணைந்து வேலைசெய்தார்.

கொழும்பில் தோழர் பாலசுப்பரமணியம் அவர்களால் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணயில் செயற்படுவதற்கு மிகவும் ஆற்றலும் புலமைத்துவமும் வாய்ந்த பலர் இணைக்கபட்டனர். அவரது நெருங்கிய உறவினர்கள் பலர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் இணைந்து செயற்பட்டனர்.

தோழர் கபூருடன் இணைவிலிருந்த தோழர்கள் மாணவர்களாக, வங்கி ஊழியர்களாக, தபால் அதிபர்களாக அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களாக, இடதுசாரிகளாக இருந்தனர். ஈபிஆர்எல்எப் இன் வளர்ச்சியில் இவர்களின் பங்களிப்பும் பதிவு செய்யப்பட வேண்டும். ஈழமாணவர் பொது மன்றம், ஈ.பி.ஆர்.எல்.எப்பின் அன்றாட இயக்கத்தற்கான பொருளாதார உதவிகளைக் கூட இவர்கள் செய்திருக்கிறார்கள்.

1980களின் முற்பகுதியலேயே தோழர் கபூரின் வீடு கெடுபிடிகள் சோதனைகளுக்குள்ளாகியிருகிறது. மிகவும் புத்தி கூர்மைமிக்க மாணவரான கபூர் தனது உயர் கல்வியையும் துறந்திருந்தார்.

1983 ஐ அடுத்து தோழர் கபூரின் குடும்பம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து பருத்தித்துறையில் இருந்த அவர்களின் வீட்டில் குடியேறினர்.

தோழர் கபூர் யாழில் கட்சிப்பணிகளை ஆற்றினார். ஈ.பி.ஆர்.எல் எப்பின் யாழ் வெகுஜன வேலைகளில் பங்கெடுத்துக்கொண்டார். ஒரு அரசியல் இராணுவ அமைப்பை நேர்த்தியான



முறையில் கட்டியெழுப்புவதில் அவர் இடையறாத அக்கறை செலுத்தினார். பாலஸ்தின விடுதலைக்கான பிரபல்ய முன்னணியின் பாசறையில் பயிற்சி பெற்றவர்.

அசாதாரண ஆழுமையும் தலைமைத்துவ பண்பும் அவரிடமிருந்தது மாத்தையா போன்ற புலிகளின் தலைவர்கள் வடக்கு-கிழக்கில் ஒரு இயக்கம தான் இருக்கலாம் என அகங்காரம் பேசியபோது நேரடியாக அவர்களின் முகத்தில் அறைந்தாற்போல் அவர்களின் ஆணவத்தை ஆட்சேபித்தவர் கபூர்.

வசீகரமான தேற்றம்கொண்ட சிறிய உடல்வாகு கொண்ட பாலசுப்பிரமணியம் 1986 கடத்தப்பட்டு கொல்லப்படும்போது புலித் தற்குறிகளுக்கு தாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் எனத்தெரிந்திருக்க நியாயமில்லை.

தோழர் கபூரின் இளைய சகோதரரும் எமது மாணவர் அமைப்பின் செயற்பாட்டாளருமான தோழர் தேவன் பருத்தித்துறையில் வைத்து பாசிசப் புலிகளால் கொல்லப்பட்டார்.

தோழர் கபூரின் தாய்தந்தையரும் ஒரு புதல்வரும் புதல்வியும் எஞ்சினர்.

புத்திரசோகத்தாலும் சோதர அழிவாலும் அவர்களின் குடும்பத்தை வெறுமை ஆக்கிரமித்தது.

பின்னர் திருமலையிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எப் ஆதரவாளர்கள் குடும்பங்கள் இந்தியாவிற்கு இடம்பெயாந்த போது தோழர் கபூரின் குடும்பத்தினரும் இடம்பெயர்ந்தனர். அரச ஊழியரான கபூரின் தந்தையார் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். புத்திரசோகத்தின் பிரவுத்துயர் அவ்களை தசாப்தங்களை கடந்து வாட்டி வதைத்தது. அண்மையில் வேலூர் அகதிமுகாமில அவர் மரணித்தார். தாயார் தனிமையின வேதனையில் வேலூரில். கொழும்பு பிரித்தானியத் தூதரகத்திற்கு முன்னால் அமைந்திருந்த முகாந்திரம் வீதியில் இருந்து தோழர் கபூரின் குடும்பம் வேலூர்வரை ஒரு கரடு முரடான முட்பாதையில் கால்நூற்றாண்டுகால யாத்திரையை நடத்தியிருக்கிறது. பேரினவாதமும் தமிழ்ப பாசிசமும் முட்பாதையைத்தான் அவர்களுக்குத் தெரிவாக்கியிருந்தது. அவருடைய சகோதரி பிரபா ஈ.பி.ஆர்.எல்.எப் தோழரான கவிஞர் லோலன் அவர்களைத் திருமணம் செய்து தற்போது சுவிட்சர்லாந்திற்கு புலம் பெயர்ந்து வாழ்கிறார். அவருடைய சகோதரி ஐரோப்பிய புலம் பெயர்தளத்தில் பெண்ணியவாதியாகவும், சமூக ஆர்வலாராகவும் செயற்படுகிறார்.

பாலசுப்பிரமணியம் போன்றவர்களின் உழைப்பையெல்லாம் எடுத்துக்கொண்டு தலைவர்கள் என்ற பெயரில் இன்று உலாவருபவர்களுக்கு பாலசுப்பிரமணியத்தின் பெயர் நினைவில் இருக்குமோ தெரியாது.

தோழர் கபூர் போன்றவர்களின் பன்முக ஆளுமை சமூகப் பிரக்ஞை பற்றி பிரத்தியேகமாக எழுதப்பட வேண்டும். அதற்கு இச் சிறுபத்தி போதியதன்று. எமது ஆன்ம உணர்வுகள் வாழும் வரை எமது தேடல்கள் தொடரும் வரை தோழர் கபூரின் நினைவுகள் எம் இதயங்களில் வீற்றிருக்கும்.

### எம் சமூகக்கனவுகள் உங்கள்.......... 23ம் பக்கத் தொடர்ச்சி

செல்வினும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரும் கொல்லபட்டுவிட்டார்.

தோழர் யுவாம்சொய்சா சகோதரி தவிர தாய் தந்தையருக்கு ஒரே ஒரு புதல்வர். அவர்களை மிக நீண்ட காலம் தனிமை உணர்வு வாட்டியது.

ஒரு வானவில் போல்— ஒரு எரிநட்சத்திரம் போல் எமது சமூகத்தில் தோன்றி அற்புதமான வண்ணங்கள் காட்டிமறைந்தவர் தோழர் ரடணம் தமது சமூகப் பிரக்ஞையினூடாக எம்மனங்களில் ஆழப்பதிந்தவர். நட்பு தோழமை அவரின் இன்முகம் எம் நெஞ்சில் நிழலாடுகிறது.

மழைகாலத்து மன்னாரின் பிரதான நிலப்பகுதியின் பசுமையும், மண்வாசமும், சிலிர்ப்பும், சுகந்தமும் செடிகளில் முத்துகளாக பனித்துளி படிந்த அதிகாலைப்பொழுதுகளும், மன்னார் கடலோரக் கிராமங்களின் கடல்படுதிரவியங்களின் வாசனையும் மன்னார் மக்களின் விருந்தோம்பும் பண்பும் தோழர் ரட்ணம் அவர்களின் புன்முறுவல் பூத்த முக நினைவுகளும் கலந்து எம் கண்களை திரை முட்டச்செய்கிறது.

தோழரே எமது சமூக கனவுகள் எம் நெஞ்சங்களில் உங்கள் நினைவுகளுடன் பூத்துக்கிடகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12.12.1985
# 'நெருப்புத் தினம்'

எம்மை ஒடுக்கும் ஸ்ரீலங்கா இனவெறி ஆட்சியாளர்களுக்கு எதிரான வீரம் செறிந்த ஈழவிடுதலைப் போராட்ட வேள்வியில் ஆயிரக்கணக்கான போராளிகள் தம்மை அர்ப்பணித்தனர்.

இப் போராளிகள் ஸ்ரீலங்கா அரசினுல் வெறித்தனமாக வேட்டையாடப்பட்டது ஒருபுறமிருக்க, மறுபுறம் இயக்கங்களாலேயே கொன்று தீர்க்கப்பட்ட கோரநிகழ்வுகளும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

நாம் அறிந்தவரை இவ்வாறு படுகொலை செய்யப்பட்டோரின் பட்டியலில் கடைசிப் போராளியாக தோழர் றேகன் உள்ளார். மேற்கொண்டு இப்பட்டியல் நீளக்கூடாது. இக்கோர நிகழ்வு தொடரக்கூடாது. போராட்ட வரலாற்றில் இரத்தக் கறையைப்படிய வைத்த இயக்கப்படுகொலைகளுக்கு தோழர் றேகனின் படுகொலையோடு சமாதிகட்டப்பட்டாக வேண்டும்; சாவுமணி அடித்தாக வேண்டும்.


இயக்கப்படுகொலை ஒரு அராஜகச் செயல், இச் செயற்பாட்டால் சக போராளிகள், பொதுமக்கள், போராட்ட ஆதரவு சக்திகள் மத்தியில் எழுந்த இதயக் குமுறல்களை; அவர்களின் கோபமூச்சுக்களை நெருப்புத்தினமாய் பிரகடனம் செய்கின்றோம்.

இந்நாளில்:

அராஜகவாதிகளுக்கு முடிவுகட்ட
சரியான வழிமுறையில் ஈழப்போரை முன்னெடுக்க
ஈழ மக்கள் சபதமேற்பர்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [EPRLF]

## அன்பு மனைவிக்கு



அன்பு மனைவிக்கு
புரட்சி வணக்கங்கள்!

உடலால் உனைப் பிரிந்திருக்கலாம்!
உள்ளத்தாலுனைப் பிரியவில்லை.
உடலால் உனைப் பிரிந்திருக்கலாம்!
மனதாலுனைப் பிரிய விழேன்.

என் புரட்சிப் பயணம்
விருப்பம் அல்ல.
விடிவைத் தரும்
நிர்ப்பந்தம் —

என்னையும் உன்னையும்
பிரித்தது
விதியல்ல;
மதி! —

நாளும் ஒருவரை
எழுதும்
எங்கள் வரலாற்றில்,
ஒரு வேளை........
முழுமாத்திரையிடாமல் போகும்
என் வசனத்தையும்
நிச்சயம்
என் தோழர்கள்
எழுதி முடிப்பார்கள்.
அன்று
எங்கிருந்தோ பார்க்கும்
என் விழிகள்
மின்னலாய்க் கண்டு கொள்ளும்.

என் மொழிகள்
இடியாய் முழங்கும் —

என் ஆனந்தக் கண்ணீர்
மழையாய்ப் பொழியும் —

அப்போது
நீ
உத்தமியாய் இருக்க வேண்டும்
"உடன் கட்டை ஏறி" அல்ல.....
என் புதல்வர்களைப்
புரட்சிப் போராளிகளாக்கி —

● தோழர் ஈழமதி.

தோழர் ஜெகதீஸ் அவர்களை ஆசிரியராகக் கொண்டு பயிற்சி முகாமில் வெளியிடப்பட்ட தாயகம் கையெழுத்து சஞ்சிகையின் 11. 06.1984 இதழில் வெளியிடப்பட்ட கவிதை.

**கேள்வி? முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் மீண்டும் இலங்கை வந்து அரசியலில் ஈடுபடுவாரா?**

**பதில்: நிச்சயமாக இலங்கைக்கு திரும்பி வந்து அரசியலில் ஈடுபடுவார் அவர் கட்சியில் தொடர்ந்து அங்கத்தவராக இருந்து செயல்பட்டு வருகிறார். அவர் இங்கு வந்த பின் கடமைகளை தொடர்ந்து செய்வார்.**

*இது வீரகேசரி பத்திரிகைக்கு சு. பிரேமச்சந்திரன் வழங்கிய பேட்டியில் தெரிவித்தவை. பின்னர் தான்தோன்றித்தனமாக தோழர் வரதராஜப்பெருமாளை கட்சியை விட்டு வெளியேற்ற திட்டம் தீட்டிய சு.பிரேமச்சந்திரன், வரதராஜப்பெருமாளிடம் கட்சி அடையாள அட்டை இல்லை என்றும் சந்தா செலுத்தவில்லை என்றும் கட்சியில் இருப்பதற்கு தகுதியில்லை என்றும் அறிக்கை விட்டார். இந்த அறிக்கை அவரது கபட நோக்கத்தை புலப்படுத்தியுள்ளது. அவரது தலைமையின் கீழ் கட்சி அமைப்புக்களில் பணிபுரிந்த தோழர்கள் அவரது குற்றச்சாட்டின் தாராதம்யத்தை விளங்கிக்கொள்வதற்கு எங்களது விளக்கம் அவசியமில்லை.*

Virakesari Thursday 27th January - 2000

# வரதர் கட்சியில் இருப்பதற்கு அடிப்படை தகுதியே இல்லை

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் இலங்கையை விட்டு வெளியே வாழ்ந்த காலத்திலும் சரி இலங்கை திரும்பிய பின்னரும் சரி கட்சி நிதிக்காக எவ்வித பங்களிப்பும் செய்யவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ் அங்கத்தவராக செயற்படுவதற்கு அவரிடம் ஓர் செல்லுபடியாகும் அடையாள அட்டை கூட இல்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட காரணங்களே அவர் கட்சியில் இருப்பதற்கு அருகதை அற்றவர் என்பதை காட்டுகின்றன என்றும் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் வரதராஜப்பெருமாளுக்கு நேற்று எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:

தங்களுக்கு நான் 6-12 1999, 12.01.2000 ஆகிய திகதிகளில் எழுதிய கடிதங்களில் எந்தத் தருணத்திலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் உத்தியோக பூர்வமான அடையாள அட்டை ஒன்று தங்களுக்கு வழங்கப்படவில்லை என்பது எமது ஆவணங்களிலிருந்து தெரிய வருகிறது. எமது கட்சி யாப்பின் பிரகாரம் கட்சி நிதிக்கு பங்களித்தவர்களுக்கு மட்டுமே கட்சி அடையாள அட்டை வழங்கப்படும். நீங்கள் 1990ஆம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாட்டில் வாழ்ந்ததிலிருந்து 1999ஆம் ஆண்டு மாசி மாதம் இலங்கை திரும்பியது வரை கட்சி நிதிக்கு எவ்வித பங்களிப்பும் செய்யவில்லை என்பதும் இலங்கை திரும்பிய பின்னரும் கூட கட்சி நிதிக்காக எவ்வித பங்களிப்பும் செய்யவில்லை என்பதும் எமது ஆவணங்களில் இருந்து தெரியவருகின்றது. இச்சூழ்நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் அங்கத்தவராக செயற்படுவதற்கு தங்களிடம் ஓர் செல்லுபடியாகும் அடையாள அட்டை இல்லை என்பதைத் தெரியப்படுத்துகிறேன்.

## உலகம் இதைக் கேட்கட்டும்

கரும்பைவிட இனிப்பான
பண்புநிறை தோழமையார்
கரும்பு தின்ற கதை பற்றி
விரும்புகின்ற கவிதையினை
அரும்புகின்ற விடுதலைப் பூ
சூடுதற்கு விளைகின்ற
களத்தினிலே வடிக்கின்றேன்
நீறுபூத்த நெருப்பாகப்
பொறுமையுடன இருந்தவரே
கோடுபோட்ட வீடுகளைத்
தாண்டிக்களம் வந்தவரே
மனம் திறந்து சில வார்த்தை
உங்களுடன் பேசுகிறேன்.

காதில் வந்து குத்துகின்ற
காதினிலே வந்த சில
களங்கத்தைக் குழைத்த உந்தன்
ஒழுக்கத்தைப் பற்றியது

வீட்டுச் சிறை விட்டுவெளி
வந்த ஒளித் தீபங்களே
கூட்டினிலே பூட்டிவைத்துக்
குத்தியும்மை இரசித்தவர்கள்
கோடுபோட்டு வைத்தவர்கள்
கொள்கை இனிச் சாகுமடி

பெண் அடிமைக் கொள்கையினி
செத்தொழிய வேண்டுமென்றால்
தீபங்களாய் மட்டுமல்ல
செந்தீயாய்ச் கொடுமைகளை
ஊடுக்காய் உழைக்க வந்த
உம்மிடத்தில் ஒழுக்கநெறி
ஊற்றெடுத்துப் பாயட்டும்
யாருக்கும் அஞ்சாத
பெருமையோடு நீர் வாழ
ஊரும்மைப் போற்றட்டும்
உலகமிதைக் கேட்கட்டும்.

நெருப்பையும் சுடும் நெஞ்சின் வேதனை என்ற தலைப்பில் செங்கனல் என்ற புனைபெயரில் தோழர் நக்கீரன் எழுதி 1985 இல் வெளியிட்ட கவிதை தொகுப்பிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் பேசும் மக்களுக்கு சுயாட்சி

## ஈ.பி.ஆர்.எல்.எவ் 25.02.1990 இல் முன்வைத்த 19 அம்ச திட்டம்

**தமிழர் இயக்கங்களிடையே சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தை அரங்கிற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வைத்த பிரேரணையின் முக்கிய பகுதிகள**



தமிழக முதல்வருடன் தோழர்கள் சாந்தன், க.பத்மநாபா, அ. வரதராஜப்பெருமாள்

முகவுரை:-

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வடக்கு கிழக்கு மாகாண அரசாங்கத்தை ஏற்றுக் கொண்டதானது.

(அ) ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களைப் பெறுவதற்காகவும்.


(ஆ) தமிழ் பேசும் மக்கள் பாதுகாப்புடனும் பயமின்றியும்.

வாழக்கூடிய வகையில் சட்டபூர்வமான முறையில் நிரந்தரப் பாதுகாப்பிற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவுமே ஆகும்.

இம் மாகாண அரசை உருவாக்குவதற்காகவும், சிறந்த முறையில் வளர்த்தெடுப் பதற்காகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் தனது 600க்கு மேற்பட்ட முன்னணி உறுப்பினர்களைத் தியாகம் செய்திருக்கிறது என்பதை அனைவரது கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறோம்.

ஸ்ரீலங்கா அரசு இம்மாகாண அரசிற்கு பல முட்டுக்கட்டைகளைப் போட்டு வந்த வேளையிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடூரமான வன்முறை எதிர்ப்புக்களுக்கும் மத்தியிலுமே இம்மாகாண அரசு கட்டியெழுப்பப்பட்டது என்பதனை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது எமது கடமை என்று கருதுகிறோம்.

ஒரு பக்கம் எல்லாவகையான எதிர்ப்புக்களையும் எதிர்நோக்கிக் கொண்டு மறுபக்கம் இந்த மாகாண அரசை ஏற்றுக் கொண்ட நாள்தொட்டு அதற்குரிய அதிகாரங்களைப் பெறுவதற்காக தொடர்ந்து விடாப்பிடியாகப் போராடி வந்திருக்கிறோம். ஆனால், ஸ்ரீலங்கா அரசாங்கமோ அதிகாரப் பரவலாக்கல் என்ற விடயத்தையும், இந்திய அமைதி காப்புப் படை இல்லாத சந்தர்ப்பத்திலும் தமிழ் பேசும் மக்கள் பாதுகாப்பு உணர்வோடு வாழ்வதற்குரிய நிலைமைகளை ஏற்படுத்தும் விடயத்தையும் அரசியல் அரங்கிலிருந்து முற்றாகப் பின்தள்ளி விடுவதற்கு சகல வகையான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. இவ் விடயங்களைப் புரிந்தும் புரியாதவர்கள் போல் நாம் இருக்க முடியாது.



மாகாண பொலிஸ் குடிமக்கள் தொண்டர் படை(CVF)

தமிழர்களின் கட்சிகளுக்கிடையில சமாதான சகவாழ்வை ஏற்படுத்துவதில் முயற்சிகள் எடுத்துவரும் தமிழக முதல்வரின் நல்ல நோக்கங்களை நாம் சந்தேகத்தின் கிடமின்றிப் புரிந்து கொள்கின்றோம் ஆனால், அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளும் அதன் ஒரு பகுதியாக இயங்கும் ஈழப் புரட்சி அமைப்பும் கடந்த காலங்களிலும் இன்றும் இத்தீவில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ள துரோகங்களையும், அரசியல் இராணுவ நாசகார வேலைகளையும் நாம் கவனத்தில் கொள்ளாதிருக்க முடியாது. தமிழ் பேசும் மக்களின் நலன்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கவனித்துக்கொள்வார்கள் என்று யார் கூறினாலும் அதனை நாம் ஏற்றுக்கொள்ளவோ நம்பவோ தயாரில்லை. ஆகையினால், இலங்கைத் தீவில் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் ஜனநாயக உரிமைகளுடனும், சுதந்திரமாகவும், சுயாட்சி அதிகாரங்களுடனும் வாழுவதற்குரிய நிலைமைகளை ஏற்படுத்தும் முகமாக திட்டவட்டமான அரசியல் தீர்வு ஒன்று முழுமையாகவும் முறையாகவும் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறுகிறோம்.

இலங்கை, இந்தியா என்ற இரண்டு நாடுகளுக்கிடையில் உருவாக்கப்பட்ட ஒரு ஒப்பந்தத்தையே நடைமுறையில் நிறைவேற்றாத ஸ்ரீலங்கா அரசாங்கம், தானாகவே சரியானதொரு அரசியல் தீர்வை தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கும் என நம்பவோ, ஏற்றுக்கொள்ளவோ தாயாராக இல்லை.

இதன் காரணமாகவே தமிழ் பேசும் மக்களின் எதிர்காலத்தையும், நல்வாழ்வையும் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் கருணாநிதி அவர்களினால் உருவாக்கப்பட்ட பேச்சு வார்த்தை அரங்கிற்கு எமது பிரேரணையை முன்வைத்து உண்மை நிலைமைகளைத் தெளிவுபடுத்தவும், தமிழக அரசினதும் இந்திய அரசாங்கத்தினதும், அனைத்துத் தமிழர் கட்சிகளினதும், அனைத்து ஜனநாயக அரசியல் தலைவர்களினதும் ஒத்தாசையையும் ஆதரவையும் கோருகின்றோம்

எமது பிரேரணை:-

இலங்கைத் தீவில் வாழுகின்ற தமிழ் பேசும் மக்கள் சமுதாயம் எதிர்நோக்கும் அரசியல் இராணுவ நெருக்கடிகளிலிருந்தும், சிங்கள இனவெறியின் கெடுபிடிகளிலிருந்தும் விடுபட்டுத தன்மானத்துடனும் சுய கௌரவத்துடனும் வாழ்வதற்கு ஒரு அரசியல் தீர்வுத திட்டத்தை முன் வைப்பது எமது நிகழ்கால வரலாற்றுக் கடமை என்று கருதி இப்பிரசசினையை தமிழக முதல்வரினதும், அனைத்து தமிழர் கட்சிகளினதும் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கோரி நாம் முன்வைக்கிறோம்.

(1) மாகாண அரசிற்கு இருக்கவேண்டிய அதிகாரங்கள் ஏற்பாடுகள் தொடர்பாகவும், தமிழ் பேசும் மக்களின் நிரந்தர பாதுகாப்பிற்காகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாகவும் தமிழர் கட்சிகள் அனைத்தினதும் கருத்தொருமித்த, தெளிவான, முழுமையான அரசியல் நிலைப்பாட்டுத் திட்டம் ஒன்றை உருவாக்குதல், தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் உருவாக்கியுள்ள இப்பேச்சுவார்த்தை அரங்கிலேயே அத்திட்ட வரைபும் உருவாக்கப்பட்டு பொது உடன்பாடு காணப்படுதல் வேண்டும்.

(2) அத்திட்டத்திற்கு தமிழக அரசின சார்பில் தமிழக முதல்வரும், இந்திய அரசாங்கத்தின் சார்பில் இந்தியப் பிரதமரும் தமது அங்கீகாரத்தை வழங்குதல வேண்டும்.

(3) இத்திட்டம் எந்தக் காலக்கெடுவுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை இந்திய அரசாங்கம் ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு ஒரு காலக்கெடுவாக விதித்தல் வேண்டும்.

(4) இத்திட்டத்தையும், காலக்கெடுவையும் ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுகின்ற பட்சத்தில் இந்திய அரசாங்கத்தின் பரதிநிதிகளும், (தமிழக அரசாங்கத்தின் பிரநிதிகள் உட்பட) ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் பிரதிநிதிகளும், தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளும் உள்ளடங்கிய ஒரு திட்ட அமுலாக்கல மேற்பார்வைக் குழு உருவாக்கப்பட்டு அது வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து செயல்படுதல் வேண்டும்.

(5) அத்திட்டத்தையோ அல்லது காலக்கெடுவையோ ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் அல்லது அக்காலக் கெடுவுக்குள் நிறைவேற்றாத பட்சத்தில் இந்திய அரசாங்கமானது சுதந்திர ஜனநாயக ஈழக் குடியரசை அங்கீகரித்து, அதனை ஸ்தாபிப்பதற்கும், பாதுகாப்பதற்குமான அனைத்து ஆதரவுகளையும், உதவிகளையும் வழங்குமென அறிவித்தல் வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல்:

அதிகாரப் பரவலாக்கல் என்பது குறைந்த பட்சம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

(1) அனைத்து விவகாரங்களிலும் இந்திய மாநில அரசுகளுக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களுக்கு குறையாத அளவு வடக்கு கிழக்கு மாகாண அரசிற்கு அதிகாரங்கள் பரவலாக்கப்படல் வேண்டும். நிர்வாக, நிதி உறவுகளும் இந்திய மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் உள்ள அளவிற்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

(2) வடக்கு கிழக்கு மாகாணம் எந்த சந்தர்ப்பத்திலும், எந்த வகையிலும் பிரிக்கப்படாதவாறு ஒரே மாகாணம் என்பது உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

(3) வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரசு நிலங்களும் வடக்கு கிழக்கு மாகாண அரசின் உரிமையின் கீழ் கொண்டு வரப்படல் வேண்டும். வக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து அரசு நிலங்களும், நில அபிவிருத்தி, நிலப் பகிர்வு, குடியேற்றத் திட்டங்கள் என்பன எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி வடக்கு கிழக்கு மாகாண அரசின் உரிமையாக்கப்படல் வேண்டும்.

(4) 1957ம் ஆண்டு பண்டார நாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்திற்குப் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்ட அத்தனை சிங்களக் குடியேற்றங்களும் சட்டவிரோதமானவை எனவும், கலைக்கப்படவேண்டியவை எனவும் நாம் கோருவது நியாயமேயாயினும் இலங்கையின் இனங்களுக்கிடையேயான உறவுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நியாயத்தின் காரணமாக சிங்களத் குடியேற்றங்கள் தொடர்பாக பின்வரும் தீர்வுகளை முன்வைக்கிறோம்.

(அ) 1977ம் ஆண்டு இந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி பதவி யேற்றதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அத்தனை சிங்களக் குடியேற்றங்களும் கலைக்கப்பட்டு அங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அவர்களது சொந்த மாகாணங்களுக்கோ அல்லது ஏனைய சிங்கள மாகாணங்களுக்கோ கொண்டு செல்லப்பட்டு குடியேற்றப்படல் வேண்டும்.

(ஆ) 1977க்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களுக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக வடக்கு கிழக்கு மாகாண எல்லையைப் புதிய எல்லை நிர்ணயம மூலம் மீள் ஒழுங்கு செய்யப்படுதலானது வடக்கு கிழக்கு மாகாணத்தின் தொடர்ச்சியையோ பாதுகாப்பான போக்கு வரத்தையோ பாதிப்பதாக இருத்தலாகாது பருத்தித்துறையிலிருந்து குமுக்கன் ஆறுவரை, முகத்துவார ஆற்றிலிருந்து திருகோணமலை வரை என்று இருக்கின்ற வடக்கு கிழக்கு மாகாணத்தின் எல்லை என்ற கருத்தில எவ்வித மாற்றமும் செய்யலாகாது.

(இ) வவுனியாவலிருந்து திருகோணமலை வரை, திருகோணமலையிலிருந்து புனானை வரை புகையிரதப் பாதை (ரெயில்பாதை) வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஊடாக மாகாணத்தின் உள்ளேயே இருக்கக்கூடிய வகையில எதிர்காலதில் அமைவதற்கு ஏற்பாடு செய்யும் வகையில் மாகாண புதிய எல்லை நிர்ணயம் ஆனது அமைதல் வேண்டும்.

(5) இப்போது ஸ்ரீலங்காவின் அரச படைகள் சிங்களப் படைகளாகவே உள்ளன. 32.000 பொலிஸாரில் 1.740 தமிழ் பொலிசாரும், 64,000 பேரைக் கொண்ட முப்படைகளில் 600 பேரளவிலேயே தமிழ் பேசும் படை வீரரும் உள்ளனர். இந்நிலையை மாற்றி பல இன மக்களைக் கொண்ட இலங்கையில், சிங்கள அரசு படைகளாக குணாம்ச ரீதியான மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவதற்கு அரச படைகளிலும், பொலிஸ் அமைப்புகளிலும் தமிழ் பேசும் மக்களின் இன விகிதாசாரத்திற்குக் கொள்ளப்படல் வேண்டும் மூன்று ஆண்டுகளுக்குள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே ஸ்ரீலங்கா அரசாங்கம் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஒப்புக் கொண்டு கையெழுத்தும் இட்டுள்ளது. எனவே, முதலாவது மூன்று மாதத்துக்குள் 25 வீதத்தினரையும், 1990ம் ஆண்டு முடிவதற்குள் அடுத்த 25 வீதத்தினரையும், 1992ம் ஆண்டு முடிவதற்குள் எஞ்சிய 50 வீதத்தினரையும் அரச படைகளில் இணைத்து 1993ம் ஆண்டு ஜனவரியில இலங்கையின் அரச படைகள் தேசியத் தன்மை கொண்ட அரச படைகளாக ஆகும் நிலையை உருவாக்குதல் வேண்டும். இதே நடைமுறை அமுலாக்கல் தேசிய பொலிஸ் அமைப்பிற்கும் பொருந்துதல் வேண்டும்.

(6) ஏற்கனவே பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவில் ஸ்ரீலங்கா அரசாங்கமானது. மாகாண அரசு 9,500 பொலிஸாரை மாகாணத்தின் இன விகிதாசாரம் பிரதிபலிக்கக்கூடிய வகையில் கொண்டிருப்பதற்கு ஏற்றுக் கொண்டுள்ளது. முதலாவது மூன்று மாதத்துக்குள் இதில் 50 வீதம் அமுலாக்கப்பட்டு 1990 ஆண்டு முடிவதற்குள் முழுமையான அளவில் மாகாணப் பொலிஸ் அமைப்பு செயல்படுதல் வேண்டும்.

(7) வடக்கு கிழக்கு மாகாணத்தில் பின்வரும் இடங்களில் மட்டுமே முப்படைகளினது முகாம்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

அ) பலாலி இராணுவ முகாம்.
ஆ) காரைநகர் கடற்படை முகாம்.
இ) தள்ளாடி இராணுவ முகாம்.
ஈ) வவுனியா யோசப் முகாம்.
உ) திருகோணமலை கடற்படைத் தளம்.
ஊ) திருகோணமலை விமானப்படைத் தளம்.
எ) அம்பாறை கொண்டை வெட்டுவான் முகாம்.

இவை தவிர்ந்த சகல முப்படை முகாங்களும் விலக்கிக் கொள்ளப்படல வேண்டும். சிவில் நிர்வாகத்தில் முப்படைகளின் தலையீடு மாகாண அரசின அனுமதியின்றி இடம்பெறலாகாது.

(8) வடக்குகிழக்கு மாகாணத்தின் நிரந்தர குடியிருப்பாளராகப் பதிவு செய்யப்படாத எவருக்கும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாக்குரிமை இருத்தலாகாது.

(9) இலங்கையில் சிங்களவர்கள் 73 வீதத்தினராக இருப்பதனால் பாராளுமன்ற முறையைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பறித்தல என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் சகஜமாகிப் போய்விட்ட ஒரு விடயமாகும். இந்நிலைமை இனியும் தொடரக் கூடாது. ஆகவே, பாராளுமன்றத்துக்கு அடுத்ததாக, இலங்கையிலுள்ள சிறுபான்மை இனங்களின் அரசியல், பொருளாதார, கலாச்சார, பாதுகாப்பு, உரிமைகளையும், நலன்களையும், பாதுகாப்பதற்காக இனங்களின் சமத்துவ பிரதிநிதித்துவத்தைக் கொண்ட இரண்டாவது சபை ஒன்று பாராளுமன்றத்தின் இனவிரோத சட்டவர்கங்களைத் தடைசெய்யும் வகையில் உருவாக்கப்படல் வேண்டும்.

(10) கோணேசர் ஆலயம் அமைந்துள்ள பிறெடறிக் கோட்டையிலிருந்து ராணுவம் வெளியேற்றப்பட்டு அக்கோட்டை இந்துக்களின் புனித பிரதேசமா

தொடர்ச்சி 23ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னிடம் மனம்விட்டுப் பேசிய முதற் போராளி




1985 முற்பகுதிகளில் மானிப்பாய் நவாலி ஆகிய இடங்களில் பல முகாம்களை அமைத்து தங்கியிருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ் மக்கள் விடுதலைப் படை அங்கத்தவர்கள் பலரில் தோழர் வேலு (மட்டக்களப்பு) வையே முதலில் சந்தித்து உரையாடினேன் அப்போது அவர் தான் இயக்கத்தில் இணைந்து கொண்டது பற்றியும் தனது ஆயுதப் பயிற்சிக்கால அனுபவங்கள், தான் பட்ட கஷ்டங்கள் இப்படி பல அனுபவங்களை பகிர்ந்துகொண்டார். அவர் பேசிய பல விடயங்களிலிருந்து அவரது போரியல் குணாம்சம், கல்வித்திறன் மக்களை அரவணைக்கும் திறன் இப்படி விஷேட குணங்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதன் விளைவாகவே அவரை மீண்டும் மீண்டும் சந்தித்து பேச என்னையும் தூண்டியது.

அழகிய தோற்றமும் கட்டான உடல் அமைப்பும் கொண்ட தோழர் வேலு சிறந்த இலங்கைக்கு வெளியே சென்று பயிற்சி பெற்று வந்து ஒரு பொறுப்பாளராக நவாலி முகாமொன்றில் இருந்தார். கிடைக்கின்ற உணவை எல்லோரும் பகிர்ந்து உண்டு மகிழ்ச்சியோடிருந்தவர். பொது மக்களுடனும் தனது சக போராளிகளுடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவம் கொண்ட தோழர் வேலு தனது கடமைகளிலும் நிதானமாக நடந்துகொள்வார். ஒரு முறை என்னுடன் பேசும் போது தனது தாய் தந்தையைப் பார்த்து 07 ஆண்டுகள் ஆயிற்று என தனது மனக்குமுறலையும் வெளிப்படுத்தினார்.

இரண்டு தடவைகள் தான் செய்த தாக்குதல்கள் வெற்றியளிக்கவில்லை இம்முறையும் காரைநகர் கடற்படை முகாம் தாக்குதலுக்கு செல்கிறேன். வெற்றியளிக்காவிடின் உயிருடன் இருக்கமாட்டேன் என உணர்ச்சி பொங்க சொன்ன தோழர் வேலு காரைநகர் கடற்படை முகாமிலேயே களப்பலியானார் அந்தத் தியாகியின் உருவம் இன்னும் என் முன நிழலாடுகிறது.

பெரியண்ணை

# எம் சமூகக்கனவுகள் உங்கள் நினைவுகளுடன்



தோழர் ரட்ணம் (யுவாம்சொய்சா) 1970களின் பிற்பகுதியில் தன்னை சமூக அரசியல் வாழ்வில் ஈடுபடுத்திக்கொண்டவர். மன்னார் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

கால்நடைமருத்துவ உத்தியோகஸ்தரான யுவாம் சொய்சா 1980களின் முற்பகுதியிலிருந்து மிக்கறுகிய காலத்திலேயே குறிபிடத்தகுந்த ஒரு வெகுஜன அரசியல தளத்தை மன்னார் மீனவக் கிராமங்களிலும் விவசாயப் புறத்திலும் ஏற்படுத்துவதில் உன்னதமான பங்களிப்பை நல்கியிருந்தார். மன்னார் வங்காலையில் ஒரு கல்விப் பாரம்பரியம் உண்டு. பெருமளவு இளம் அரச ஊழியர்களும் மாணவர்களும் தோழர் யுவாம்சொய்சா ரட்ணம் அவர்களால் வசீகரிக்கப்பட்டிருந்தார்கள். மன்னார் அப்போது மிகவும் பதட்டம் நிறைந்த பகுதியாகவும் வேலைசெய்வதில் மிகுந்த ஆபத்தை எதிர்நோக்க வேண்டியுமிருந்தது வங்காலை வண பிதா பஸ்ரியன் போன்றவர்கள் சுட்டுக்கொல்பட்டிருந்தனர்.

மிகுந்த அபாயகரமான சூழலில் வெகுஜனங்கள் மத்தியில் சமூகபொருளாதார விடுதலை பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் தோழர் ரட்ணம் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அதேவேளை அரசியல் இராணுவ பயற்சிகளுக்கென தோழர்களை தயார் செய்து அனுப்புவதிலும் ஈடுபட்டிருந்தார். கால்நடை வைத்திய உத்தியோகஸ்தர் என்றபடியால் அவர் சகல இடங்களுக்கும் சென்று வரக்கூடிய வாய்ப்பை நன்கு பயன்படுத்தினார்.

1980 இற்கும் அவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 1985ஆம் ஆண்டிற்குமிடையே அவர் மன்னார் பிராந்தியத்தில் ஏற்படுத்திய தளம் பிரமாண்டமானது. அவர் தனது வேலைகளூடாக ஒரு தலைவராக உருவாகிகொணடிருந்தார். தோழர்கள் தங்கிவேலை செய்வதற்கான தளம் சமூகத்தினுள்ளேயே உருவாக்கப்பட்டிருந்தது. 1980களின் நடுப்பகுதியில் முருங்கனில் பொதுமக்கள் பிரயாணம் செய்த பஸ் ஒன்றின் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இவரது மைத்துனர் ஒருவர் கொல்லப்பட்டார்.

1985 இல் படையினரால் கைதுசெய்யப்பட்ட தோழர் யுவாம் சொய்சா கடுமையான சித்திரவதைகளை அனுபவிக்க நேர்ந்தது.

கென்பாம் டொலர் பாம் பகுதியில் வசித்த சிங்களவர்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து வவுனியா யோசப் முகாமில் தடுத்து வைக்கபட்டிருந்த தோழர் யுவாம் சொய்சா உட்பட பல அரசியல் கைதிகள் கொல்லப்பட்டு விட்டனர். இவர் வதைமுகாமில் வைக்கப்பட்டிருந்த காலத்தில் இவருடன் லங்கா ராணி அருளரின் இளைய சகோதரரான தோழர்

தொடர்ச்சி 20ம் பக்கம்

# ஐக்கிய இலங்கை என்றால்.......

22ம் பக்கத் தொடர்ச்சி

கப் பிரகடனம் செய்யப்பட்டு வடக்கு கிழக்கு மாகாண அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும். அதே போல் யாழ்ப்பாணம் கோட்டை, ஊர்காவற்துறை கடற்கோட்டை ஆகியவற்றிலிருந்தும் இராணுவம், சிறைச்சாலை என்பன அகற்றப்பட்டு அவை அரும்பொருட்காட்சியகங்களாக அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படல் வேண்டும்.

(11) வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள ஆலயங்கள் தொடர்பான அனைத்து அரச அதிகாரங்களும் மாகண அரசிற்கு உரியதாக இருத்தல் வேண்டும்.

(12) புனர்வாழ்வு, புனர் நிர்மாணத்திற்காக வெளிநாடுகளும் மற்றும்

சர்வதேச நிறுவனங்களும் 550 மில்லியன் டாலர்கள் அளவில் உதவுவதற்கு ஒத்துக் கொண்டுள்ளனர். அத்துடன் ஸ்ரீலங்கா அரசாங்கமும் அவ்வுதவியில் 20 சதவீதத் தொகையை சேர்த்து வழங்குதல் வேண்டும். இவ்வாறு புனர்வாழ்வு, புனர்நிர்மாண நிதியாக இலங்கை ரூபாவில் 2.500 கோடி ரூபாய்கள் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கே சேருதல் வேண்டும். ஆனால் கடந்த கால எமது அனுபவத்தின்படி ஸ்ரீலங்கா அரசாங்கம் இவ்வுதவித் தொகைகளை சரியான முறையில் பயன்படுத்த முடியாதபடி செய்து வருவதோடு மிகவும் நுட்பமான முறைகளில் சிங்கள மாகாணங்களுக்கு அதனைத் திசை திருப்பியும் வருகிறது. ஆகவே, புனர்வாழ்வு, புனர்நிர்மாண உதவித்தொகை முழுவதும் வடக்கு கிழக்கு மாகாண அரசின் விருப்பத் தீர்மானிப்பின்கீழும், பயன்படுத்தும் அதிகாரத்தின்கீழும் கொண டுவரப்படுதல் வேண்டும்.

(13) மலையத்தில் வாழும் தமிழர்கள் ஸ்ரீலங்கா அரசினதும் சிங்கள இனவெறியர்களினதும் அடக்குமுறைகளுக்கும். ஒடுக்குமுறைகளுக்கும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக முகம் கொடுத்து வருகின்றனர். இவர்களில் ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் ஏற்கனவே இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட்டுவிட்டனர். எஞ்சியிருப்பவர்களோ எதிர்காலம் உறுதியற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பொருளாதார சுரண்டல்கள், புறக்கணிப்புக்கள், சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், சிங்கள இனவெறியர்களின் பலாத்காரமான கெடுபிடிகள் என்பனவற்றிற்கு மத்தியில் அரசியல் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். இந் நிலையை மாற்றுவதற்கு மலையகத்தில் மலையகத் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவகையில் ஒரு புதிய மாகாணமும், மாகாண அரசும் உருவாக்கப்படல் வேண்டும்.

அவ்வாறு ஏற்படுத்தப்படுகின்ற பட்சத்தில் அதேபோல கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணத்தை உருவாக்க தமிழர்கள் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

ஆகக் குறைந்த பட்சமாக இவ்விடயத்தில் நில உரிமை, பொருளாதார உரிமைகள், அடிப்படை அரசியல் உரிமைகள், சமய கலாச்சார உரிமைகள், கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் சமூக நலன்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கக்கூடிய வகையில் தீர்மானிக்கும் அதிகாரங்கள் கொண்டதாக மலையகத்தில் ஒரு தமிழர் சபையும், வடக்கு கிழக்கில் ஒரு முஸ்லீம்கள் சபையும் உருவாக்கப்படுதல் வேண்டும்.

(14) மாகாண அரசாங்கம் வெளிநாடுகளுடனோ அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடனோ முதலீடுகள், நன்கொடைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்படல் வேண்டும். அப் பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடிவடைகின்ற பட்சத்தில் அம்முடிவுகள் இலங்கை அரசின் பொதுவான வெளி நாட்டுக் கொள்கைகளுக்கும், சட்டங்களுக்கும் முரண்பாடதிருப்பின் அம்முதலீடுகளும் நன்கொடைகளும் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு தடையேதுமின்றிச் சேருவதற்கு சட்டபூர்வ நிர்வாக ஒழுங்கு முறைகள் ஏற்படுத்துதல் வேண்டும்.

(15) பொருளாதார பிரச்சார நிறுவனங்களை ஆக்குவதற்கும் நடாத்துவதற்கும் எவ்வகையான உரிமைகளை இலங்கையில் தனியார் நிறுவனங்கள் கொண்டிருக்கின்றனவோ, அவற்றிற்குக் குறையாத சட்ட பூர்வமான உரிமைகள் மாகாண அரசிற்கு இருத்தல் வேண்டும்

(16) அரசியல் சடத்தில் எஞ்சியிருக்கும் விடங்கள் தொடர்பான சட்டவாக்க நிறைவேற்று அதிகாரங்கள் மாகாண அரசுக்கு உரித்தாக இருத்தல வேண்டும்.

(17) இலங்கையில் தற்போது தங்கியிருந்து செயற்படும் மொசாட் பாக்கிஸ்தானிய, தென்னாபிரிக்க, பிரித்தானிய, அமெரிக்க இராணுவ உளவு படைகளும் எஸ்.ஏஎஸ், கே.எம்.எஸ் போன்ற சர்வதேசக் நிறுவனங்கள் படைகளும் உடனடியாக இலங்கையை விட்டு வெளியேற்றப் படல் வேணடும்.

(18) வடக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து விசேட அதிரடிப்படையினர் வெளியேற்றப்படுவதோடு, அவர்கள் எக்காலத்திலும் வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பப்படக் கூடாது என ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(19) இலங்கையில் நடைமுறையிலிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இல்லாதொழிக்கப்படுவதோடு. அவசரகாலச்சட்டம் நீக்கப்படுதல் வேண்டும். அதன் கீழ் கைது செய்யப்பட்டவர்கள், வழக்குத் தொடரப்படாமல் அனைவரும் சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படல் வேண்டும்.

இடைக்கால மாகாண அரசு

மேற்குறிப்பிட்ட 19 அடிப்படை அம்சங்களுக்கும் குறையாத அளவில் ஒரு விரிவான அரசியல் தீர்வுத்



திட்டம் தயாரிக்கப்பட்டு, இந்திய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, இலங்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவை நிறை வேற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற பட்சத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது பின்வரும் விடயங்களை மேற்கொள்ளுமென உறுதி கொள்கிறது.

(1) இப்போதிருக்கும் மாகாண அரசு ஒரு வருட காலத்திற்கு இடைக்கால அரசாக செயல்பட்டு 1991ம் ஆண்டு மார்ச் மாதத்தில் புதிய தேர்தல் ஒன்றை ஆயுதங்களற்ற ஜனநாயக பூர்வமான சூழலில நடாத்தலாம் எனக் கருதுகிறோம்.

(2) இப்போது மாகாண சபையில் தமிழர் கட்சிகள் கொண்டிருக்கும் 55 ஆசனங்களிலும் அனைத்துத் தமிழர் கட்சிகளும் பங்கு பற்றக் கூடிய வகையில் பகிர்ந்து ஒன்றிணைந்து செயற்படலாம் எனக்கருதுகிறோம். அது எவ்வாறு பகிரப்படலாம் என்பதனை தமிழக முதல்வரின் ஆலோசனைக்கே விட்டுவிட நாம் தயாராக உள்ளோம். தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் மட்டுமே தனிக்கட்சி ஆட்சி நடாத்த வேண்டுமெனக் கோருகின்ற பட்சத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தற்போது தாம் கொண்டிருக்கும் 38 ஆசனங்களையும் (இது மாகாண சபையில் தனிப் பெரும்பான்மை) விட்டுக் கொடுக்கவும் தயாராகவுள்ளது.

(3) தமிழர் கட்சிகளுக்கிடையே ஜனநாயகமும், சமாதானமும் சகஜ வாழ்வும் நிலவுவதற்கு தன்னால் முடிந்த அத்தனை ஒத்துழைப்புக்களையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வழங்கும்.

(4) அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விடயங்களையும், பாதுகாப்பு தொடர்பான விடயங்களையும், அபிவிருத்தி தொடர்பான விடயங்களையும் மாகாண அரசாங்கமே தலைமை தாங்கி அக்கறையெடுத்து செயல்படுத்த வேண்டுமென்பதனால் அவை தொடர்பாக புதிய இடைக்கால மாகாண அரசாங்கம் மேற்கொள்ளும் அத்தனை நடவடிக்கைகளுக்கும் எம்மாலான சகல ஒத்துழைபுக்களையும் வழங்குவோம்.

இதற்கு மாற்றாக நாம் எதிர் பார்ப்பது:

(அ) எந்தவொரு தமிழ் பேசும் மகனுக்கு எதிராகவும் எந்தவொரு கட்சியும் தான் தோன்றித்தனமாக சட்டபூர்வமற்ற முறைகளில் நடந்து கொள்வது நிறுத்தப்படல் வேண்டும்.

(ஆ) எந்தவொரு பிரஜையினதும் அடிப்படை சுதந்திரங்களாக பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கூடிச் செயல்படும் சுதந்திரம் ஆகியவற்றுக்கு எதிராக செயல்படுவது முற்றாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

(இ) இதுவரை காலமுமான நிலைமைகளின் காரணமாக தமிழ் கட்சிகள ஒன்றையொன்று நம்புவதற்கோ அல்லது தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியையோ, ஸ்ரீலங்கா அரச படைகளையோ நம்புவதற்கு தயாராக இல்லாத காரணத்தால். ஏனைய தமிழ்க்கட்சிகளாலோ அல்லது ஸ்ரீலங்கா அரசாங்கத்தினாலோ யாராவது தமிழர்கள் அல்லது முஸ்லீம்கள் தமக்கு உயிராபத்து உண்டு என்று கருதுகின்ற பட்சத்தில் அவர்களுக்கு இந்தியா அரசியல் தஞ்சம் வழங்க வேண்டுமென்று கோருகின்றோம்.

நிறைவுரை:

தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்விற்கும், நம்பிக்கையான எதிர்காலத்திற்கும் நாம் முன்வைத்துள்ள பிரேரணைகளின் அவசியத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியுமென கருதுகிறோம்.

நாம் ஏற்கனவே மேலே முன்வைத்துள்ள பத்தொன்பது அம்ச அடிப்படைகளுடன் அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விடயங்கள் உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்படுகின்ற அரசியல் தீர்வுத்திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் (அது தொடர்பாக இந்தியாவோ, தமிழக அரசோ, தமிழர் கட்சிகளோ ஒரு அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிக்காத பட்சத்தில்) இம் மாகாண சபையைக் கலைப்பதற்கும், புதிய மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கும் நாம் ஒத்துக் கொள்வதானது எமது கையைக்கொண்டே தமிழ் பேசும் மக்களின் தலையில் மண்ணை வாரிப் போடுவதற்கு ஸ்ரீலங்கா அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு நாம் துணை போவதற்கு சமமாகும் என உறுதியாக நம்புகிறோம்.

தமிழ் பேசும் மக்கள் கௌரவத்துடனும், தன்மானத்துடனும், சுயாட்சி அதிகாரங்களுடனும் வாழ்வதற்கும் தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்திலுள்ள கட்சிகளுக்கிடையில் சகஜ உறவை ஏற்படுத்துவதற்கும் இங்கு விதந்துரைக்கப்பட்டுள்ள பிரேரணையை காலத்தால் அவசியமானதென நாம் கருதுகிறோம் இதேவேளை, எந்தவொரு தமிழர் கட்சியும் நாம் குறித்துரைத்துள்ள பிரேரணைகளுக்கு குறையாத அளவில் முன்வைக்கும் பிரேரணைகளுக்கு எமது ஒத்துழைப்பை நாம் நிச்சயமாக வழங்குவோம். அதிகாரப் பரவலாக்கல், தமிழர்களின் நிரந்தரப் பாதுகாப்பு ஆகிய விடயங்களை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு இருக்கின்ற மாகாண சபையைக் கலைத்து புதிய தேர்தலுக்கு முயற்சிப்பதானது, ஒரு இருதய நோயாளியைக் கொலை செய்துவிட்டு சத்திர சிகிச்சை (அறுவைச் சிகிசசை) செய்ய முயற்சிப்பது போலாகிவிடும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரியும் இந்த ஸ்ரீலங்கா அரசாங்கமானது இந்த மாகாண சபையைப் பலப்படுத்துவதிலும், அதற்குரிய அதிகாரங்களைப் பெறுவதிலும், தமிழர்களுக்குரிய நிரந்தரப் பாதுகாப்பை ஏற்படுத்துவதிலும் நாம் எடுத்த அனைத்து முயற்சிகளையும் தனது அரசியல், இராணுவ, ராஜதந்திர நடவடிக்கைகள் மூலமும், பிரச்சார தந்திரங்கள் மூலமும் வெற்றிகரமாக முடமாக்கி விட்டதாகக் கருதக்கூடும். ஆனால், இலங்கைத் தீவில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும் ஜனநாயக உரிமைகளோடும் வாழுகின்ற நிலைமைகளை ஏற்படுத்த பல பத்தாண்டுகள் போரிட நேரிட்டாலும் அதனை ஏற்படுத்தியே தீருவோம் என்ற உறுதியுடனும் நம்பிக்கையுடனுமே நாம் செயல்பட்டு வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று தடம்பதித்த தோழர்கள் எம் நினைவுகளில்












தோழர்
ஜோசப்
சாவகச்சேரி



தோழர்
மதன்லால்
திருகோணமலை



தோழர்
லிங்கேஸ
மன்னார்




தோழர்
கிளி
வவுனியா



தோழர்
முத்து
புன்னாலைகட்டுவன்



தோழர்
கோபன்
மட்டக்களப்பு



தோழர்
ரவி
கல்வியங்காடு



தோழர்
ராசன்
காங்கேசன்துறை

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, ... C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org